உதயன்

கூ.வெ. 31 C
கு.வெ. 24 C
தெளிவு

சுடர் 30 | கதிர் 105 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 27. புதன்கிழமை 11.03.2015

## வருந்தினார் ரணில்!

புதுடில்லி, மார்ச் 11

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகமொன்றுக்கு வழங்கிய கருத்துத் தொடர்பில் மனம் வருந்தினார் என இந்திய வெளிவிவ கார அமைச்சர் சுஷ்மா சுவ ராஜ் தெரிவித்துள்ளார்.

இந்திய மக்களவையில் எதிர்க் கட்சியினரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துமீறி நுழைந்து இலங்கை கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்களைச் சுட்டுத்தள்ளுவதற்கு எங்களுக்கு சட்டம் அனுமதித்துள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தமிழகத்தில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையிலேயே பேச்சின் போது இது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போதே தான் தமிழக மீனவர்கள் குறித்து அவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்திருக்கக்கூடாது

பக்.24

## யாழ்.சிறையில் கைதி சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 11

குற்றச்சாட்டு ஒன்றில் யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

பக்.24

## சிப்பாயின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

மயிலிட்டி படைமுகாமில் பணியாற்றிய சிப்பாய் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதே முகாமில் பணியாற்றும் பதவிவெல ரன்தெனிகலவைச் சேர்ந்த அஜித்குமார (வயது-26) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பக்.24

# ஜெயக்குமாரி விடுவிப்பு

### நிபந்தனைகளுடன் கூடிய பிணையில்

## "மகனை தந்து விடுங்கள்"

யாழ்ப்பாணம், மார்ச் 11

"என்ர காணாமற் போன பிள்ளை வரவேணும். அவனை எப்படியாவது கண்டுபிடிச்சு தாங்கோ" – பிணையில் விடுவிக்கப்பட்ட ஜெயக்குமாரி கண்ணீர் மல்க நீதிமன்றத்துக்கு முன்பாக இவ்வாறு கோரினார்.

ஒரு வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி நிபந்தனைப் பிணையுடன் நேற்று விடுவிக்கப்பட்டார். அவர் நீதிமன்ற வாயிலினூடாக வெளியே வந்ததும், வெளியில் நின்றிருந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் அவரை ஓடிச் சென்று கட்டி ஆரத்தழுவினர். பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மனித உரிமைச்

பக்.24



யாழ்ப்பாணம், மார்ச் 11

தமிழீழ விடுதலைப்புலிகளை மீள ஒருங்கிணைக்க முற்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்கினார் என்ற குற்றச்சாட்டில், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த பாலேந்திரன் ஜெயக்குமாரி நேற்று நிபந்தனைப் பிணையுடன் விடுவிக்கப்பட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்டு, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மேலும் எட்டு பேரும் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு கோட்டை மேலதிக நீதிவான் அருணி ஆட்டிகல முன்னிலையில் ஜெயக்குமாரி நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டார்.

பக்.24

06.03.2014 - பளை-இத்தாவில் பகுதியில், அதிகாலை வேளையில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தமிழீழத்தின் காவலர்கள் என்று அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் மீட்கப்பட்டன. அதை ஒட்டிக் கொண்டிருந்தபோதே, அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

09.03.2014 - தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் கஜீபன் - கோபி என்பவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தேடப்படுபவராக அறிவிக்கப்பட்டார்.

11.03.2014 - தேடப்படுபவராக அறிவிக்கப்பட்ட கோபியின் மனைவி சர்மிளா திருகோணமலையில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உடனடியாகவே 4 ஆம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

13.03.2014 - கிளிநொச்சி தருமபுரம் பகுதியில், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது. அதில் பொலிஸார் ஒருவர் காயமடைந்தார் என்று கூறப்பட்டது. துப்பாக்கிச் சூடு நடத்தியவர், தேடப்படுபவராக அறிவிக்கப்பட்ட கோபி என்றும், ஜெயக்குமாரியின் வீட்டில் வைத்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். ஜெயக்குமாரியும் அவரது 13 வயது மகள் விபூசிகாவும் (பூப்பெய்தி இருவாரங்கள்) பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

14.03.2014 - கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் இருவரும் முற்படுத்தப்பட்டனர். விபூசிகாவை சிறுவர் இல்லத்துக்கு அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டது. ஜெயக்குமாரியை 18 நாள் பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதித்தது.

16.03.2014 - ஜெயக்குமாரி, விபூசிகா கைது தொடர்பில் உண்மை நிலையைக் கண்டறியச் சென்ற மனித உரிமை செயற்பாட்டாளர்களான ருக்கி பெர்னாண்டோ, அருட்தந்தை பிரவீன் மகேசன் ஆகியோர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

18.03.2014 - மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவரும் சர்வதேச அழுத்தத்தால் விடுவிக்கப்பட்டனர்.

20.03.2014 - தேடப்படுபவராக அறிவிக்கப்பட்ட கோபியுடன் இணைத்து தேவிகன், அப்பன் என்று மூவரையும் தேடுவதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸார் அறிவித்தனர்.

11.04.2014 – பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் தேடப்படுபவர்களாக அறிவிக்கப்பட்ட – விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்பவர்களாக கூறப்பட்ட – தேவிகன், அப்பன், கோபி மூவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று இராணுவம் அறிவித்தது.

16.12.2014 - ஜெயக்குமாரி பூஸா தடுப்பு முகாமிலிருந்து மகளின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

06.03.2015 - ஜெயக்குமாரியை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றத்தில் பிணை மனுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

10.03.2015 - ஜெயக்குமாரி நிபந்தனைப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.



மோடி கையளிக்கவுள்ள வீடுகளில் முடிவுறாதவற்றை அவசரமாக நிர்மாணிக்கும் இராணுவத்தினர்.

## ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 11

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் கையளிக்கப்படவுள்ள இந்திய வீட்டுத் திட்ட வீடுகளை அவசர அவசரமாக இராணுவத்தினர் நிர்மாணித்து வருகின்றனர். கீரிமலைப் பகுதியிலுள்ள பற்றைகளும் துப்புரவு செய்யப்படுகின்றன. அந்தப் பகுதியிலுள்ள வீதிகளும் வேகமாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு

பக்.24

## புதுக்குடியிருப்பில் இராணுவத்துக்கு 17ஆம் திகதி காணிகள் கையளிப்பு

### நடவடிக்கைகளை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முன்பாகவுள்ள பொதுமக்களின் காணிகள் எதிர்வரும் 17ஆம் திகதி, இராணுவத்தினரிடம் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படவுள்ளன. அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்று தெரியவருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களுக்குச்

பக்.24

## போராடிய ஆசிரியர்களுக்கு நேற்றுக் கிடைத்தது கடிதம்

### ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து இடமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

பிறமாவட்டங்கள், தீவகம் ஆகியவற்றில் 5 ஆண்டுகள் சேவைக்காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்கள் அவர்கள் விரும்பிய வலயங்களில் நியமனம் செய்யப்படுவர் என்பதை உறுதிப்படுத்தும் கடிதம் நேற்று ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

298 பேரின் பெயர்களை அடக்கி அந்தக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 54 ஆசிரியர்களும், வவுனியா தெற்கு வலயத்தில் 42 ஆசிரியர்களும், கிளிநொச்சி வலயத்தில்

பக்.24

## பேரவையினரை விலகுமாறு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

நாடளாவிய ரீதியில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் உள்ள பேரவை வெளிவாரி உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பக்.24

## பொறுப்புக் கூறாமல் தப்பமுடியாது அரசு

### இலங்கை விடயத்தில் மீண்டும் பிரிட்டன் பிரதமர் திட்டவட்டம்

லண்டன், மார்ச் 11

இலங்கையில் மக்களுக்கு இழைக்கப்பட்ட துயரங்களுக்கு பொறுப்புக் கூறப்படவேண்டும் என்ற விடயத்தை பிரிட்டன் ஒருபோதும்

பக்.24

## பனடோல் சிக்கி குழந்தை சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 11

பனடோல் மாத்திரை தொண்டையில் சிக்கியதால் குழந்தை ஒன்று மூச்சுத் திணறிப் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

அச்சுவேலியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே

பக்.24

# இலங்கையின் செயற்பாடுகள் ஐயப்பாடுகளை தோற்றுவிக்கும்

## இலங்கைக்கான சீனாவின் புதிய தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

சீன நிறுவனத்தின் முதலீட்டில் முன்னெடுக்கப்படுகின்ற கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இடை நிறுத்தப்பட்டமையானது இலங்கையின் புதிய அரசின் சர்வதேச முதலீட்டுக்கான அணுகுமுறை தொடர்பில் சர்வதேசத்தில் ஐயப்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடும். அதன் காரணமாக இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பாதிக்கப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் இலங்கைக்கான சீனாவின் புதிய தூதுவர் யீ ஸியாங்லியாங்.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் நேற்றுக்காலை நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக முதலீட்டு விடயங்களில் சில வேளைகளில் சில தொழில்நுட்பம்மற்றும்நடைமுறைப் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும். ஆயினும் அவற்றை இரு நாடுகளுக்குமிடையிலான ஒட்டுமொத்த அளவில் காணப்படும் சிறப்பான உறவுகளுக்கு முன்னுரிமையளித்து இருதரப்பினருக்கிடையிலான சிநேகபூர்வமான கலந்தாலோசனையின் மூலமாகத் தீர்க்க வேண்டும்." – என்று அவர் தெரிவித்தார்.

"இலங்கையின் நலன்களுக்கு பாதகமான வகையில் சீனா செயற்பட்டதாக எந்தவொருதரப்பிலிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கவில்லை. எமது நல்லெண்ணத்துக்கு இலங்கைத்தரப்பு தகுந்த முறையில் பதிலளிக்கும் என நம்புகின்றோம்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுகத் திட்டம் தொடர்பில் சீன நிறுவனம் உரிய முன் அனுமதியைப் பெறவில்லை என்று இலங்கை அரச தரப்பின் உயர்மட்டத்தில் இருந்து தெரிவிக்கப்படுகிறதே – என்று அவரிடம் வினவியபோது–

"எனக்குக் கிடைத்த தகவலின்படி உரிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு சாத்தியவள அறிக்கையைப் பெறாமை காரணமாகவே கொழும்புதுறைமுக நகரத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. நான் சட்டத்தில் முதுமாணி பட்டம் பெற்றவன். பல்வேறு சட்டநூல்களையும் வாசித்துள்ளேன். சட்டத்துறையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் விரிவுரையாற்றியுள்ளேன்.

நானறிந்த வகையில் சர்வதேச சட்டத்தில் ஒரு வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் திட்டத்தை முன்னெடுக்கின்றபோது எந்த நாட்டில் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றதோ அந்த நாட்டின் அரசே சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு சாத்தியவள அறிக்கையைப் பெறவேண்டும். அந்த விடயத்தில் அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். அரசு செய்ய வேண்டிய விடயத்தைதிட்டத்துக்கு முதலீடு செய்து அதனை முன்னெடுத்துச் செல்கின்ற நிறுவனத்தின் மீது போடுவது ஏற்புடையதல்ல."– என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு துறைமுக நகரத்திட்டம் ஒருவேளை கைவிடப்படுமிடத்து அது சீனாவுடனான ஏனைய உறவுகளிலும் தாக்கம் செலுத்தக்கூடுமா? என்று அவரிடம் வினவியபோது –

"துறைமுகத்திட்டம் இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே ஏற்கனவே என்னிடம் பலர் இதுதொடர்பில் வினவியுள்ளனர். புதிய அரசபதவியேற்றுள்ள நிலையில் சர்வதேச முதலீட்டுக்கான அதன் அணுகுமுறை தொடர்பில் ஐயப்பாடுகளை இது தோற்றுவிக்கக்கூடும். இதனால் இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் பாதிக்கப்படக்கூடும்."– என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் சீனாவின் நீர்மூழ்கிகள் வருவது தொடர்பில் வெளிப்படுத்தப்படும் கரிசனைகள் பற்றியும் இந்தியாவின் பிரதிபலிப்புக்கள் பற்றியும் என்ன கூறுகின்றீர்கள்? என்று அவரிடம் கேட்டபோது–

"சர்வதேச நியமனங்களுக்கு அமைவாகவே எமது நீர்மூழ்கிகள் இங்கு வருகைதந்தன. இங்கு வருகை தந்தபோது கொடிகளை ஏற்றிய வண்ணம் நீரின் மேலாகவே எமது நீர்மூழ்கிகள் வந்தன. நீரின் கீழாக வரவில்லை. இது சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டதே. இந்த விடயத்தில் ஒழிவுமறைவுகளுக்கு ஏதும் இடம்கிடையாது. இந்தவிடயத்தில் இந்தியத் தரப்புக்கு ஏதும் கரிசனைகள் இருக்குமானால் இதுகுறித்து இந்தியத் தரப்பினருடன் பேசுவதற்கு தயாராகவே இருக்கின்றோம்." – என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசு தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்–

"இன்னமும் சாதகமானதாகவே உள்ளது. அனைத்துவிடயங்களும் சுமுகமான முறையில் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. தற்போது கொழும்பு துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைநிலையானது வர்த்தக ரீதியானது. அது அரசியல் ரீதியானதல்ல. இருநாட்டினருக்கும் இடையிலான நட்புறவான கலந்துரையாடல் மூலமாக இதற்கு தீர்வு காணமுடியும் என நம்புகின்றோம்." – என்றும் தெரிவித்தார். (ந–சி)

# மூன்று கசிப்பு உற்பத்தி நிலையங்கள் சிக்கின

## தருமபுரம் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில்



யாழ்ப்பாணம், மார்ச் 11

தர்மபுரம் பொலிஸார் நேற்று மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கையில் மூன்று கசிப்பு உற்பத்தி நிலையங்கள் அழிக்கப்பட்டன. சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி எட்மன்மகேந்திரனின் ஆலோசனைப்படி தர்மபுரம் பகுதியில் உள்ள கசிப்பு விற்பனையாகும் இடங்கள், உற்பத்தி செய்யப்படும் இடங்களை தேடி பிடிப்பதில் தர்மபுரம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் எம்.எம்.டி.என் சதுரங்க தலைமையிலான 5 பேர் கொண்ட குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அவர்கள் நேற்று நடத்திய அதிரடி நடவடிக்கையிலேயே இந்த கசிப்பு உற்பத்தி நிலையங்கள் சிக்கியுள்ளன.

மற்றுமொரு கசிப்பு உற்பத்தி நிலையத்தை பிடிக்கச் சென்றவேளை ஒரு பரல் கசிப்பை விட்டுவிட்டு குற்றவாளி தப்பித்துச் சென்றுள்ளதாகவும். பிடிக்கப்பட்ட ஏனைய சந்தேக நபர்களை இன்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்தும் இவ்வாறான சட்டவிரோதமான செயல்களை தர்மபுரம் பகுதியிலே அனுமதிக்க முடியாது என்று தர்மபுரம் பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ந–21)

# கச்சதீவை மீட்பது மீனவர் பிரச்சினைக்குத் தீர்வாகாது

இராமேஸ்வரம் மீனவர்கள் பிரச்சினைக்கு கச்சதீவை மீட்பது தீர்வாகாது என்று சென்னை மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் அஜித் மேனன் தெரிவித்துள்ளார்.

பாக்கு நீரிணையில் அரசியல் சூழல் குறித்த கருத்தரங்கம் சென்னை அடையாறில் உள்ள சென்னை மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது வளங்களை இழந்து கொண்டிருக்கும் கச்சதீவை மீட்பதால் இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு போதுமான அளவு மீன்கள் கிடைக்காது. ஏனென்றால் இந்திய மீனவர்கள் பல நேரங்களில் இலங்கையின் மீன்பிடி எல்லையில் அதிக தொலைவுக்கு ஊடுருவிச் செல்கின்றனர்.

மீனவர்களே கச்சதீவை மீட்பது தங்கள் பிரச்சினைக்கு தீர் வாகாது என்று கருதுகின்றனர். மேலும், 20 சதவீத பிரச்சினைகளை மட்டுமே கச்சதீவை மீட்பதன் மூலம் தீர்க்க முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தியா கச்சதீவை மீட்பது என்பதற்கான சாத்தியம் மிகவும் குறைவு. அவ்வாறு கச்சத்தீவு இந்தியாவால் மீட்கப்பட்டாலும் மீனவர்கள் பிரச்சினை தீராது. – என்று அவர் கூறியுள்ளார்.

தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு இந்திய விசைப் படகு மீனவர்கள் இலங்கைப் பகுதியில் மீன்பிடிப்பதைத் தடுக்கும் வகையில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அந்நாட்டு அரசை இலங்கை வடக்கு மாகாண மீனவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். இலங்கையிலும் போட்டி அரசியல் நடைபெற்று வருவதால் புதிதாக அமைந்துள்ள அரசு, மீனவர்களின் வாக்கு வங்கியைத் தக்கவைப்பதற்காக பிரச்சினையை அவர்களுக்குச் சாதகமாகத் தீர்க்கவே முயலும்.

மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆழ்கடல் பகுதியில் மீன் பிடிக்குமாறு இந்திய மீனவர்களை மத்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கடந்த பட்ஜெட்டில் இதற்கான மானியம் குறைவாக அளிக்கப்பட்டதால், அந்த மாற்று நடவடிக்கையை இந்திய மீனவர்கள் கடைப்பிடிக்கவில்லை. எனவே நிகழாண்டு பட்ஜெட்டில் கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திருகோணமலைப் பகுதியில் கிழக்குப் பகுதியில் உள்ள கடற்கரையில் மீன் பிடிக்கலாம் என்பது மற்றொரு மாற்றுக் கருத்தாகும் – என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

# தனி நடிப்பு போட்டிக்கான அரங்கப் பயிற்சிகள்

யாழ். மாநகர சபையும், செயற்றிறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் தனி நடிப்புப் போட்டிக்கான தொடர் அரங்கப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் 11 பாடசாலைகளைச் சேர்ந்த 70 மாணவர்களுக்கு மூன்று களப் பயிற்சிகள் நடைபெற்றுள்ளன. யதார்த்த நடிப்பு, தனிமொழி, முகமூடி நடிப்பு, நிழல்கள் மற்றும் விசேட விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட நடிப்பு போன்ற விடயங்களின் அறிமுகப் பயிற்சிகள் இதில் வழங்கப்பட்டன.

நான்காவது களப் பயிற்சி எதிர்வரும் 12ஆம், 13 ஆம் திகதிகளில் திறந்த போட்டியில் பங்குபற்றுபவர்களுக்காக நடைபெறவுள்ளது. 14ஆம், 15ஆம் திகதிகளில் வேலணை மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் மற்றும் வல்லை சிவ குரு மகா வித்தியாலய மாணவர்களுக்கான களப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையில் முதலாம் சுற்றுப் போட்டிகள் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இறுதியாக ஏப்ரல் மாதம் 11ஆம், 12 ஆம் திகதிகளில் பிரமாண்டமான ஓராள் அரங்கத் திருவிழா நல்லூரில் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# பாணில் பீடித் துண்டு



பதுளை லுணுகல நகரிலுள்ள வெதுப்பகத்தில் இளைஞர் ஒருவர் வாங்கிய ஒரு இறாத்தல் பாணில் பீடித் துண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அந்த பீடி பாணுடன் வெதுப்பக உரிமையாளரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லுணுகல பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஹேமந்த பண்டார தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் பேக்கரி உரிமையாளர் மற்றும் பாண் கொள்வனவு செய்த இளைஞர் ஆகிய இருவரிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (த–10)

# வடக்கில் மட்டும் இந்தியா கவனம் செலுத்தக்கூடாது

## கூறுகிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, மார்ச் 11

இலங்கையில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்தில் மட்டும் இந்தியா கவனம் செலுத்தக் கூடாது. முழு நாட்டையும் ஒரே விதமாகவே பார்க்க வேண்டும் இவ்வாறு இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார் மின்சக்தி அமைச்சரான சம்பிக்க ரணவக்க.

அவர் மேலும் கூறுகையில்;

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யதார்த்தபூர்வமாகச் சிந்தித்து இலங்கையுடன் இணைந்து செயற்பட்டால் வர்த்தகம், தொழில்நுட்பம், அரசியல் விடயங்களில் இரு நாடுகளும் வெற்றி மேல் வெற்றி பெறும் நிலை ஏற்படும். இந்தியா இலங்கையை ஒருபோதும் தனது நாட்டின் பகுதியாக நினைக்கக் கூடாது. இலங்கையின் கலாசாரம் தனித்துவமுடையது. அது இந்தியாவை ஒத்தது கிடையாது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தியா ஆதரவு வழங்கியதன் மூலம் சிங்கள மக்களின் பெரும் வெறுப்பை சந்தித்தது. இதை இசை, சினிமா, கிரிக்கெட் மூலமாக மாற்றி விட முடியும் –என்றார். (சு)



# மோ.சைக்கிள் கம்பத்துடன் மோதி இளைஞன் படுகாயம்

வலி.வடக்கு, மார்ச் 11

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நடப்பட்டிருந்த வீதி அடையாளக் கம்பத்துடன் மோதியது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் மயக்கமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அளவெட்டியைச் சேர்ந்த எஸ்.தாசன் (வயது–19) என்பவரே விபத்துக்குள்ளானார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள சகோதரனைப் பார்வையிடச் சென்றபோதே விபத்து ஏற்பட்டுள்ளது.

அவர் மயக்கம் தெளியாத நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் மூலம் இடமாற்றம் செய்யப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ–86)

COMPUTING | 0777 692318
BCAS CAMPUS JAFFNA




13 லட்சங்கள் WOW !
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

# கிரிக்கெட் கொண்டாட்டம்

2015 மார்ச் 11 | புதன்கிழமை

# அயர்லாந்தை அடக்கியது இந்தியா

உலக்கிண்ண தொடரின் 5வது தொடர் வெற்றியாக அயர்லாந்தை 8 இலக்குகளால் இலகுவாக வீழ்த்தி இலகுவான வெற்றியுடன் தொடர்ந்து குழு 'பி' இல் அசைக்க முடியாத இடத்தில் நீடிக்கின்றது இந்தியா.

சந்தித்த சகல ஆட்டங்களிலும் வெற்றி. குழு 'பி'யில் முதலிடம். தொடர்ச்சியாக நான்கு வெற்றி. இவ்வாறான பல சாதனைகளோடு களமிறங்கியது இந்தியா. இந்தியாவை வென்றால் காலிறுதிக்காக மே.இ.தீவுகளுடன் தொடர்ந்து போரிடலாம் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது அயர்லாந்து. பெரும்பாலும் அயர்லாந்து தொடரை விட்டு வெளியேறும் என்ற பரவலான எதிர்பார்ப்புக்கள் மத்தியில் ஆட்டம் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றது அயர்லாந்து. முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானம். மிகச் சரியான தீர்மானம். தீர்மானத்துக்கு ஏற்பவே சிறந்த சராசரியில் சென்று கொண்டிருந்தனர் அயர்லாந்தின் ஆரம்பவீரர்கள். இணைப்பாட்டம் அரைச்சதத்தை எட்டி சீரான சராசரியில் சென்று கொண்டிருந்தது



இலக்குகள் விழுந்த பாடில்லை. அஸ்வினின் சுழலில் இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டது. ஸ்ரார்லிங் 42 ஓட்டங்களுடன் விடைபெற்றார். அயர்லாந்து 82–1. இடத்தை மட்டுமே நிரப்புவதற்காக வந்தார் ஜொய்ஸ் வேறு எதனையும் அவரால் செய்ய முடியவில்லை வந்த வேகத்தில் பவிலியனுக்குச் சென்றார். ஆபாட்டர்பீல்ட்டுடன் இணைந்தார் என்.பிரைன். மீண்டும் ஒரு சிறந்த இணைப்பாட்டம் அரங்கேறியது. 21வது பந்துப்பரிமாற்றத்தில் 100 ஓட்டங்களை கடந்து பயணித்துக்கொண்டிருந்தது அயர்லாந்து. அரைச்சதம் கடந்து விடைபெற்றார் போட்டர்பீல்ட். என்.பிரைனுடன் இணைந்தார் பல்பிர்ணி நான்கு இலக்குகளிலேயே அயர்லாந்து 200 ஓட்டங்களை எட்டியது. சிறிது நேரத்திலேயே என்.பிரைன் 75 ஓட்டங்களுடன் விடைபெற்றார். இப்பொழுது அயர்லாந்தின் மொத்த நம்பிக்கையும் கே.பிரைனில். கே.பிரைன் நிலைத்தால் 300 ஓட்டங்களை எட்டிவிடலாம் என்ற நிலைமை. ரசிகர்களின் நம்பிக்கையை போட்டுடைத்து 1 ஓட்டத்துடன் விடைபெற்றார். பின்வரிசை வீரர்களும் பெரிதாக நிலைக்கவில்லை பலர் பதின்ம ஓட்டங்களில் பவிலியனுக்கு திரும்பினர் முடிவில் அயர்லாந்து 49 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 259 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

260 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. வெற்றி நிச்சயம் ஆனால் எத்தனை இலக்குகள் வித்தியாசத்தில் எத்தனை பந்துப்பரிமாற்றங்களில் பெறப்படப்போகிறது என்பதில்தான் சுவாரஸ்யம். களத்தில் தவான் மற்றும் ரோஹித். சிறப்பான இணைப்பாட்டம். அதிரடியான ஆரம்பத்துடன் ஆரம்பமாகி ஓட்டங்கள் எகிறிப்பறந்து கொண்டிருந்தன. 14வது பந்துப்பரிமாற்றத்திலேயே 100 ஓட்டங்களை கடந்து இந்தியா விரைவாக இலக்கைநோக்கி பயணித்துக் கொண்டிருந்தது.

பக்கம் 04

## நீளும் சாதனைகள்



உலகக்கிண்ண அரங்கில் அதிக வெற்றிகளை குவித்த இந்தியத் தலைவர் என்ற கபில்தேவ்வின் சாதனையை நேற்றைய அயர்லாந்து ஆட்டத்தில் வென்றதன் பின்னர் டோனி தனது பெயருக்கு மாற்றி எழுதினார்.

1983இல் இந்தியாவுக்கு முதல் உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்தவர் கபில்தேவ். இவர் 1983,1987 என இரண்டு தொடர்களில் இந்திய அணிக்கு தலைமை தாங்கினார். இந்த இரண்டு உலகக்

பக்கம் 04

## மகிழ்ச்சியாக இருக்கின்றோம்

உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றது மகிழ்ச்சியாக இருப்பதாக, பங்களாதேஷ் அணியின் தலைவர் மோர்ரஷ்ஜு தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில், இங்கிலாந்தை எதிர்கொண்ட பங்களாதேஷ் அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்தத் தொடரிலிருந்து இங்கிலாந்து அணியை வெளியேற்றியதுடன், பங்களாதேஷ் அணி காலிறுதிக்குள் நுழைந்தது. இந்த வெற்றிக்கு பின்னர் அணித்தலைவர் மோர்ரஷ்ஜு கூறுகையில்,

பக்கம் 04

## வேதனையில் வெம்புகின்றது இங்கிலாந்து

பங்களாதேஷ் அணியுடான ஆட்டத்தில் இங்கிலாந்து தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. இந்தத் தோல்வி ஏமாற்றமானது என்று இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன் தெரிவித்துள்ளார்.

தோல்வி குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில், இந்த உலகக் கிண்ண தொடருக்கு வந்ததில் இருந்து நாங்கள் கடுமையாகப் போராடினோம். ஆனால் தொடக்கச் சுற்றிலேயே வெளியேறியது எங்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது.

பவுண்டரி எல்லை குறைவாக இருந்ததாலும், ஆடுகளம் நன்றாக விளங்கியதாலும் இலக்கை எட்டிப்பிடித்து விடலாம் என்று

பக்கம் 04

## ரகசியம் என்ன ?

இந்திய முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி, தனது பந்து வீச்சின் ரகசியம் குறித்து கூறியுள்ளார்.

ஷமி, உலகக் கிண்ணத் தொடரில் 4 ஆட்டங்களில் விளையாடி 12 இலக்குகளைச் சாய்த்துள்ளார்.

இந்த நிலையில் தனது வெற்றிக்கான காரணம் குறித்து ஷமி கூறியதாவது, அண்மையில் சொகைப் அக்தரிடம் பேசிக் கொண்டிருந்த போது, எனது ஓட்ட தூரத்தை குறைக்கும் டிப்ஸை அவர்தான் கொடுத்தார். அவரது அறிவுரையை பின்பற்றிய பிறகு வெற்றி மீது வெற்றி கிடைத்து வருகிறது. எனது பந்து வீச்சில் வேறு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஏனெனில், மாற்றம் என்பது இரு புறமும் கூரான வாள் போன்றது. சில நேரங்களில் நாம் விரும்பிய படி மாற்றத்தை தரும். சில நேரங்களில் சொதப்பவும் செய்யும்.

தற்போது லீக் சுற்றின் கடைசி ஆட்டங்களில் விளையாட நியூஸிலாந்துக்கு வந்துள்ளோம். இங்குள்ள மைதானங்களிலும், எனது வழக்கமான முறைப்படியே, பந்து வீச உள்ளேன். சரியான அளவில், சரியான உயரத்தில் பந்து வீசுவது மட்டுமே எனது குறிக்கோள் என்று கூறியுள்ளார். (5-ரி)

## சச்சினின் துடுப்பு மட்டுமல்ல அவரது எழுத்தும் 'பவர்'

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சினுக்கு உலகம் முழுவதும் தீவிர ரசிகர்கள் இருக்கிறார்கள். அந்தத் தீவிர ரசிகர்களில் ஒருவரான சுதிர் கவுதம் என்பவரை சச்சினின் கடிதம் காப்பாற்றியுள்ளது.

குடிவரவு சட்டங்களை இறுக்கமாகக் கொண்ட நாடு நியூஸிலாந்து, அந்த நாட்டிற்கு சுதிர் கௌதம் உடம்பு முழுவதும் சாயங்களை பூசிக்கொண்டு உலகக் கிண்ண ஆட்டத்தைக் காண்பதற்காக சென்றுள்ளார். அக்லாந்து விமான நிலையத்தில் களமிறங்கிய போது உடம்பில் மூவர்ண நிறம் பூசி, தலையில் இந்தியா போல முடியலங்காரம் செய்திருந்த கவுதமை மடக்கிப்பிடித்த அதிகாரிகள் அவரிடம் இருந்த பெயின்ட் போத்தல்களைப் பறிமுதல் செய்து ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டினால் தான் விடுவோம் என்று கூறியுள்ளனர்.

இந்த நிலையில், சச்சின் தனக்கு அனுப்பிய கடிதம் நினைவுக்கு வரவே

பக்கம் 04

## Picture Of The Day



| குழு A | வெ | தோ | ச.றி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 0 | 0 | 10 |
| ஆஸ்திரேலியா | 3 | 1 | 1 | 7 |
| பங்களாதேஷ் | 3 | 1 | 1 | 7 |
| இலங்கை | 3 | 2 | 0 | 6 |
| இங்கிலாந்து | 1 | 3 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 4 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 4 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.றி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 5 | 0 | 0 | 10 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 0 | 6 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 0 | 6 |
| அயர்லாந்து | 3 | 2 | 0 | 6 |
| மே.இ.தீவுகள் | 2 | 3 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 4 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 4 | 0 | 0 |

# அயர்லாந்தை அடக்கியது இந்தியா

சிறிது நேரத்திலேயே தவான் அரைச்சதம், தவான் சதம் கடந்து சிறிது நேரத்தில் ரோஹித் அரைச்சதம். இந்திய அணி 150 ஓட்டங்களை இலக்குகள் இழப்பின்றி கடந்தது. சரியான வாய்ப்புக்களில் வாணவேடிக்கைகளுக்கும் குறைவில்லை. 84 பந்துகளை எதிர்கொண்டு சதம் கடந்தார். இந்தியா 174 ஓட்டங்களை பெற்றிருந்த பொழுது ரோஹித் 64 ஓட்டங்களுடன் தவானைப் பிரிந்தார் ரோஹித். சிறிது நேரத்திலேயே ரோஹித்தின் வழியில் தவான் பயணித்தார். இந்தியா 190–2. களத்தில் ஹோக்லி மற்றும் ரஹானே. இறுதிவரை இவர்களை அயர்லாந்து வீரர்களால் பிரிக்க முடியவில்லை. முடிவில் 2 இலக்குகள் இழப்பில் 260 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் இலகுவான வெற்றியீட்டியது இந்தியா. (ரி–5)

2015 உலகக் கிண்ணம்

இந்தியா எதிர் அயர்லாந்து
8 இலக்குகளால் இந்தியா வெற்றி

நாணயச் சுழற்சி
அயர்லாந்து

அயர்லாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4' | 6' |
|---|---|---|---|---|---|
| போர்ட்டர்பீல்ட் | C யாதேவ் B சர்மா | 67 | 93 | 05 | 01 |
| ஸ்ரார்லிங் | C ரஹானே B அஸ்வின் | 42 | 41 | 04 | 02 |
| ஜோய்ஸ் | B ரெய்னா | 02 | 09 | 0 | 0 |
| என்.பிரையன் | C யாதேவ் B சமி | 75 | 75 | 07 | 03 |
| பல்பிர்னி | C சமி B அஸ்வின் | 24 | 24 | 03 | 0 |
| கே.பிரையன் | C டோனி B சமி | 01 | 02 | 0 | 0 |
| வில்சன் | C ரஹானே B ஜடேஜா | 06 | 07 | 01 | 0 |
| தொம்சன் | RO ஹோக்லி | 02 | 02 | 0 | 0 |
| மோனி | ஆட்டமிழப்பில்லை | 12 | 10 | 01 | 0 |
| டொக்ரெல் | C டோனி B யாதேவ் | 08 | 12 | 0 | 01 |
| குசாக் | C யாதேவ் B சமி | 11 | 13 | 01 | 0 |
| உதிரிகள் | | | | | 11 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| யாதேவ் | 04 | 34 | 0 | 01 |
| சமி | 09 | 41 | 03 | 0 |
| சர்மா | 06 | 38 | 01 | 0 |
| ஜடேஜா | 07 | 45 | 01 | 0 |
| அஸ்வின் | 10 | 38 | 02 | 01 |
| ரெய்னா | 10 | 40 | 01 | 0 |
| ரோஹித் | 03 | 21 | 0 | 0 |

TOTAL
259 (50)

1 - 89 (ஸ்ரார்லிங்)
2 - 92 (ஜோய்ஸ்)
3 - 145 (போர்ட்டர்பீல்ட்)
4 - 206 (பல்பிர்னி)
5 - 208 (கே. பிரையன்)
6 - 222 (வில்சன்)
7 - 226 (என்.பிரையன்)
8 - 227 (தொம்சன்)
9 - 238 (டொக்ரெல்)
10 - 259 (குசாக்)

இந்தியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4' | 6' |
|---|---|---|---|---|---|
| ரோஹித் | B தொம்சன் | 64 | 66 | 03 | 03 |
| தவான் | C போட்டர்பீல்ட் B தொம்சன் | 100 | 85 | 11 | 05 |
| ஹோக்லி | ஆட்டமிழப்பில்லை | 44 | 42 | 04 | 01 |
| ரஹானே | ஆட்டமிழப்பில்லை | 33 | 28 | 06 | 0 |
| உதிரிகள் | | | | | 19 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மோனி | 06 | 44 | 0 | 0 |
| குசாக் | 08 | 43 | 0 | 0 |
| தொம்சன் | 06 | 45 | 02 | 0 |
| டொக்ரெல் | 05 | 44 | 0 | 0 |
| ஸ்ரார்லிங் | 05 | 38 | 0 | 0 |
| கே. பிரையன் | 6.5 | 42 | 0 | 0 |

TOTAL
260/2 (36.5)

1 - 174 (ரோஹித்)
2 - 190 (தவான்)

ஆட்ட நாயகன் – தவான்

## மகிழ்ச்சியாக இருக்கிறோம்

இது பெருமைக்குரிய வெற்றியாகும். ஆடுகளம் நன்றாக இருந்தது. நாங்கள் நன்றாக பந்து வீசினோம். எங்களது பந்து வீச்சு தொடக்கத்தில் சரியாக அமையாவிட்டாலும், மத்திய வரிசைப் பந்துப் பரிமாற்றங்களில் சிறப்பாக இருந்ததுடன், இங்கிலாந்து அணிக்கு நல்ல நெருக்கடியும் கொடுத்தது.
தமிம் இக்பால் சிறந்த களத்தடுப்பாளர். கிரிக்கெட்டில் பிடியெடுக்கும் வாய்ப்புகள் நழுவுவது நடக்கத் தான் செய்யும். முடிவில் நாங்கள் வெற்றி பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார். (5–ரி)

## வேதனையில் வெம்புகின்றது

நினைத்தோம். எங்களுடைய எதிர்பார்ப்புக்கு தக்கபடி நாங்கள் சிறப்பான ஆட்டத்தை அளிக்கவில்லை. தொடக்கத்தில் வெளியேறியது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.
வெளியேற்றம் இன்னும் எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது. அடுத்து நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்பது எதுவும் தெரியவில்லை. உலகக் கிண்ணத்தை வெல் லும் திறமை கொண்ட அணியை தான் நாங்கள் தேர்வு செய்து இருந்தோம். ஆனால் நாங்கள் எங்களது திறமைக்கு ஏற்ப ஆற் றலை வெளிப்படுத்தவில்லை – என்றார். (5–ரி)



அதிகூடிய ஓட்டங்கள்

| | |
|---|---|
| 372 | சங்ககாரா (இலங்கை) 5 ஆட்டங்கள் |
| 333 | தவான் (இந்தியா) 5 ஆட்டங்கள் |
| 318 | வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |
| 295 | அம்லா (தென்னாபிரிக்கா) 5 ஆட்டங்கள் |
| 295 | ரெய்லர் (சிம்பாப்வே) 5 ஆட்டங்கள் |



அதிகூடிய இலக்குகள்

| | |
|---|---|
| 13 | போல்ட் (நியூசிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 13 | சவுத்தி (நியூசிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 12 | ஸ்ரார்க் (ஆஸ்திரேலியா) 4 ஆட்டங்கள் |
| 12 | விக்டோரி (நியூசிலாந்து) 5 ஆட்டங்கள் |
| 12 | சமி (இந்தியா) 4 ஆட்டங்கள் |

# நீளும் சாதனைகள்

கிண்ண தொடர்களிலும் மொத்தம் 15 ஆட்டங்களில், 11இல் வெற்றி தேடிக்கொடுத்தார். இவருடைய சாதனையே நேற்றுவரை உலக்கிண்ண தொடரில் அதிக வெற்றிகள் பெற்ற இந்திய அணித்தலைவர் என்று பதியப்பட்டிருந்தது.
1983ற்கு பின்னர் 2011இல் தற்போதைய இந்திய அணித் தலைவர் டோனி மீண்டும் இந்தியாவுக்கு கிண்ணம் வென்று கொடுத்தார். இவரது தலைமையில் 2011இல் இந்திய அணி பங்கேற்ற 9 ஆட்டங்களில் 7இல் வெற்றி பெற்றது. நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் தொடர்ச்சியாக 5 ஆட்டங்களில் வெற்றி பெற்றதன் மூலம் மொத்தமாக 14 ஆட்டங்களில் 12 ஆட்டங்களில் வெற்றி பெற்று கபில்தேவின் சாதனையை முறியடித்துள்ளார் தோனி.
இந்தியாவை விட உலக அளவில் மூன்றாவது சிறந்த தொடர் வெற் றித்தலைவர் என்ற சாதனையில் டோனி இணைந்துள்ளார். முதலாவது இடத்தில் ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங், இரண்டாவது இடத்தில் மே.இ.தீவுகளின் முன்னாள் அணித்தலைவர் கிளைவ் லாயிட் நீடிக்கின்றனர். ஓய்வு பெறாத அணித்தலைவர் களில் டோனி மட்டுமே அதிக வெற்றிகள் பெற்ற தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

## சச்சினின் துடுப்பு மட்டுமல்ல

உடனே அதை எடுத்து அதிகாரிகளிடம் காட்டியுள் ளார், இதனைத் தொடர்ந்து அதிகாரிகளும் அவரை விட்டுள் ளனர். (கவுதம் வெளி நாட்டு விசா வாங்கியதே அந்தக் கடிதத்தை வைத்துத்தான்)
இது குறித்து சுதிர்குமார் சவுத்ரி கூறுகையில், அபராதம் கட்டுமாறு கூறியதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது. இந்திய அணியின் தீவிர ரசிகன் நான், எங்கு சென்றாலும் இப்படித் தான் செல்வேன் என்று கூறியுள்ளார். (5–ரி)

## சிக்கலில் மோர்கன்

நடப்புஉலகக்கிண்ணத்தொடரின் இங்கிலாந்து அணிக்கு தலைவராக இருக்கும் இயன் மோர்கனுக்கு சர்ச்சைகள் மேல் சர்ச்சைகள் வந்த வண்ணம் உள்ளன. ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் தேசிய கீதம் இசைப் பதில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்ட அயர்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மோர்கன் பங்களாதே ஷுக்கு எதிரான ஆட்டத்தின் போது 'டக்' இல் வெளியேறி அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தார். இதனை அடுத்து மோர்கன் வேண்டுமென்றே இவ்வாறு நடந்து கொள்கின்றார். என்ற மாதிரியான குற்றச் சாட்டுக்கள் அவர் மேல் இங்கிலாந்து ரசிகர்களால் குவிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. பீற்றசன் புறக்கணிக்கப்பட்டமையும் மோர்கனுக்கு தலைமைத்துவம் கொடுக்கப்பட்டமையும் தவறு என்று கிரிக்கெட் பிரபலங்களும் உள்ளூர் ஊடகங்களும் கருத்து வெளியிட ஆரம்பித்துள்ளன.

# இங்கிலாந்தை மிரட்டிய ரூபெல் ஹூசைனின் மறுபக்கம்

உலகக் கிண்ண தொடரிலிருந்து இங்கிலாந்து அணி, பங்களாதேஷுடன் தோல்வியடைந்து வெளியேறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தவர், பங்களாதேஷ் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரூபெல் ஹூசைன்.
ரூபெல் ஹூசைன், இங்கிலாந்து அணியின் முக்கிய வீரர்களின் இலக்குகளை சரியான தருணத்தில் கைப்பற்றியதே, பங்களாதேஷ் அணி வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்தது.
பங்களாதேஷ் அணி நிர்ணயித்த 275 ஓட்டங்களை இங்கிலாந்து அணி விரட்டியது. இதில் இங்கிலாந்து அணி சார்பில் பெல், அரைச் சதம் கடந்து பலமான நிலையில் இருந்தார். இவரை ரூபெல் ஆட்டமிழக்கச் செய்தார். தொடர்ந்து நுழைந்த அணித் தலைவர் மோர்கனை ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ரூபெல் ஆட்டமிழக்கச் செய்திருந்தார்.
இதன் பின்னர் இறுதிக் கட்டத்தில், சிக்ஸர் அடித்து இங்கிலாந்து அணியின் பக்கம் வெற்றியை திருப்ப முயன்ற, புரோடை கடைசிப் பந்துப் பரிமாற்றத்திலும், அடுத்து நுழைந்த அண்டர்ஸனையும் ஆட்டமிழக்கச் செய்தவர் ரூபெல்தான்.
ஆனால் ரூபெல், கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதிதான், பாலியல் வழக்கிலிருந்து பிணையில் வெளிவந்திருந்தார்.



பங்களாதேஷ் சினிமா நடிகையான நஸ்னின் அக்தர் ஹேப்பிக்கும், ரூபெல் ஹூசைனுக்கும் இடையே காதல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம், நஸ்னின் ரூபேல் தன்னை காத லித்து வந்ததாகவும், திருமணம் செய்வதாக வாக்குறுதி அளித்ததால், இருவரும் கண வன்–மனைவி போல இணைந்து வாழ்ந்த தாகவும், ஆனால் திடீரென ரூபெல் தன்னை ஏமாற்றியதுடன் திருமணம் செய்ய மறுப்பு தெரிவிப்பதாகவும் கூறப்பட்டிருந்தது.
இதனையடுத்து உலகக் கிண்ண தொடருக்குத் தயாரான வேளை, ரூபெல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து கடந்த ஜனவரி 11 ஆம் திகதி டாக்கா நீதிமன்றம் அவரைப் பிணையில் விடுவித்தது குறிப்பிடத்தக்கது. (5–ரி)

# இங்கிலாந்து - பங்களாதேஷ் ஆட்டத்திலிருந்து...

✱ முகமதுல்லா விளாசிய 103 ஓட்டங்கள், உலகக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் வீரர் எடுத்த அதிகபட்ச ஓட்டங்களாகும். உலகக் கிண்ணத்தில் சதம் விளாசிய முதல் பங்களாதேஷ் வீரர் என்ற பெருமையும் அவருக்கு கிடைத்துள்ளது. நடப்பு தொடரில் ஸ்கொட்லாந்துக்கு எதிராக தமிம் இக்பால் 95 ஓட்டங்கள் விளாசி படைத்த சாதனையை முகமதுல்லா தகர்த்தார்.

✱ முகமதுல்லா முஷ்பிகுர் ஜோடி 141 ஓட்டங்கள் சேர்த்தது. உலகக் கிண்ணத்தில் பங்களாதேஷ் அணியின் அதிகபட்ச இணைப்பாட்டமாக அமைந்தது. அந்த அணிக்கு உலகக் கிண்ணத்தில் மூன்று முறை மாத்திரம் நூறு ஓட்டங்களைத்தாண்டிய இணைப்பாட்டம் அமைந்துள்ளது. இந்த மூன்றுமே நடப்பு தொடரில் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

✱ நடப்பு தொடரில் முஷ்பிகுர் ரஹீம் இதுவரை 256 ஓட்டங்கள் எடுத்துள்ளார். ஒரு உலகக் கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் குவித்த பங்களாதேஷ் வீரர் என்ற சாதனை அவருக்கு சொந்தமாகி உள்ளது. முன்னதாக, 2007 ஆம் ஆண்டு முகமது அஷ்ரபுல் 216 ஓட்டங்கள் சேர்த்திருந்தார்.

✱ இங்கிலாந்து அணித் தலைவர் இயன் மோர்கன் 2015 ஆம் ஆண்டு 4 ஆவது முறையாக டக்அவுட் ஆகி யுள்ளார். 1979 இல் மைக் பிரியர்லி 5 முறை 'டக் அவுட்' ஆகி முதலிடத்தில் உள்ளார்.

✱ கடைசியாக இங்கிலாந்து அணியுடன் மோதிய 4 ஆட்டங்களில் பங்களாதேஷ் 3 வெற்றியை பெற்றுள்ளது. அதற்கு முன் நடந்த ஆட்டங்களில் அந்த அணி தொடர்ச்சியாக 12 தோல்விகளை சந்தித்திருந்தது.

✱ கடந்த 6 உலகக் கிண்ணத்தில், இங்கிலாந்து அணி 3 ஆவது முறையாக முதல் சுற்றுடன் மூட்டை கட்டியுள்ளது. (5–ரி)



தல மறுபடியும் பச்சை சட்டைகாரங்களா?

## இந்தியா கிண்ணம் வெல்லும் கங்குலியின் பிந்திய கணிப்பு



இந்திய அணியின் ஆட்டம் ஆச்சரியமாக உள்ளது. அவர்கள் இவ்வளவு சிறப்பாக பந்து வீசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. அவர்கள் கிண்ணத்தை நிச்சயம் வெல்வார்கள். இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்திய பந்துவீச்சாளர்கள் அனைவரின் எதிர்பார்ப்பையும் தாண்டி அருமையாக விளையாடி வருகிறார்கள். ஷமி தொடர்ந்து சிறப்பாக பந்து வீசுகிறார். உமேஷ் யாதவும் தனது வேகத்தை அதிகரித்துள்ளார். மோஹித்தும் என்னை ஆச்சரியப்பட வைத்துள்ளார். அவர் ஒவ்வொரு ஆட்டத்திலும் தனது திறமையை மேம்படுத்தி அணியை சக்தி வாய்ந்ததாக ஆக்கிவிட்டார். நம் வீரர்கள் விளையாடும் விதத்தை பார்க்கையில் அவர்கள் உலகக் கிண்ணத்தை வென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றார். (5-ரி)

# ஓட்டோகிராப் போடக்கூடாது

இந்திய கிரிக்கெட் வீரர்கள் யாரும் ரசிகர்களுக்கு ஓட்டோகிராப் போடக்கூடாது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது.

கிரிக்கெட் மைதானத்தில் வீரர்களிடம், ரசிகர்கள் ஓட்டோகிராப் வாங்குவது வழக்கமாக நடக்கக் கூடிய விடயம். இந்த நிலையில் இதற்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவின் மூத்த விசாரணை அதிகாரி கே. எஸ். மாதவன் கூறுகையில்,

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்தும் ஐ.பி.எல்., ரி-20 உள்ளிட்ட ஆட்டங்களின்போது வீரர்கள் யாருக்கும் ஓட்டோகிராப் போடக் கூடாது என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வீரர்களிடம் ஓட்டோகிராப் வாங்குவது போன்று சூதாட்ட தரகர்களிடம், முக்கிய தகவல்கள் வழங்கக்கூடும். இதை தடுக்கவே இந்தப் புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு அரங்கில் முகவர்களை வைத்து அவர்கள், ஓட்டங்களைத் தெரிந்து கொள்கிறார்கள்.



இதனாலேயே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (5-ரி)

Tilko Jaffna City Hotel



TILKO JAFFNA CITY HOTEL
LUXURIOUS ROOMS
BANQUET HALL
SWIMING POOL
GYM & SPA
RESTAURANT
CONFERANCE HALL
FREE WIFI

### தினம் ஒரு பரிசுப் போட்டி 25

நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (13.03.2015) நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

........................................................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

தொலைபேசி இல.: ........................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (12.03.2015) மாலை 6 மணிக்குமுன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

### பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

....................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

....................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ....................

முகவரி. ....................

தொலைபேசி ....................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

### போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோபிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ. அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

### அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)....................  2)....................

3)....................  4)....................

பெயர்: ....................

தே.அ.அ.இல. ....................

முகவரி. ....................

தொலைபேசி ....................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு

### BCAS CAMPUS 5 லட்சம் ரூபாவுக்கான பரிசின் கூப்பன்

மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

....................

பெயர் ....................

தே.அ.அ.இல. ....................

முகவரி ....................

தொலைபேசி ....................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2½ லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1½ லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

MJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாத்தலைமை நிறுவனம்
இல. 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

லக்கி ரான்சிகவுஸ்
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
மொடோன்
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
கவிதா
350 பிரதான வீதி,பருத்தித்துறை.
கனன் போட்டோ
165 பிரதான வீதி பருத்தித்துறை.
சூரியா பாமசி
புதிய சந்தை,அச்சுவேலி.
நகுலன்
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
தாட்சாயினி ஸ்ரோர்ஸ்
3ஆம் சந்தி கொடிகாமம்.
தர்மலிங்கம்
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
கலைச்சோலை
இல 3,நவீன சந்தை வல்வெட்டித்துறை
அஞ்சலோ புக் சொப்
ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
மா வடி ஸ்ரீ முருகன்
முனாய் வீதி வட்டுக்கோட்டை.

தயாளன் ஸ்ரோர்ஸ்
பலாலி வீதி,கோண்டாவில்.
சிவசக்தி ஸ்ரோர்ஸ்
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
சிவன் ஸ்ரோர்ஸ்
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
தாஸ் ஸ்ரோர்ஸ்
திருநெல்வேலி.
ஓம் கணேசா
இல1,புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
பேரின்பநாதன்
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை
4, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்
14, விதானையார் வீதி சுண்டுக்குளி.

சுரேஸ் ஸ்ரோர்ஸ்
இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ் 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
சிவானந்தா கபே
செட்டி தெரு நல்லூர்.
ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்
சித்தங்கேணி வீதி,பண்டத்தரிப்பு.
புஸ்பநாதன்
பிரதான வீதி,சங்கானை
சசிலா தேவி அச்சகம்
சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
வானம்பாடி புத்தகநிலையம்
பிரதான வீதி சுழிபுரம்.
குலம் ஸ்ரோர்ஸ்
சந்தையடி மானிப்பாய்.
துர்க்கா புத்தகசாலை
பஸ்நிலையம் சுன்னாகம்.

கிருபா போட்டோ
கே.கே.எஸ்.வீதி மல்லாகம்.
பாக்கியா கொக்குவில்.
சிறிராம் கைதடி சந்தி.
பரம்ஸ்
நவீன சந்தை சாவகச்சேரி.
மணியம்
ஏ-9 வீதி சாவகச்சேரி.
அருள்நாயகி
ஏ-9 வீதி கொடிகாமம்.
கஜானன்
அல்லாரை வீதி,மீசாலை சந்தி.
அன்பரசன் புத்தகசாலை
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
உயர்ச்சி புத்தகசாலை
மல்லாவி.
கோமதி நெற்கபே
வெற்றிலைக்கேணி.
கே.பி.கே. புத்தகசாலை
24, பஸ் நிலையம் வவுனியா.

வன்னி பேபி நீட்ஸ் 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
சோமசுந்தரம்
ஏ-9 வீதி மாங்குளம்.
மோகன் பளை.
நகுலேந்திரன்
31ஆம் கட்டை முழங்காவில்.
ஜோதி புக்சொப்
பெரியகடை மன்னார்.
சிவசாந்தி உணவகம்
தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
நிரஞ்சனா தலைமன்னார்.
பூநகரி (எம்பிசிஎஸ்) பூநகரி.
டிலசிகா
124 கச்சன் வீதி வட்டக்கச்சி.
மகிழன் களஞ்சியம் தர்மபுரம்.
பொதிகை புக்சொப் 2ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
தாயன்பு உடையார் கட்டு.

சஜி புக் செப்
விசுவமடு.
வரணா புக்சொப்
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
வசீசனா புக் சொப்
குமரபுரம் பரந்தன்.
ராஜா தேநீரகம் உருத்திரபுரம்.
அபி புத்தகசாலை
பிரதான வீதி முல்லைத்தீவு.
ஸ்ரீ க ருணா மல்ரி சொப்
வரணி.
விநாயகர் களஞ்சியம்
அளவெட்டி.
சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்
வியாபாரி மூலை.
குகன் ஸ்ரோர்ஸ்
நவாலி.
நாகமுத்து ஸ்ரோர்ஸ்
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அரசு தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்குக் காணப்படும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாகச் செய்ய முடியும்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும். மேலிடத்தில் உங்கள் பெயர் அங்கீகரிக்கப்படும். வேலைகளை வெற்றிகரமாக முடிப்பதற்குத் திட்டங்களை வகுப்பீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கைத் துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. அடுத்தவர் செயல்கள் உங்கள் கோபத்தைத் தூண்டுவதாக இருக்கலாம். அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்:** இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். மற்றவர்களிடம் நன்மதிப்பு உண்டாகும். வீண் பேச்சைக் குறைப்பது நன்மை தரும். வாகனங்களை ஓட்டிச் செல்லும் போது கவனம் தேவை.

**சிங்கம்:** உடன்பணிபுரிவோர் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். அதே நேரத்தில் அவர்களால் செலவும் வரும். உங்களது முயற்சிகளுக்கு இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். கையில் காசு புரளும்.

**கன்னி:** நண்பர்களிடம் பகை ஏற்படலாம். பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். வீண் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக நேரிடலாம். எதிலும் திருப்தி இல்லாத மனநிலை இருக்கும்.

**துலாம்:** உங்கள் பேச்சு வெறும் பேச்சுப்போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் வார்த்தைகளைக் கோர்த்துப் பேசுவது நல்லது. உங்களது உடைமைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தனப் போக்கு காணாமல் போகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** செய்யும் வேலை பற்றி மனதில் திருப்தியற்ற எண்ணம் உண்டாகும். உழைப்பின் மூலமாக அனைத்து விதமான பாராட்டுகளையும் பெறுவீர்கள். மிகச்சரியாக திட்டமிட்டு காரியங்களைச் செய்தல் நன்மை பயக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் இருந்து வந்த மனவருத்த செயல்கள் மாறும். ஒருவருக்கொருவர் இருந்து வந்த கசப்புணர்வு நீங்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் தாமதமின்றி நடக்கும். குடும்பத்தில் நிலவிய மனவருத்தம் நீங்கி அன்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் பாராட்டுகளை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இல்லத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் பெயரும், புகழும் உயரும். பணியாற்றும் திறன் அதிகரிக்கும். மேலிடத்தால் உற்சாகப்படுத்தப்படுவீர்கள். புதிய பொறுப்புகளைப் பெறுவீர்கள்.





லேட்டஸ் வாகனங்கள்.
வாங்களேன் இதில ஒரு ரவுண்ட் போயிட்டு வருவம்...

## நவீன திருக்குறள் தொடர்ச்சி....

பட்டனைத் தடவும் மணற்கேணி,
மாந்தர்க்கு டச்ஸ்க்ரீன் தூறும் அறிவு...

முகநக நட்பது நட்பன்று, வாட்சப்பில்
அகநக நட்பது நட்பு...

மிஸ்ட் கோல் செய்தாரை ஒறுத்தல், அவர் நாண
கோல் செய்து பேசி விடல்...

ரேட் கட்டரோடு வாழ்வாரே
வாழ்வார், மற்றெல்லாம்
பில் கட்டியே சாவார்...

## டான் விண்கலத்தின் சாதனை

செரஸ் என்னும் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்து நாசாவின் 'டான்' விண்கலம் சாதனை படைத்துள்ளது. அதுமட்டுமன்றி கடந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டு வெஸ்டா எனும் சிறிய கிரகத்தை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விண்வெளியில் செவ்வாய் மற்றும் வியாழன் கிரகங்களுக்கு இடையில் பல ஆண்டுகளுக்கு முன்பு 'செரஸ்' எனும் சிறிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. நாசா விண்வெளி ஆய்வு மையம் கடந்த 2007 ஆம் ஆண்டு வெஸ்டா எனும் சிறிய கிரகம் மற்றும் செரஸ் கிரகம் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்வதற்காக 'டான்' விண்கலத்தை ஏவியது. கடந்த 8 ஆண்டுகளுக்குப் பிறகு, சுற்றுவட்டப் பாதையில் விண்கலம் நுழைந்தது. அப்போது அது அந்தக் கிரகத்தில் இருந்து 61 ஆயிரம் கிமீ தொலைவில் இருந்தது. செரஸ் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையில் நுழைந்த முதல் விண்கலம் என்ற பெயரை மட்டுமல்லாது, விண்வெளியில் உள்ள இரண்டு சிறிய கிரகங்களின் சுற்றுவட்டப் பாதையை அடைந்த முதல் விண்கலம் என்னும் பெருமையையும் 'டான்' பெற்றுள்ளது.





## நூதன ஸ்மார்ட் போன்

நூதனமான ஸ்மார்ட் போனை ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. ரன்சிபில் என்ற இந்த போன் வடிவமைப்பில் முற்றிலும் மாறுபட்டது.

மேசைக்கு வைக்கும் பாரக் குற்றி போல் வட்ட வடிவில் இது காட்சி அளிக்கிறது. இதன் மையத்தில் கமரா அமைந்திருக்கிறது. ஸ்மார்ட் போனில் பார்க்கக் கூடிய அலங்கார அம்சங்கள் இதில் கிடையா.

இது, அழைப்பு வந்திருக்கிறது, ஈமெயில் வந்திருக்கிறது என்றெல்லாம் ஒலி எழுப்பி எச்சரிக்கை செய்யாது. அந்தக் காலத்து பொக்கட் மணிக்கூடு அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த போன்தான் உலகின் முதல் வட்ட வடிவிலான போன்.

நமக்கு உதவுவதற்குப் பதில், சதா சர்வகாலமும் நம் வாழ்க்கைக்குள் ஊடுருவிக் கவனத்தைச் சிதைக்கும் நவீன ஸ்மார்ட் போன்களுக்கு மாற்று இந்த ரன்சிபில் என்று நிறுவனத்தினர் குறிப்பிடுகின்றனர். இந்த போன் மொசில்லாவின் பயர் பொக்ஸ் ஓ.எஸ்--ல் இயங்குகிறது.

இதன் பாகங்களை எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம். அப்டேட் செய்து கொண்டே இருக்கலாம் என்பதால் இது அவுட்டேட்டே ஆகாது. ஆண்டு இறுதியில் விற்பனைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலில் ஜப்பானில் அறிமுகமாக உள்ளது.



## குழந்தை நட்சத்திரமாக் ரோஜா மகள்

1990 ஆம் ஆண்டுகளில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்தவர் ரோஜா. 2002 இல் இயக்குநர் ஆர்.கே.செல்வமணியைத் திருமணம் செய்து கொண்டார். அதன்பிறகு ஆந்திர அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். தற்போது காங்கிரஸ் கட்சியின் மக்கள் பிரதிநிதியாக இருக்கிறார்.

இவரது மகள் அன்சுமாலிகாவுக்கு 12 வயது ஆகிறது. இவர் ரோஜாவுடன் இருக்கும் ஒளிப்படங்கள் அண்மையில் வெளிவந்தன. இதையடுத்து சினிமாவில் குழந்தைகள் நட்சத்திரமாக அறிமுகப்படுத்த இயக்குநர்கள் பலர் அணுகியுள்ளனர். ரோஜாவும் சம்மதம் தெரிவித்து விட்டதாக கூறப்படுகிறது. இதற்காக கதை கேட்டு வருகிறார். அன்சுமாலிகா ஏற்கனவே குழந்தைகள் பங்கேற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மண்டலாபிஷேக நவகுண்ட சகித நவோத்திர சகஸ்ர

# சங்காபிஷேக விஞ்ஞாபனம்

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத் தினுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்

**அம்பிகை மெய்யடியார்களே!**

ஸ்ரீ மத்தட்சன கைலாசம் என போற்றப்படுகின்ற இலங்கா துவீபத்தின் வடபால் யாழ்ப்பாணம் காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து 47 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று 48 ஆம் நாள் கும்பாபிஷேகமும் 49 ஆம் நாளான நிகழும் சுப மங்களகரமான ஜயவருடம் உத்தராயனம் மாசி 27 ஆம் நாள் (11.03.2015) புதன்கிழமை விசாக நட்சத்திரமும் பஞ்சமித்திதியும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு 1009 சங்காபிஷேகமும் பரிவார மூர்த்திகளுக்கு 109 சங்காபிஷேகமும் நடைபெற்று மாலை அம்பாள் வீதியுலா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அடியார்கள் யாவரும் கலந்து சிறப்பித்து அன்னை அருள்பெறுவீர்களாக.

## கிரியாகால விவரம்

மாசி 26 ஆம் நாள் நேற்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு விநாயகவழிபாடு, புண்யாக வாசனம் வாஸ்து சாந்தி விஷேட சந்தி பூதசுத்தி மிருத்சங்கிரகனம் அங்குரார்ப்பணம் ரட்சாபந்தனம், கடஸ்தாபனம், கும்பம், யாகசாலைப் பிரவேசம், தீபாராதனை, குரு உபசாரம் வழங்குதல், பிரசாதம் வழங்கல் ஆகியன நடைபெற்றன.

மாசி 27 ஆம் நாள் 11.03.2015 இன்று புதன்கிழமை காலை 8.00 மணிக்கு விநாயகவழிபாடு விஷேடசந்தி பூதசுத்தி யாகழகைகள் சங்குபூஜைகள் நவாக்னிவிபஜனம் விஷேட திரவிய ஹோமம் லலிதா சகஸ்ர நாமஹோமம் திரவிய அபிஷேகம் மஹா பூர்ணாகுதி விஷேட தீபாராதனை வேதஸ்தோத்திர திருமுறை பாராயணம் மங்கள வாத்திய சகிதம் கும்பங்கள் வீதியுலா சங்காபிஷேகம் விஷேட பூஜைகள், மகேஸ்வரபூஜை, மாலை 6.00மணிக்கு பூஜை 8.00 மணிக்கு வசந்த மண்டபபூஜை அம்பாள் வீதியுலா வருதல் திருவருட் பிரசாதம் வழங்குதல் நடைபெறும்.

## குருமார் விவரம்

வேதசிவாகம ஜோதிட சிகாமணி சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் - நீராவியடி
சிவாகமசாகரம் சிவஸ்ரீ சு. முரளிதரக்குருக்கள் - அரியாலை
ஈசானசிவாச்சார்யார் சிவஸ்ரீ நா. பாலஸ்கந்தரூபக்குருக்கள் - காரைநகர்
சங்கீத சாகரம் சிவஸ்ரீ சி. மங்களேஸ்வரக்குருக்கள் - காரைநகர்
சகலகலாவித்தகர் சிவஸ்ரீ இ.ஜெயபாலக்குருக்கள் - அச்சுவேலி
சிவாச்சார்ய சிரோன்மணி சிவஸ்ரீ இ. உலகேஸ்வரக்குருக்கள் - மாதகல்
சங்கீதகான விநோதன் சிவஸ்ரீ நா. சண்முகநாதக்குருக்கள் - வவுனியா
சிவாச்சாரிய சிரோன்மணி சிவஸ்ரீ ச.சந்திரகுமாரக்குருக்கள் -கல்வியங்காடு
சிவாகம சிரோன்மணி சிவஸ்ரீ சி. அகிலேஸ்வரக்குருக்கள்

சிவாகம பூசணம் சிவஸ்ரீ S. சுகுமாரக்குருக்கள் - சுன்னாகம்
சிவாகமஜோதி சிவஸ்ரீ ர.ஜெயராஜக்குருக்கள் - சங்கானை
சிவாச்சார்யமணி.சிவஸ்ரீ அ.பத்மரூபக்குருக்கள் - சங்கானை
சிவாகம சிகாமணி சிவஸ்ரீ சி. சிவசங்கரக்குருக்கள் - குருநாகல்
சாதக பூசணம் சிவஸ்ரீ மு. குருபரக்குருக்கள் - வடகோவை
சிவாச்சார்யமணி சிவஸ்ரீ .இ.பரமேஸ்வரக்குருக்கள் - மட்டுவில்
சிவாகம பூசணம் சிவஸ்ரீ வி. புஸ்பராஜக்குருக்கள் - கட்டுடை
சிவாச்சாரியமணி சிவஸ்ரீ வி. கலாதரக்குருக்கள் - உரும்பிராய்
சிவாகம பூசணம் சிவஸ்ரீ S. கஜராஜக்குருக்கள் - மாதகல்

## சர்வ சாதகர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சாதகவிற்பன்னர்<br>பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா<br>இணுவில். | சாதகசூடாமணி<br>சிவஸ்ரீ பா. பாலகணேசக்குருக்கள்<br>நயினை | சாதக இளவரசு<br>பிரம்மஸ்ரீ ப.சனாதனசர்மா<br>மட்டுவில் | சாதக இளஞ்சுடர்<br>பிரம்மஸ்ரீ கு. ராசன்சர்மா<br>உடுவில் | சாதகமணி பிரம்மஸ்ரீ<br>கு.சரவணபவானந்தசர்மா<br>காரைநகர் |

## யாக சம்ரட்சகர்கள்

பிரம்மஸ்ரீ பா. சாந்தரூபசர்மா - நீராவியடி
பிரம்மஸ்ரீ பா. பாலகணேசர்மா - நீராவியடி
பிரம்மஸ்ரீ S. கஜீபன்சர்மா - காரைநகர்
பிரம்மஸ்ரீ S. நிமல்சர்மா - காரைநகர்
பிரம்மஸ்ரீ தேவ. நாயகன்சர்மா - வவுனியா
பிரம்மஸ்ரீ பாரதிசர்மா - தெல்லிப்பழை
பிரம்மஸ்ரீ ச. ஹரிசர்மா புத்தளம்
பிரம்மஸ்ரீ K. நிரோசன்சர்மா - கோண்டாவில்
பிரம்மஸ்ரீ K. சங்கர்சர்மா - உரும்பிராய்
பிரம்மஸ்ரீ மு. காந்தன்சர்மா - காரைநகர்
பிரம்மஸ்ரீ M. நாகேந்திரசர்மா - காரைநகர்

| | | | | |
|---|---|---|---|---|
| மங்களவாத்தியம்<br>லயஞானகரர் காரை கணேசன்<br>சந்திரபிரியன் குழுவினர்<br>காரைநகர். | ஒலி ஒளி<br>S. மயூரன்<br>களபூமி<br>காரைநகர் | யாக அலங்காரம்<br>தேவ அலங்காரம்<br>பூமாலை அலங்காரம்<br>சு.பாலசுப்பிரமணியம் - இணுவில் | தளபாடம்<br>சு.சிவநாதன்<br>மூளாய் | மண்டலப்பூர்த்தி விழா உபயம்<br>S.V.முருகேசு நிறுவனம்<br>S.V.M.குணரத்தினம் |

மின்னொளியால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் சுவாமி வீதி உலா வருவார்

குறிப்பு: அடியார்கள் பால், தயிர், இளநீர், பூக்கள், பத்திரங்கள் என்பவற்றைக் கொடுத்து அம்பாளின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

"அடியார்கள் அனைவரும் வருக அன்னை அருள் பெறுக"
"அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

விசேட மேளக் கச்சேரி
வீராச்சாமி புதல்வர்கள்
காரைநகர்
சித்தார்த்தன் குழுவினர்
சாவகச்சேரி

**பாலாவோடை களபூமி,**
**காரைநகர்.**

அம்பாள் சேவையில்
ஆலய அறங்காவலர் சபை
தொ.பே. 021 320 2764, 077 854 6610.

**அனுசரணை:**
S.V.முருகேசு (M.குணரத்தினம்) 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8899

பிரசங்கம்: அம்பிகையின் பெருமை பற்றி விரிவுரை ஆற்றுபவர்
கு.பாலசண்முகன்
சுரவாமி ஜாக்கிரத் சைத்தன்யா - சின்மயா மிசன்.

(51877)(10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள்

**சண்முகசுந்தரம் (குட்டி)**

(ஓய்வூதியர் - வலிமேற்கு பிரதேசசபை, உப அலுவலகம், சங்கானை)

அன்னை மடியில்
19 . 01 . 1948

ஆண்டவன் அடியில்
20 . 02 . 2014



திதி :
அபரபக்க சஷ்டி
(11.03.2015)

அப்பா .... அப்பா.... அப்பா.... இப்படி
காற்றில் தான் சத்தமிட முடிகிறதே - தவிர
கண்ணெதிரே நீங்கள் இல்லையேயப்பா!
என்னுடைய உச்சரிப்பு அகராதியிலிருந்து
உதிர்ந்து விட்டது அப்பா என்ற சொல்.

நம்பிக்கையிருக்கின்றது பஞ்சபூதங்களில் கலந்த உங்கள் அஸ்தி
இவ் வண்டம் எல்லாம் வியாபித்து எம்மை வாழ வைக்கும்.
நீர் இறந்துவிட்டதாக இவ்வுலகமே பிதற்றினாலும் - எங்கள்
செல்ல அப்பா எங்களுடனே உயிரோடும் அறிவோடும் வாழ்ந்து
கொண்டிருக்கிறீர்களே...

நீங்கள் இருக்கும் இடத்தில் தான் இறைவன் இருக்கின்றான்.
கோயில் வேண்டாம் அப்பா - நான் இனி எடுக்கும் பிறவியில்
உங்களைக் குழந்தையாய் சுமக்க வேண்டும் - எங்கள் செல்ல
அப்பாவே!

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி... !!!

எமது குல தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வியாபாரி மூலை இன்பர்சிட்டி சித்தி விநாயகர் பாதார விந்தங்களைப் பிரார்த்திப்போமாக!

அரசடி வைரவர் கோவிலடி,
சங்கானை. (077 241 9078) (57629)(5.3.7)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை.



## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
15 . 03 . 1939



அமரத்துவம்
11 . 03 . 2009

அமரர்

**வயிரமுத்து குலசிங்கம்**

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை)

அன்பின் திருவுருவே பாசத்தின் பிறப்பிடமே
உங்கள் ஆசை முகம் காண
துடியாய்த் துடிக்கின்றோம் ஐயா
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்ததுவோ
என்னவென்று சொல்வோம் ஐயா
எம்மை எல்லாம் தவிக்க விட்டு
ஓடி மறைய எப்படித்தான்
உங்களுக்கு மனம் வந்தது ஐயா
உங்களை வந்து சேருமட்டும்
ஏங்கி நிற்கும் மனைவி

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

Mrs.S.Kulasingam
London
11.03.2015

அன்பு மனைவி,
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மைத்துனிமார்.

(57505)(4.3.7)


## வதிவிடச் செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 11

இசுறுபாய கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தரம்–6 தொடக்கம் தரம் 11 வரை சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தைக் கற்பிக்கும் யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான வதிவிடச் செயலமர்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமாகி 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறைப் பணிப் பாளர் அபயரட்ண அறிவித் துள்ளார். இந்தச்செயலமர்வில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் போன்ற 5 கல்வி வலயங்களிலும் சுகாதாரமும் உடற்கல்வி பாடத்தைக் கற்பிக்கும் 100 ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–422)

## சுனாமி ஒத்திகை

யாழ்ப்பாணம், மார்ச் 11

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். மாவட்டத்தில் உடுத்துறை, மணற்காடு, வல்வெட்டித்துறை, சுப்பர்மடம், நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள முன்னெச்சரிக்கை கோபுரங்களை இன்றும் நாளையும் பரிசோதனை செய்ய வேண்டியிருப்பதால் இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது பரீட்சார்த்த செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

சுன்னாகம் பூந்தோட்ட ஞான வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை 108-சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (வ)


## இதய அஞ்சலிகள்



அமரர்

**சண்முகநாதன் கந்தகுமார் (கந்து)**

மீளாவூருக்கேன் நீ சென்றாய்.
தாயகம் காணவென்றே
தாளா ஆசையொடு வந்தாய்
காதலினால் கூடி மகிழ்ந்து
நீடுவாழ இருந்தோம் நாம்
நண்பா எமக்கு மீளவொணா துயர்தந்து
மீளாவூருக்கேன் நீ சென்றாய்!
தோழமையொடு எமக்கு
தோள் கொடுப்பார் யாரினி?
அஞ்சலித்தோம் சாந்தி கொள்க.

வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கம்- கொழும்பு கிளை
வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கம்-கனடாக்கிளை
வட்டுக்கோட்டை இந்து வாலிபர்-ஆஸ்திரேலியா கிளை. (சி/19853)(4.3.7)

# இன்று (11.03.2015) புதன்கிழமை
# பவளவிழாக் காணும் நாயகன்
# பேராயர் கலாநிதி S.ஜெபநேசன் அவர்களின்
# பவளவிழா சிறப்பிதழ்



தென்னிந்திய திருச்சபையின் இளைப்பாறிய ஆயர் மேதகு எஸ். ஜெப நேசன் ஆண்டகையின் பவள விழாவில் வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் இறை ஆசிரையும் வேண்டுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தென்னிந்திய திருச்சபையின் மூன்றாவது ஆயராக 1993 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை அமைதியாக அளப்பரிய பணிகளை ஆற்றிய இவர் என்றும் பாராட்டுக்குரியவர். இவரின் ஆற்றலையும் அறிவையும் அனுபவத்தையும் வளமாக்கவும் இவரின் பணியை மேம்படுத்தவும் இவர் பணியாற்றிய பணித்தளங்கள் இவ ருக்கு பெரும் துணை புரிந்துள்ளன.

1962 ஆம் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் ஆரம்பமாகிய இவரின் ஆசிரியப்பணி 1969 இல் யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் 1988 இல் அதன் அதிபராகவும் 1993 இல் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயராகவும் பணியேற்க வழிசெய்துள்ளது.தலைசிறந்த கல்விமானாக சிறந்த பேச்சாளராக சிந்தனை மிக்க எழுத்தாளராக இவர் விளங்கி வருகிறார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்ட இவர் அந்தப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1992 ஆம் ஆண்டு முதல் பலகாலம் பணியாற்றி வந்துள்ளார்.இவரின் பவளவிழாவில் இவரை வாழ்த்தி பாராட்டி மகிழும் அனைவரோடும் எமது வாழ்த்துக் களையும் இணைத்து இவர் தொடர்ந்தும் நற்பணியாற்ற இறைவன் இவருக்கு நற்சுகத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்க வாழ்த்துகின்றோம்.

நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே திருச்சபையில் கிறிஸ்து யேசுவழியாக என்றும் மாட்சி உரித்தாகுக.

பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## Greetings from the Bishop of Colombo- Church of Ceylon The Rt. Revd. Dhiloraj Ranjit Canagasabay



It gives me much pleasure to address this message of greetings and felicitation to Rt. Rev. Dr.subramaniyam Jebanesan, Bishop emeritus of the Jaffna Diocese of the Church of South India as he Celebrates his 75th birthday.Bishop Jebanesan is well known as an Educationalist, having been Principal of Jaffna college, a man of great learning and a lover of Tamil Culture .I convey my warm greetings and best wishes to Bishop Jebanesan on this happy occasion and pray for God's Continued blessings on him as he continues his pilgrimage.




உன்னதத்தின் ஒளிவிளக்கும்
உயர்வான மெய்ப்பொருளே தன்நிகர்கொள்
தத்துவத்தின் தரமான தமிழ்ப்பாரேலே!
இன்சொல்சேர் வார்த்தைநலம் இறையருட்சீர்
பெற்றவரே பொன்நிகர்த்த பொறுமைசெயல்
பொலிந்ததமிழ்ப்
பேராயர் கன்னலென்போம் ஜெபநேசன்
கருத்தோங்கும்
சொல்செயல்கள் இன்னுமின்னும் பல்லாண்டு இறைபணியும்
சேவைவளம்
நன்நிலத்தே நிலைத்தோங்கி நலம் பெருக்கிவாழ்ந்தோங்கீர்!
அருட்பணியின் மகிமையதால்
அன்பறிவு ஆற்றல் பெற்றீர்!
இருள்விலக்கும் இறைபதத்தின்
ஏற்றமருள் எடுத்துரைப்பீர்! வரும் போகும் பொன் அழியும்
வார்த்தைகளோ வழிகாட்டும் நறுந்தமிழின்
நயமுணர்த்திநாடுயர்த்தும்
சொல்லுரைப்பீர் இறும்பூதுஎய்துகிறோம்
என்றுமுங்கள் புகழ்வாழ்க! பெருவிருட்சம்
தருநிழலே பேரொளியே வாழ்த்துகிறேன்.

கௌரவ ஈ.சரவணபவன்
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.கிளிநொச்சி மாவட்டம்.

குலநாயகம்

தந்தைசெல்வா அறங்காவற்குழு தமிழ்க்காதல் கொண்ட பிஷப்




கடந்த பல தசாப்தங்களாக எமது நாட்டில் கல்விப்ப ணியும் தமிழ்ப்பணியும் ஆற்றி வரும் பெருந்தகைகளில் பேராயர் ஜெப நேசனும் ஒருவர். வெளிநாட்டுக்குச் சென்று குடியேறும் வாய்ப்புக்கள் பெற்றிருந்தும் இந்த மண்ணை நேசித்து நம்மோடு வாழ்ந்து வருகின்றார். தமிழ் மொழியின் மீதும் தமிழ் இனத்தின் மீதும் அவர் கொண்ட காதல் எல்லாராலும் அறியப்பட்டவை பாரதிக்கு வருடந்தோறும் விழாவெடுக்கும் பேராயர் அலங்கரிக்காத இலக்கிய மேடைகள் இல்லை யென்றால் மிகையாகாது அவர் யாழ்.பல்கலைக்கழகப் பேரவையில் உறுப் பினராக விருந்த பொழுது நானும் அதில் அங்கத்துவம் வகித்தேன் பேராயரின் வாதத்திறமையும் நீதி வழுவாத பண்பையும் கண்டு கொண் டேன்.

அது மட்டு மல்லாது தமிழ் மொழியின்பால் கொண்டிருக்கும் உணர்வு போன்றே தமிழின விடுதலையிலும் கவனம் கொண்டவர். அவர் படித்துக் கற்றுணர்ந்த நூல்களில் கணிசமானவை அரசியல் மற்றும் இனவிடுதலை தொடர்பான நூல்களாகும்.

இவை தொடர்பில் அவரது நாட்டம் தந்தை செல்வா கட்டியெழுப்பிய இலங்கைத் தமிழரசுக்கட்சியின்பால் உள்ளது. தந்தை செல்வாநினைவு அறங்காவற்குழுவின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிவரும் ஆயர் அவர்கள் வருடாவருடம் தந்தை செல்வா தொடர்பான கட்டுரைகள் பலவும் எழுதிவருபவர். தந்தை செல்வாவின் பிறந்த தினமான மார்ச் 31 ஆம் திகதியிலும் தந்தை செல்வாவின் நினைவு தினமான தினமான ஏப்ரல் 26 ஆம் திகதியில் நடைபெறுகின்ற நினைவுப்பேருரை நிகழ்ச்சிகளுக்கு தலைமைத்தாங்கி நடத்துபவரும் ஆயர் அவர்களே.

இவ்வாறாக பல்துறைப்பட்ட அனுபவங்களும் ஆளுமையும் கொண்ட இளைப்பாறிய ஆயர் அருட்கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் அவர்கள் தமிழினத்துக்குக் கிடைத்த ஒரு அரிய பொக்கிஷம் என்றால் அது மிகையாகாது. இவ்வயதில் சிறப்பான ஒரு பந்தயத்தில் கலந்து கொண்டிருக்கும் ஆயர் அவர்கள் நிறைந்த பேற்றினைப் பெற இறைவன் அருள்புரிவாராக.

எஸ்.சேவியர் குலநாயகம்
தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு.



## பேராயர் கலாநிதி S.ஜெபநேசன் அவர்களின்

### முக்கிய வாழ்க்கை குறிப்புகள்

பிறப்பு: 28.03.1940 மானிப்பாய்
தந்தை : நாராயினப்பிள்ளை சுப்பிரமணியம்
தாய்: கனகம்மா விநாசித்தம்பி
கல்வி: றிபேக்கல்லூரி சாவகச்சேரி யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை. பல்கலைக்கழகம் பேராதனை தமிழ்நாடு இறையியல் கல்லூரி மதுரை

பெற்றுக்கொண்ட தகைமைகள்

BA (Ceylon),
Dip.in Edu (Ceylon),
MA in Tamil,
MA in Philosophy,
MA in English

கலாநிதிப்பட்டம்: PhD யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இறையியல் படிப்பு: Bachelor of Diviny செரம்பூர் பல்கலைக்கழகம்

வகித்த பதவிகள்

- ஆசிரியர் - புனித அந்தோனியார் கல்லூரி கண்டி (1962-1969)
- ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி (1969 - 1986)
- துணை அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி (1986 - 1988)
- அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி (1988 - 1993)
- பேராயர் - தென்னிந்திய திருச்சபை (1993 - 2005)
- அமெரிக்கா பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகம் வருகை ஆய்வாளர் (2002 - 2003)
- அதிபர் - கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மருதனார்மடம் (2005 - 2007)
- பேரவை உறுப்பினர் - யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (1992 - 2008)
- வருகை விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை (2009 - 2011)
- வருகை விரிவுரையாளர் ? யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் (2011- 2015)
- தலைவர் - தந்தை செல்வா அறங்காவலர் குழு
- எழுதிய நூல்கள்
தமிழ் - 10
ஆங்கிலம் -02

Best Wishes

Congratulations

## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேரா யர் அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் அடிகளார் மிகச் சிறந்த கல்விமான். தமிழ் மக்களின் வரலாற்றையும் மாண்பையும் உணர்ந்தவர். இதனால் தமிழ் மக்களின் சிறப்புக்காக என்றும் தன் பங்களிப்பை நல்கிவருகின்றார். சமயத் தலைவர் என்ற நிலையில் ஆங்கிலப் பின்புலம் சார்ந்த ஆளுகை நிரம்பப் பெற்றிருந்தாலும் தமிழ் மேல் தீராக்காதல் கொண்டவராக பேராயர் திகழ்கிறார். இதனால் பாரதி விழா உள்ளிட்ட பல தமிழ் விழாக்களை வட்டுக்கோட்டையில் முன்னெடுப் பதற்கு அடித்தளம் இட்டார். பேராயர் பங்கேற்காத யாழ்ப்பாணத் தமிழ் விழாக்களே இல்லை என்னும் அளவிற்கு அவரது தமிழ்ப் புலமை விரிவைபெற்றுத் திகழ்கின் றது. இத்தகைய தமிழ்ப் பற்றால் சமயம் கடந்து பொதுநிலையில் பலர் இவரது அன்பர்களாகத் திகழ்கின்றமையைக் காணமுடிகின்றது.சமயப் பணியாலும் தமிழ்ப்பணியாலும் பல சாதனை களை மேற்கொண்ட பேராயரின் புகழ் சூரிய சந்திரர் உள்ளவரை நிலைபெறப் பிரார்த்திக் கின்றோம். பவளவிழாச் சிறப்புற வாழ்த்துகின் றோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் யாழ்ப்பாணம்.

## செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் வாழ்த்துச்செய்தி




நல்லாசிரியராக நல்ல அதிபராக ஆற்றல்மிக்க ஆயராக, ஆளுமைமிக்க விரிவுரையாளராக நடமாடும் கலைக் களஞ் சியமாக விளங்குகின்ற பேரறிஞர் சுப்பிரமணியம் ஜெப நேசன் அவர்களுக்கு அகவை எழுபத்தைந்து பூர்த்திய டைவதையிட்டு வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகின்றேன்.கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் அவ ரோடு பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அன்பு, அறிவு, அரவ ணைப்பு, ஆராய்ந்த சொல்வன்மையை அணிகலன் களாகக் கொண்ட இப் பெரியாரை தமிழ்கூறும் தமிழுலகம் நன்கு அறியும்.பாரதியார் மீதும் அளவற்ற பக்தி கொண்ட இப் பெருமகன் அவரது சிந்தனைகளை [illegible] ஒவ்வொரு மேடைகளிலும் புதிய கருத்துக்களை எடுத்துரைக்கும் இவரது பேச்சாற்றலைக் கண்டு பலர் வியந்தனர். எந்த ஒரு விடயத்தையும் தெளிவுபடுத்து வதற்காக திருமுறை நூல்களோடு ஒப்பிடுகின்ற இப்பெரி யார் வாழ்வு பலருக்கு முன்னுதாரணம் என்றால் மிகையாகாது. எவரது நன்மை தீமைகளிலும் கலந்து வருவது கலந்து கொள்கின்ற மனித நேயர் இவர்.இப் பெரியார் நிறைந்த ஆரோக்கியத்தோடு, நீடூழி வாழ இறையருளை வேண்டி அமைகிறேன்.

ஆறுதிருமுருகன் -தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
(தலைவர் சிவபூமி அறக்கட்டளை இலங்கை)

## பேராசிரியர் சி. பத்மநாதன் வேந்தர்

யாழ் .பல்கலைக்கழகம்



பேராயர் ஜெபநேசனும் நானும் யாழ்ப் பாணக் கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்த வர்கள் அன்று தொட்டு இன்றுவரை எனது நம்பிக்கைக் குரிய நண்பனாகவே இருந்து வருகின்றார்.

பேராயரின் நகைச்சுவையும் குதூகல உணர் வும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஒரு தனியார் பாடசாலை யில் சாதாரண ஆசிரிய வாழ்க்கையை ஆரம்பித்து தனது விடாமுயற் சியினால் இலங்கையின் மிக முக்கியமான பதவி களை அலங்கரித்துள்ளார். அவருடைய நேர்மைத் திறனை யும் சர்வசமய சமரச நோக்கினையும் யாரும் சந்தேகித்தது கிடையாது. வரலாறு என்ற பாடம் அவருக்குக் கரும்பு மாதிரி வரலாற்று நூல்களைப் படிப்பதும் வரலாற்றுக் கட்டுரைகளை எழுதுவதும் கற்பிப்பதும் அவருடைய பொழுது போக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் மடை திறந்த வெள்ளம் போல் பேசும் பேராயர் இலங்கை வாழ் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து அதிகம் சிந்திப்பவர். அவரின் மணிவிழாவினை அவருடைய மாணவர்களே முன்னின்று நடத்து கின்றனர். அந்த அன்புள்ளங்களை நான் பாராட்டுகின்றேன்.



ஆங்கிலத்தொடு செந்தமிழ் தன்னையும
ஆய்ந்து கற்று அறிவி லுயர்ந்தனை
ஓங்குநற்புகழ் பெற்று உலகெலாம்
உலாவிக் கல்விமரபை உணர்ந்தனை
நீங்கிலாத உளத்தினை தெய்விகச்
செயல்களாலையும் சிந்தையிலே கொண்டு
பாங்கிருந்து பணிபல செய்கிறாய்
பாடுகின்றனை பல்லாண்டு வாழ்கநீ

ஆண்டோர் எழுபத்தைந்தாம் அகவையில்
ஐயநீ இன்று காலடி வைக்கிறாய்
நீண்டு வந்ததோர் கல்விமரபினை
நிலைநிறுத்திடும் பேறிவானனே
தூண்டுகல்வி துயர்துடைக்க மென்ற
தூயவாசகம் நெஞ்சிடைக்கொண்டு
மீண்டும் மீண்டும் கல்விப்பெருங்கடல்
மீதுலாவிச் சாகசம் செய்கிறாள்

பொன்மனம் கொண்ட பேராயரே உந்தன்
பொறுமை மாமலை என்பதறிவோம்
நன்மனங்கொண்ட நல்லவர் வாழ்ந்திடும்
நாயகநீ நூறாண்டு வாழ்ந்திட
என்மனம் உனை என்றுமே வாழ்த்துமே
எளிமை வாழ்வினால் ஏற்றங்கள் பெற்றவன்
இன்னும் இன்னும் அறிவுப்புலத்தினை
இளையவர்பெற என்றென்றும் வாழ்த்துவோம்.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.

பேராயரின் பவளவிழா இன்று மாலை 3.30 மணிக்கு யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி பீற்றோ மண்டபத்தில் நடைபெறுகிறது. பேராயரின் அபிமானிகள், மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விழா ஏற்பாட்டுக்குழுவினர்.

# உடன்படிக்கையை மீறியுள்ளது ஆஸி.

## ஐ.நாவின் புதிய அறிக்கை

ஆஸ்திரேலியா அகதிகளுக்கான சர்வதேச உடன்படிக்கையையும் சட்டத்தையும் மீறியுள்ளதாக ஐ.நாவின் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

அகதிகளை நடத்தும் விதம் சித்திர வதைகளுக்கு ஒப்பான முறையில் அமைந்திருப்பதாகவும் இது சர்வதேச சட்டத்தையும் மீறும் செயற்பாடாக உள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஆஸ்திரேலியா மனித உரிமைகள் அமைப்பால் வெளியிடப்பட்ட மறந்து போன சிறார்கள் என்ற அறிக்கை வெளிவந்து ஒரு மாதத்திலேயே ஐ.நாவின் இந்த புதிய அறிக்கை வெளியாகியுள்ளது.

இதன் மூலம் ஆஸ்திரே லியா தனது மனித உரிமை கடமைகளில் பின்நிற்பது உணரப்படுகிறது.

இந்த விடயம் சர்வதேச அளவில் தற்போது ஆஸ்திரேலியாவுக்கு பெரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் பலதரப்பட்ட விமர்சனங்களும் எழுந்த வண்ணம் உள்ளன.

அண்மையில் அறிமுகப்ப டுத்திய இரு குடிவரவு குடியகல்வு சட்டங்களும் அகதிகளுக்கு சிறந்த சட்டங்கள் அல்ல. இதன் காரணமாக சட்ட நிபுணர்களின் உதவிகள் பெறுவதற்கான வசதிகள் தடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று நடுக்கடலில் வைத்து விசாரணை செய்வது என்பது சர்வதேச அகதிகள் சட்டத்தை மீறும் செயலாக உள்ளது. இதன் காரணமாக இந்த சட்ட மாற்றம் அரசுக்கு சார்பாகவே அமைந்துள்ளது.

இந்த புதிய சட்ட வரைவுகள் அகதிகளை பொறுத்தமட்டில் மிகவும் ஆபத்தானவை என்று சட்டநிபுணர்கள் தெரிவித்துள்ளனர். சில வாரங்களுக்கு முன்பும் ஆஸ்திரேலிய அரசு 25 சிறார்களைக் கைது செய்து 2 தினங்கள் சிறையில் அடைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (வ)


மரண அறிவித்தல்

**சண்முகநாதன் கந்தகுமார்**



பிறப்பு: 1967.11.01

இறப்பு: 2015.03.06

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் கந்தகுமார் 06.03.2015 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து (சாமியார்) இன் பேரனும், காலஞ்சென்ற சண்முகநாதன் (கிச்சி), பூலோக நாயகியின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், தருமலிங்கம்-பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், கரிஸ்மாவின் பாசமிகு தந்தையும், இராஜசிங்கம்-யோகேஸ்வரி(வட்டுக்கோட்டை), சிறிகாந்தன் -கருணைநாயகி (கனடா), ரவிகலாநாயகி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயபாலன்-கேதீஸ்வரி (லண்டன்), திருக்குமார் -யோகேஸ்வரி (பிரான்ஸ்), ஜெயந்திரன்-ரதீஸ்வரி (கனடா), சிவகுமார்-தனேஸ்வரி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காயத்ரி, தீபா, விஸ்ணுகன், அரன்ஜா, அம்புயா, ஆருஜன், இலக்கியன் ஆகியோரின் பாசமிகு மாமாவும், கிரிதரன், தர்மினி, தர்சிகா, அனுசியா, கபிலன், கிருஸ்ணா, சுலக்சிகா, சக்திக்கா, சிவதர்சன், சிவப்பிரசன்னா, சிவேந்திரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், அஜந்தன், டுவாரகா, ரமேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை கிழக்கு, ஏழாலை (குப்பிளான்) தருமலிங்கம் இல்லத்தில் இன்று (11.03.2015) புதன் கிழமை ந.ப. 12.00 மணியளவில் குப்பிளான் காடாகடம்பை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

காசிவாசி செந்திநாதையர் வீதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

021 205 9356,
077 860 4122

(57637)(4.3.7)


# வெள்ளப்பெருக்கை தடுக்கும் செயற்றிட்டம் ஆரம்பம்

## அக்குரணையில் ஆரம்பித்து வைத்தார் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 11

அக்குரணையில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கை தடுப்பதை நோக்கமாகக் கொண்டு ஆரம்பக் கட்டமாக அங்குள்ள சிற்றாற்றை சுத்தப் படுத்தும் வேலைத்திட்டத்தை நகரஅபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் ஆரம்பித்து வைத்துள்ளார்.



பொதுமக்களுடன் அக்குரணை பிரதேச செயலகத்திலும், ஜும் ஆ பள்ளிவாசலிலும் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருந்தது. அதன்போது அமைச்சர் ஹக்கீமிடம் பொதுமக்களும் தமது அபிப்பிராயங்களை தெரிவித்ததுடன் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை அடுத்து கடந்த திங்கட்கிழமை மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்துக்கு இடர் முகாமைத்துவ அமைச்சின் உதவியைப் பெற்றுக் கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக அமைச்சர் ஹக்கீம் இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் கனரக இயந்திரங்களையும், தொழிலாளர்களையும் பயன்படுத்தி அக்குரணை நகரினூடாகச் செல்லும் சிற்றாற்றை மழை காலத்துக்கு முன்னர் சுத்தப் படுத்தி அதனை ஆழமாக்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

அத்துடன் சிற்றாற்றின் இருபுறங் களிலும் கருங்கற்களையும், சல்லடைகளையும் பயன்படுத்தி தடுப்புச் சுவர்களை எழும்பும் பணியிலும் இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தை ஈடுபடுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் தபால் மற்றும் முஸ்லிம் கலாசார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம், இலங்கை காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் எம்.எச்.எம்.சல்மான், அமைச்சர் ஹக்கீமின் பிரத்தியேகச் செயலாளர் எம். நயீமுல்லாஹ் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ–10)

# 'இயற்பியல்' நூல் வெளியீடு

வலி.வடக்கு, மார்ச் 11

வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் நா.ஸ்ரீகணேசனால் எழுதப்பட்ட தரம் 10, 11 மாணவர்களுக்கான 'இயற்பியல்' நூல் வெளியீடு இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் வே.பேரின்பநாதனும் சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஓய்வு நிலை அதிபர் கு.ஜெக நாதன் நூலை வெளியிட்டு வைக்க முதற்பிரதியை திருமதி புஸ்பவதி சிவகுமார் பெற்றுக் கொள்வார். மதிப்பீட்டுரையை முன்னாள் விஞ்ஞான பாட ஆசிய ஆலோசகர் க.கணேசகுமார் வழங்கவுள்ளார். (வ–86)


மரண அறிவித்தல்

**இளையதம்பி பாலசுப்பிரமணியம்**



யாழ் சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பாலசுப்பிரமணியம் (06.03.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி மற்றும் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தர்மரட்டினம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சுரேஸ்குமார், துஷ்யந்தினி, துஜித்தா மற்றும் துஷ்யந்தன் (ஜேர்மனி), கஜன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பராசக்தி (கனடா) அவர்களின் அன்புச் சகோதரரும், உதயகுமார் (இலங்கை), ஹம்சபூசணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், தேனுகா, தீபனா, சலா, பிரபா, தீபன், துஷாலினி, துசாளன், துளக்சினி, யாழினி, ஜசிந்தன், ஜேம்ஸ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ராஜகோபால்(கனடா), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், சாரதாதேவி (இலங்கை), சுசிலாதேவி (லண்டன்), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), ஜெயதேவி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தெய்வேந்திரம், நாகேந்திரம், சிவபாலசிங்கம், செல்வரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகலனும், சந்திரீகா, ராஜன், ராதிகா, ஜீவன், கஸ்தூரி, கஸ்தூரன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான முகிலன், கபிலன், மற்றும் சுரபி(ஜேர்மனி), சுருதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2015) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்பு : கஜன்

சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

+ 9477 111 5360, 077 473 0722

(57652)(4.3.7)


# பெண்கள் சக்தியை வெளிப்படுத்தும் தினம்தான் சர்வதேச மகளிர் தினம்

## கண்டி உதவி இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

கண்டி, மார்ச் 11

பெண்கள் தமது சக்தியை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக சர்வதேச மகளிர் தினம் இருக்க வேண்டுமே அன்றி கண்டுகளித்துக் கொண்டாடி விட்டு வெளியேறும் ஒரு கலை நிகழ்வாக இருக்கக்கூடாது என கண்டி உதவி இந்தியத் தூதர் செல்வி ராதா வெங்கட்ராமன் தெரிவித்தார்.

சௌமிய இளைஞர் அமைப்பு மற்றும் மனித அபிவிருத்தி நிறுவகம், உழைக்கும் பெண்கள் முன்னணி என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த மகளிர் தின நிகழ்வு கண்டி, பன்விலை விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

புரட்சிக் கவிஞன் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பெண்கள் வாழாதவரை தமிழ் சமூகம் பிரச்சினைகளை எதிர் நோக் குவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும். கல்வி அறிவு மூலமே சமூக மேம்பாட்டை அடைய முடியும். பெண்கள் சக்தி படைத்தவர்கள். சிவனில் சக்தி வடிவிலும் பெண்கள் இருந் தனர். எனவே பெண்கள் தமது சக்தியை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக சர்வதேச மகளிர் தினம் இருக்க வேண்டுமே தவிர கண்டு களித்து வெளியேறும் ஒரு கலை நிகழ்வாக இது இருக்க முடியாது.

செய்யும் தொழிலே தெய்வம் என்று கருத வேண்டும். எனவே நாம் என்ன தொழில் செய்தாலும் அதனை மதிக்க வேண் டும். பெண்கள் இன்று பல்வேறு தொழில்களையும் செய்து முன்மாதிரியாகத் திகழ்கின்றனர். ஆனால், அது இன்னும் பல மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும். எம்மில் தாழ்வு மனப்பான்மை வரக் கூடாது. சில பெண்கள் தம்மில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்கின்றனர். எம்மாலும் முடியும் என்பதை நாம் காட்ட வேண் டும். தாழ்வு மனப்பான்மை எம்மை மேலும் மேலும் தாழ்த்தி விடும். எமது சாதனையாளர்கள் எப்போதும் தாழ்வு மனப்பாங்கை லகவிட்டதாலேயே அதனை அடைந்துள்ளமை யாவரும் அறிந்த உண்மை என்று தெரிவித்தார். (வ–10)





# பதிவுக்கு முந்துங்கள்!

செவ்வாய்
புதன்
ஞாயிறு
தினங்களில்

மீண்டும்
# கல்விச்சுடர்

## தரம் 5 மாதிரி வினாத்தாள்

(கல்வித்துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டவை. முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியவை)

கேள்வித் தாளில் வரும் முத்திரையை சேகரிக்கத் தவறாதீர்கள். தவறினால் வருந்துவீர்கள்.....!

உதயன்

# உயிர் நீத்த வீரர்களுக்கு பிரதமர் மோடி அஞ்சலி

## முதல் உலகப் போர் நினைவு நாளில்

டில்லி,மார்ச் 11

முதல் உலகப்போரில் உயிர் நீத்த இந்திய இராணுவ வீரர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி மலர் வளையம்வைத்து அஞ்சலிசெலுத்தினார். முதல்உலகப்போரின்100ஆண்டுகள் நினைவு தினத்தை முன்னிட்டு போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று டில்லியில் உள்ள அமர்ஜவான் ஜோதி நினைவிடத்தில் நடைபெற்றது. இதன்போது மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி மரியாதை செலுத்தினார்.



முதலாம் உலகப்போர் 1914-1918 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற்றது. வருடந்தோறும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை முதலாம் உலகப்போரின் நினைவாக வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. முதலாம் உலகப்போரில் இந்தியாவைச் சேர்ந்த 74 ஆயிரத்துக்கும் மேற்பட்டவீரர்கள்தங்களதுஉயிர்களைத் தியாகம் செய்ததை குறிப்பிடத்தக்கது. இந்த நினைவு நிகழ்வின்போது குடியரசுத்தலைவர்பிரணாப்முகர்ஜியும் அஞ்சலி செலுத்தினார். (14)

# முன் ஜென்மத்தில் கொன்றவரைக் காட்டிக் கொடுத்த 3 வயதுச் சிறுவன்



டமாஸ்கஸ்,மார்ச் 11

சிரியா மற்றும் இஸ்ரேலின் எல்லையில் கோலன் ஹைட்ஸ் என்ற பகுதியில் வசித்துவரும் ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 வயதுச் சிறுவன் ஒருவன், தான் தனது முந்தைய முன் ஜென்மத்தில் எவ்வாறு கொல்லப்பட்டான் என்பதை தனது பெற்றோரிடம் விவரித்துள்ளான்.

சிறுவன் ஏதோ விளையாட்டாகக் கூறுகிறான் என்று எண்ணிய அவனது பெற்றோரும் அவன் கூறிய எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் தொடர்ந்து அவன் பலமுறை தான் தனது முந்தைய ஜென்மத்தில் கோடரியால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாகவும், தன்னைப் புதைத்த இடத்தை காட்டுவதாகவும் தெரிவித்துள்ளான். இதனால் அச்சமடைந்த அவனது பெற்றோர், சரி, உன்னை புதைத்த இடத்தைக் காட்டு என்று கூறியுள்ளனர்.

இதனையடுத்து அந்த 3 வயதுச் சிறுவன் தனது பெற்றோரை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்துச் சென்று, இங்கு தான் என்னைப் புதைத்தார்கள் என்று கூறியுள்ளான். சிறுவனின் பேச்சை நம்புவதா வேண்டாமா என அஞ்சிய பெற்றோர், அவன் காட்டிய இடத்தைத் தோண்டத் தொடங்கியுள்ளனர். அந்த இடத்தைத் தோண்டத் தொடங்கிய சில நிமிடங்களில் அந்த பெற்றோருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. அந்த இடத்தில் ஒரு மனித உடலின் எலும்புக் கூடு இருந்தது.

அத்தோடு நிறுத்தாத அந்தச்சிறுவன் தான் கோடரியால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாகவும், அந்தக் கோடரி புதைத்த இடத்தைக் காட்டுகிறேன் வாருங்கள் என்று பெற்றோரை அழைத்துச் சென்றுள்ளான். மேலும், பிறக்கும்போதே அவனுக்கு நெற்றியில் இருந்த தடயத்தை காட்டி என்னைக் கோடரியால் இங்கு தான் தாக்கினார்கள் என்று கூறியுள்ளான். அந்தச் சிறுவன் கூறியதைப் போலவே அந்த எலும்புக்கூட்டின் நெற்றியில் காயத்துக்கான தடயம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், அந்தச் சிறுவன் தனது முன் ஜென்ம பெயர், ஊர் மற்றும் தன்னைக் கொன்றவர்கள் யார் என்பது வரை விவரித்தமை பொலிஸாரையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பின்னர் பொலிஸார் நடத்திய விசாரணையில், அந்தச் சிறுவன் பிறப்பதற்கு 4 வருடங்களுக்கு முன்பு காணாமல் போன மருத்துவர் ஒருவரைப் பற்றித் தகவல்களைத் தேடியுள்ளனர்.

மேலும், அந்தச் சிறுவன் தன்னைக் கொன்றவர் இவர் தான் என்று குறிப்பிட்ட நபரைக் காட்டியபோது, அந்தக் கொலைச் சம்பவத்தையும், அனைத்துப் பெயர்களையும் சரியாகக் கூறியதைக் கேட்டு முகம் மாறிய அந்த நபர், தானும் மற்றும் சிலரும் சேர்ந்து அந்தக் கொலையைச் செய்ததாக ஒப்புக் கொண்டதாக கூறப்படுகிறது.

பலரையும் ஆச்சரியத்துக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கிய இந்த முன் ஜென்ம சம்பவம் பற்றி ஜேர்மனி எழுத்தாளர் ஒருவர் புத்தகம் ஒன்றில் எழுதியுள்ளார். (14)

# பெண்ணாக பிறந்ததற்கு பெருமைப்பட வேண்டும்

## நடிகை குஷ்பூ தெரிவிப்பு

டில்லி,மார்ச் 11

சட்டங்கள் மாறாதவரை பெண்களுக்கான குற்றங்கள் தொடர்ந்து நடந்துகொண்டேதான்இருக்கும்என்று நடிகை குஷ்பு தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும் போது,

ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் சக்தி இருக்கிறது. அவர்களாலும் சாதிக்க முடியும். நாம் பெண்ணாக பிறந்ததற்கு பெருமைப்பட வேண்டும். நான் திரைப்படத் துறையில் இருப்பதால் என்னைப் பலருக்குத் தெரிகிறது. இந்தச் சமூகத்தில் பல பெண்கள் சாதித்து இருக்கிறார்கள். அவர்களை வெளிக்கொண்டு வரவேண்டும்.



> நான் திரைப்படத் துறையில் இருப்பதால் என்னைப் பல ருக்குத் தெரிகிறது. இந்த சமூகத்தில் பல பெண்கள் சாதித்து இருக்கிறார்கள். அவர்களை வெளிக் கொண்டு வரவேண்டும்.

சமூகத்தில் ஆணாதிக்கம் மிக அதிகமாகவுள்ளது. ஆனால் பெண்களால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. இருந்தாலும் பெண்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை. அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பெண்கள் சமுதாயத்துக்கு பயந்து தான் வாழ்கிறார்கள்.

சட்டங்கள் மாறாதவரை பெண்கள் மீதான குற்றங்கள் நடக்கத்தான் செய்யும். பெண்கள் தமக்காகப் போராடினால்தான் சாதிக்க முடியும். இல்லத்தரசி என்று சொல்வதற்கு வெட்கப்படா தீர்கள். உலகைப் பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். உங்களாலும் சாதிக்க முடியும். என அவர் தெரிவித்தார். (14)

# ஷகீன் - 3 ஏவுகணை சோதனை

இஸ்லாமாபாத்,மார்ச் 11

அணு ஆயுதத்தை தாங்கிக் கொண்டு 2ஆயிரத்து 750 கி.மீ தூரம் செல்லும் ஷகீன் 3 ஏவுகணையை பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

இந்தியாவுக்குப் போட்டியாக பாகிஸ்தானும் ஏவுகணைகளைத் தயார் செய்து வருகிறது. கடந்த மாதம் ராத் என்ற ஏவுகணையை பாகிஸ்தான் வெற்றிகரமாக சோதனை செய்தது. இது 350 கி.மீ தூரம் சென்று தாக்கும் திறன் படைத்தது. இந்த நிலையில் 2 ஆயிரத்து 750 கி.மீ தூரம் சென்று தாக்கும் ஷகீன்3 ஏவுகணையை பாகிஸ்தான் நேற்றுமுன்தினம் சோதனை செய்தது. அரபிக்கடலில் அமைக்கப்பட்டிருந்த இலக்கை



இந்த ஏவுகணை துல்லியமாக தாக்கியது. இந்த ஏவுகணை அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் திறன்படைத்தது.ஏவுகணைஇலக்கை நோக்கிச் செல்வதை பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள், விஞ்ஞானிகள் கண்காணித்தனர். (14)

# தாமரையுடன் இணைந்து வாழும் எண்ணம் இல்லை; தியாகு தெரிவிப்பு

சென்னை,மார்ச் 11

கவிஞர் தாமரையுடன் இனியும் இணைந்து வாழும் எண்ணம் இல்லை என்று அவரது கணவர் தியாகு தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவரும், தனது கணவருமான தியாகு வீட்டை விட்டு வெளியேறியதாக கூறிய கவிஞர் தாமரை, கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் தியாகுவின் அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அறப் போராட்டம் நடத்தி வந்தார்.

தனது கணவர் தியாகு மன்னிப்பு கேட்டால் மட்டுமே போராட்டத்தை கைவிடுவதாக அவர் கூறினார். இந்த நிலையில் நேற்று





வள்ளுவர் கோட்டம் அருகே அறப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தாமரையையும் மகன் சமரனையும் சந்தித்த தியாகு மன்னிப்பு கடிதம் ஒன்றைக் கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து தனது அறப் போராட்டத்தை கடந்த 8 ஆம் திகதியுடன் முடித்துக்கொண்டு தாமரை வீடு திரும்பினார். இது குறித்து தியாகு கூறுகையில், எனது மன்னிப்புக் கோரலை ஏற்றுக்கொண்டு இருவரும் வீடு திரும்பியதில் மகிழ்ச்சி.

இப்போது வேளச்சேரி யில் மகள் வீட்டில் இருக்கிறேன்; ஆனால், இனியும் தாமரையுடன் இணைந்து வாழும் எண்ணம் எனக்கு இல்லை எனத் தெரிவித்துள்ளார். (14)

# பிரசவத்துக்காக தினமும் 5 கி.மீ. தூரம் ஓடும் 7 மாதக் கர்ப்பிணி

கரீம்,மார்ச் 11

தெலுங்கானாவில் தடகள வீரர் ஒருவரின் மனைவியான 7 மாத கர்ப்பிணி ஒருவர் சுகப்பிரசவத்துக்காக தினமும் 5 கி.மீ தூரம் ஓடுவது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம் கரீம் நகரைச்சேர்ந்த ரவீந்திரர், தேசிய அளவில் பல பதக்கங்களை வென்ற ஒரு தடகள வீரர். அவரது மனைவியின் பெயர் லட்சுமி (42). ஏற்கனவே இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ள நிலையில், லட்சுமி மீண்டும் கர்ப்பம் தரித்து தற்போது 7 மாத கர்ப்பிணியாக உள்ளார். இந்த நிலையில் அவர் சுகப்பிரசவத்துக்காகதினமும் 5 கிலோ மீற்றர் தூரம் ஓடுகிறார். அத்துடன் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு உஜ்வல பார்க்கில் நடந்த நிகழ்வொன்றில் அவர் தனது குழந்தையைத் தூக்கி கொண்டு 80 படிகள் ஏறி சாதனை படைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (14)

# மாற்றமடையும் அமெரிக்கா

வொஷிங்டன்,மார்ச் 11

இனப்பாகுபாடு இல்லாத நாடாக அமெரிக்கா மாறி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மக்கள் உரிமை கோரி கடந்த 1965 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பேரணியின் 50 ஆம் ஆண்டு தினம் அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி அண்மையில் நடைபெற்ற பேரணியில் பங்கு பற்றிய ஒபாமா, எந்த நோக்கத்திற்காக இந்தப் பேரணி தொடங்கப்பட்டதோ அதை முழுமையாக அமெரிக்கா எட்டவில்லை. இருந்தபோதிலும் இனப் பாகுபாடு இல்லாத ஒரு நாடு என்ற இடத்தை நெருங்கிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். (14)

## பழைமையான மனித மூளை கண்டுபிடிப்பு

லண்டன்,மார்ச் 11

2ஆயிரத்து 600ஆண்டுகள்பழைமை வாய்ந்த மனித மூளை இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டையோடு 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவருடையதாக இருக்கும் என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த மண்டை யோட்டுக்குரிய நபர் சுமார் 26 இலிருந்து 45 வயதுக்குட்பட்டவராக இருப்பார் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் கடந்த 2008ஆம் ஆண்டு யோர்க் என்ற பகுதியில் சேறும் சகதியும் நிறைந்த பகுதியில் தலைவெட்டப்பட்ட நிலையில்மண்டை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதில் மூளை பத்திரமாக இருந்தது. அந்த மூளையை 34 பேர் கொண்ட நிபுணர் குழு ஆய்வு மேற்கொண்டு வருகிறது. அந்த மண்டையோடு தாடையும், முதுகெலும்பும் ஒட்டிய நிலையில் உள்ளது. இதுகுறித்து நிபுணர்கள் குழு தொடர்ந்து ஆய்வு நடத்தி வருகின்றனர். (14)

## குட்டி இளவரசனைப் பார்த்த மகிழ்ச்சியில் இளவரசர்

லண்டன்,மார்ச் 11

பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் ஏக்கத்தைப் புரிந்தகொண்ட இளவரசி கேட், தற்போது குழந்தை ஜார்ஜுடன் அரச குடும்பத்தைச் சந்தித்துள்ளார்.

பிரித்தானிய அரச குடும்ப தம்பதியினர் கேட்–வில்லியம்ஸின் மகன் ஜோர்ஜ். சமீபத்தில் தனது பேரன் ஜோர்ஜைப் பார்க்காமல் சார்ள்ஸ் ஏங்குவதாகவும், அவன் பிறந்தது முதல் சில முறை மட்டுமே அவனைச் சந்தித்ததாகவும் அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

இந்தச் செய்தி பரவலாக பேசப்பட்டதால், தற்போது கேட் தனது மாமனார் மற்றும் மாமியாரான சார்ளஸ்–கமிலா தம்பதியினரை குழந்தை ஜோர்ஜுடன் சந்தித்துள்ளார்.

பிரித்தானியாவின் காமல் வெல்த் நாளில்சார்ளஸ்–கமிலா பங்கேற்றதையடுத்து, தனது கணவர் வில்லியம்ஸ் மற்றும் குழந்தை ஜோர்ஜுடன் கேட் அந்த நிகழ்வுக்கு வருகை தந்துள்ளார். அப்போது



ஜோர்ஜை பார்த்து மிகவும் சந்தேஷமடைந்த சார்ள்ஸ் அவனுடன் ஆசை தீர கொஞ்சி விளையாடியுள்ளார். மேலும் தங்களது குடும்பத்தினருடன் நகைச் சுவை பொங்கப் பேசி கேட்– வில்லியம்ஸ் தம்பதியினரும் மகிழ்ந்ததாகக் கூறப்படுகிறது. (14)

## நடுவானில் ஹெலிகொப்டர்கள் மோதல்

## 10 பேர் சாவு



பியோனஸ் ஏர்ஸ், மார்ச் 11

தென் அமெரிக்காவில் உள்ள ஆர்ஜென்ரீனாவில் பிரான்ஸைச் சேர்ந்த ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் பிரபலங்களை வைத்து ஒரு காட்சியைப் படம் பிடித்தது. அதன்படி ஹெலிகொப்டரில் பறக்கும் பிரபலங்கள் அதில் பறந்தபடியே தரையில் இருக்கும் தங்களது தங்குமிடம்மற்றும்உணவுப்பொருள்களைப் படம் பிடிக்க வேண்டும்.

அந்தக் காட்சி ஆர்ஜென்ரீனாவில் வடமேற்கில் உள்ள லாரிரியோஜா மாகாண மலைப்பகுதியில் நடந்தது. அதில் பிரான்ஸ் நாட்டின் விளையாட்டு வீரர்கள் உள்பட 8 பேர் கலந்து கொண்டனர். அவர்கள் 2 ஹெலிகொப்டர்களில் பயணம் செய்தனர். அவர்களது ஹெலிகொப்டர்கள் வில்லா கேஸ்டெல்லி என்ற இடத்தில் பயணித்துக்கொண்டிருந்த போது 2 ஹெலிகொப்டர்களும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளா கின. தரையில் விழுந்து அவை நொருங்கியதில் 2 விமானிகள் உட்பட 10 பேர் சாவடைந்தனர்.

அவர்களில் 3 பேர் பிரான்ஸின் பிரபலமான விளையாட்டு வீரர்கள். புளோரன்ஸ் ஆர்தாயுட் பாய்மர படகு வீராங்கனை ஆவார். மற்றொருவர் காமில் முபாத். இவர் ஒலிம்பிக் நீச்சல் வீரர். இன்னொருவர் அலெசிஸ் வாஸ் டின். ஒலிம்பிக் குத்துச்சண்டை வீரர். இவர்கள் தவிர மேலும் 5 பேர் பிரான்ஸைச் சேர்ந்தவர்கள். இந்தத் தகவலை பிரான்ஸ் அதிபர் பிரான் கோயிஸ் ஹோலண்டே உறுதி செய்துள்ளார்.

இந்த விபத்துக்கான காரணம் தெரியவில்லை. மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நடந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (14)



உயர் அட்லஸ் மலைத் தொடரில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி உலகோடு ஒட்டாத வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். மின்சாரம், வைத்தியர்கள், வீதிகள் என எவையுமே அந்தக் கிராமங்களில் இல்லை. கோவேறு கழுதைகளே அங்குள்ள பிரதான வாகனங்கள். ஆனாலும் அங்குள்ள மக்கள் மிக மகிழ்ச்சியாக வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர்.

## காதலிக்கு புதுமையான பரிசு கொடுத்த இளைஞன்

லண்டன்,மார்ச் 11



இங்கிலாந்தை சேர்ந்த் டீன் சுமித் என்ற இளைஞன் 365 நாள்கள் தனது காதலை தெரிவிக்கும் வீடியோவை காதலிக்காக அவரின் பிறந்த நாளன்று பரிசாகக் கொடுத்து ஆச்சரியப்படுத்தியுள்ளார்.

டீன் சுமித் தனது தோழி ஜெனிபருடன் நீண்டகாலம் பழகி வந்தாலும் ஒரு வருடத்துக்கு முன்னர் சுமித் தன் காதலை வெளிப்படுத்தி தன்னை மணந்துகொள்ளுமாறு கேட்க முடிவு செய்தார். ஆனால் உடனடியாக அப்படிச் செய்யாமல் வித்தியாசமாக ஏதாவது செய்ய முடிவு செய்தார். அதன்படி ஒவ்வொரு நாளும் 'நீ என்னை மணந்து கொள்வாயா? உன்னுடன் இறுதிவரை ஒன்றாக வாழ விரும்புகிறேன்' என்பது போன்ற வாசகங்களை அட்டையில் அன்றைய திகதியுடன் எழுதி அதை வீடியோவாக எடுத்து வைத்துக்கொண்டே வந்தார். இது 365 நாள்களாகத் தொடர்ந்தது. ஆனால் இது அவரது தோழி ஜெனிபருக்குத் தெரியாது.

இந்த நிலையில் ஜெனிபரின் பிறந்த நாள் அன்று ஜெனிபரின் தம்பி மூலம் அந்த வீடியோவைப் பரிசாகக் கொடுப்பித்து கடற்கரையில் தனியாக அதனைப் பார்க்கும் படி செய்வித்தார். அதன்படியே ஜெனிபர் வீடியோவைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது அவருக்கு பின்னால் அட்டையில் 'என்னை மணந்து கொள் என்ற வாசகத்துடன்' சுமித் தயாராக இருந்தார். வீடியோவை பார்த்து முடித்துவிட்டு உணர்ச்சி வசப்பட்ட நிலையில் திரும்பியவருக்கு மேலும் ஓர் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. சுமித் கடற்கரை மணலில் மண்டியிட்டு தனது காதலைத் தெரிவிக்க அடுத்த கணமே ஜெனிபர் கண்கள் கலங்க தனது சம்மதத்தைத் தெரிவித்தார். (14)

## குழந்தைகளை நானே கொன்றேன் பெற்ற தாயின் அதிரடி வாக்குமூலம்

பிரித்தானியாவைச் சேர்ந்த பெண்ணொருவர், தனது ஊனமுற்ற குழந்தைகளை பராமரிக்க முடியாததால் அவர்களைக் கொன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் நியூ மால்டன் நகரில் டேனியா கிலாரென்ஸ்–காரி கிலாரென்ஸ் தம்பதியினர் 3பிள்ளைகளுடன் வசித்து வந்தனர். ஆனால் டேனியாவின் 3 பிள்ளைகளும் உடல் ஊனமுற்றவர்களாக பிறந்துள்ளதால், பிள்ளைகள் பிறந்த நாள் முதல், அவர்களை வளர்ப்பதற்கும் பராமரிப்பதற்கும் அவர் மிகப் பெரிய போராட்டங்களையும் மன உளைச்சல்களையும் சந்தித்து வந்துள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து , அவரது கணவர் தென் ஆபிரிக்காவில் வாழ்ந்து வருகின்றார். இந்த நிலையில் பிள்ளைகளின் நிலை மற்றும் எதிர்காலத்தை நினைத்து



துக்கத்தின் எல்லைக்கே சென்ற டேனியா, 3 பிள்ளைகளையும் கொல்ல முடிவெடுத்தார். இதனை தொடர்ந்து, 3 பிள்ளைகளையும் படுக்கையில் படுக்க வைத்து தலையணையை அவர்களின் முகங்களில் அழுத்தி, ஒவ்வொரு குழந்தையாக கொன்றுள்ளார். அதன் பின்னர் குழந்தைகளின் விளையாட்டு பொம்மைகளை அவர்களை சுற்றி அலங்கரித்து வைத்து விட்டு கதறி கதறி அழுதுள்ளார்.

அத்துடன் தன் கணவருக்கு அவர் எழுதிய கடிதத்தில் , பெற்ற தாயே குழந்தைகளை பராமரிக்கமுடியாமல்கொலை செய்த வேதனை என்னை வாட்டி எடுக்கிறது. நான் செய்த பாவத்துக்கு மன்னிப்பே கிடையாது என கூறி, தூக்க மாத்திரைகளை அதிக அளவில் விழுங்கியுள்ளார். எனினும் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்ததால் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். டேனியா அனைத்து குற்றங்களையும் ஒப்புக் கொண்டுள்ளார். அவர் துன்பத்திலிருந்து விடுபடும் வரை மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டும் என நீதி வான் உத்தரவிட்டுள்ளார். (14)

# ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரியாக திலீப விஜயசுந்தர

2015 மார்ச் 9ஆம் திகதி முதல் தேசிய தொலைத் தொடர்பு வழங்குநரான ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக திலீப விஜயசுந்தர நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் தனது தேர்ச்சியான அனுபவத்தை மூலதனமாகக் கொண்டு கூட்டு நிறுவனங்களை இலாப மீட்சசெய்ததுடன் முன்னணியான நிறுவனங்களாகவும் முன்னேற்றி சாதனை புரிந்துள்ளார். விஜயசுந்தர தேசிய தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில் நுட்பத்துறை தீர்வு வழங்குநராகவும் நாட்டின் அடுத்த கட்ட (டிஜிட்டல்) வளர்ச்சிப் படியில் முன்னணி புரோட் பேண்ட் மற்றும் முதுகெலும்பாகவுள்ள உட்கட்டமைப்பு சேவை வழங்குநராக திகழும் நிறுவனத்தில் புதிய தலைவராக பதவியேற்றிருக்கின்றமை மிகவும் பொருத்தமானதாகும்.



விஜயசுந்தர இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராகவும், இலங்கை காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலை வராகவும், முதலீட்டுச் சபையின் துணை இயக்குநர் போன்ற நாட் டின் பொதுத்துறையிலும் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அவர் முதலீட்டு துறையில் குழுவிலும் ஓர் அங்கம் வகித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தொழிற்துறையில் பி.எஸ்.சி மற் றும் எம்.எஸ்.சி பட்டம் பெற்ற ஒரு பொறியியலாளரான விஜேசுந்தர எயர் வேய்ஸ் மற்றும் எமிரேட்ஸ் எயர் லைன்ஸ் போன்ற சர்வதேச தனியார் வணிக துறைகளில் பரந்த விரிவான பல தசாப்த கால அனுபவம் வாய்ந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

# மருத்துவர் கங்காதரனின் அறுபது வருடகால மருத்துவப் பணிகள்

இ.குமாரசாமி சர்மா,
வண்ணைநகர்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 1929ஆம் ஆண்டு தியாகராஜா சுகிர்தவதி அம்மாள் தம்பதிகளின் மூத்த புதல்வனாகப் பிறந்த மருத்துவர் கங்காதரன் 86 வருடங்கள் வாழ்ந்து கடந்த 2 ஆம் திகதி காலமான செய்தி எமது மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் துயராகும். அவர் சுமார் 60 வருடங்களுக்கும் மேலாகச் சிறப்பான மருத்துவ சேவை புரிந்து மக்களுக்கு அரும் பெரும் தொண்டு ஆற்றியுள்ளார்.

ஆறு சகோதரர்களுடன் பிறந்த கங்காதரன் சீதாதேவி என்பவரை மணம் புரிந்து நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியைக் கொழும்பு றோயல் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்.இந்துக் கல்லூரியிலும் கற்று பல்கலைக்கழகம் சென்று 1953ஆம் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்றார். 10 வருட காலம் அரச சேவையில் கடமை புரிந்து பின்னர் மூளாய் கூட்டுறவு மருத்துவமனையிலும் மானிப்பாய் மருத்துவ மனையிலும் சிறப்பான சேவையை ஆற்றினார்.

1973ஆம் ஆண்டு முதல் வண்ணார்பண்ணை மேற்கில் மருத்துவமனையை அமைத்து மருத்துவப் பணிகளைச் சிறந்த முறையில் ஆற்றினார். கங்காதரன் எனும் பெயரில் அமைந்த மருத்துவமனையில் தமக்கு அனுசரணையாக வேறு மருத்துவ நிபுணர்களையும் துணையாகக் கொண்டு மக்களுக்கு எந்த நேரமும் மருத்துவ வசதிகள் கிடைக்கக்கூடியவாறு பணி புரிந்தார்.

இவர் சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் சமமான மருத்துவ சேவையை மிகவும் அர்ப்பணிப்புடன் புரிந்தார். அன்னார் புன்னகை மாறாத முகத்துடன் நோயாளர்களுடன் மிகவும் அன்புடன் பேசி ஆறுதலான வார்த்தைகள் கூறி அவர்களது பயத்தைப் போக்கி விடுவார். இதனால் பெருமளவு நோயாளர்களின் நோய், இவரைக் கண்டதும் நீங்கிவிடும்.

பல வருடகால மருத்துவ அனுபவம் காரணமாக நோயாளர்களின் நோயைப் பார்த்தவுடன் கண்டுபிடித்து அதற்குரிய மருத்துவம் செய்வது அவரது தனிச் சிறப்பாகும். தொண்டை, காது, மூக்கு ஆகியவற்றில் ஏற்படும் நோய்களைத் தீர்ப்பதிலும் நிபுணத்துவம் பெற்றவர். மகப்பேற்று மருத்துவம் தாய்,சேய், நலம் பேணல், மயக்க மருந்து கொடுத்தல், அறுவைச் சிகிச்சைகள் முதலான பல துறைகளிலும் மிகுந்த அனுபவமும் நிபுணத்துவமும் மிக்கவராக இவர் விளங்கினார். இரவு பகல் எந்த நேரமானாலும் நோயாளர் அவசர சிகிச்சை பெற வந்தால் உடனடியாக வந்து பார்வையிட்டு சிகிச்சை அளிப்பார்.

கங்காதரனிடம் பல்வேறு சிறப்பியல்புகளும் காணப்பட்டன. புல்லாங்குழல் வித்துவானாக பல மேடைகளில் கச்சேரி செய்துள்ளார். இலங்கை வானொலியிலும் புல்லாங்குழல் வாசித்துப் பாராட்டுக்கள் பல பெற்றவர். இவர் தமது வீட்டில் இருந்து கொண்டு புல்லாங்குழல் வாசித்தவாறு மெய்மறந்து இருப்பதை நாம் கண்டுள்ளோம்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் கெடுபிடிகளினால் அவர் வலுக்கட்டாயமாக இங்கிருந்து வற்றாப்பளைக்கு வெளியேற்றப்பட்டார். அங்கு அவர் தமது தென்னந்தோட்டங்களைப் பராமரித்து வந்ததுடன் 2009ஆம் ஆண்டு வரை வன்னியில் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு மருத்துவப் பணிகளை வழங்கினார்.

வன்னியில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர் ஆற்றிய மருத்துவ சேவைகளை போராளிகளும் அரசும் பாராட்டத்தவறவில்லை.

2009ஆம் ஆண்டு வன்னியில் இருந்து மீண்டும் தமது வண்ணை மேற்கு மருத்துவமனைக்குத் திரும்பி வந்து பார்த்த போது அது சேதமுற்று இருப்பதைப் பார்த்து மிகவும் மனவேதனை அடைந்தார். பின்னர் அதனைப் புதுப்பித்து நவீன வசதிகள் கொண்டதாக மாற்றி அமைத்தார். தனபாலசிங்கம் என்பவரின் துணையுடன் பல்வேறு துறைசார்ந்த மருத்துவ நிபுணர்களை வரவழைத்து நோயாளர்களுக்குச் சிறந்த சேவையை ஆற்றினார். கங்காதரன் அவர்களது அறுபது வருடகால மருத்துவ சேவையை எம்மால் ஒரு போதுமே மறக்க இயலாது. மீண்டும் வண்.மேற்கு மருத்துவமனையைச் சிறப்பாக இயங்க வைப்பது நாம் அவருக்குச் செய்யும் காணிக்கையாகும்.

# ஊவாவில் தொழில் முயற்சியாளர்களுக்கு கொமர்ஷல் வங்கியின் வேலைத் திட்டம்



ஊவா மாகாணத்தைச் சேர்ந்த 150 தொழில் முயற்சியாளர்களுக்கு கொமர்ஷல் வங்கி தமது வர்த்தகத்தை விருத்தி செய்து கொள்வது தொடர்பான விஷேட வேலைத் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து பெறுமதி மிக்க தகவல்களை வழங்கி தனது ஆதரவுக்கரத்தை நீட்டியுள்ளது.

வங்கியின் பண்டாரவளை, பதுளை மற்றும் வெலிமடை கிளைகள் வங்கியின் பண்டாரவளை கிளையின் விவசாய மற்றும் நுண் பொருளாதார அலகின் ஊடாக ஏற்பாடு செய்திருந்தன. பண்டாரவளை நிகழ்ச்சி இலங்கை மத்திய வங்கியின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றது. இத் திட்டத்தில் பூக்களை வெட்டல், மரக்கறி, மற்றும் தேயிலை தொழில் துறையில் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப பிரதான எண்ணக்கருவில் விவசாய உற்பத்தியின் தரத்தை அதிகரித்தல் மற்றும் மேற்குறித்த பிரிவுகளுக்கான ஏற்றுமதி சந்தை வாய்ப்பை ஆராய்தல் என்பன பிரதான கருப்பொருளாக விளக்கப்பட்டன.

இத்திட்டத்தில் பதுளை, பண்டாரவளை மற்றும் வெலிமடை வங்கிக் கிளைகளால் பரிந்துரை செய்யப்பட்ட தேயிலை, மலர் வளர்ப்பு மற்றும் மரக்கறி தொழில் துறை சார் தொழில் முயற்சியாளர்கள் பங்குபற்றினர். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சனத்பெரேரா – கொமர்ஷல் வங்கியின் ஊவா சப்ரகமுவ பிராந்திய முகாமையாளர் டி.எம். டி.பி திஸாநாயக்க மாகாண முகாமையாளர் இலங்கை வங்கியின் கண்டிக் கிளை மற்றும் ஈ.பி.சூரியாராச்சி சிரேஷ்ட முகாமையாளர் கொமர்ஷல் வங்கி கடன் அபிவிருத்தி பிரிவு ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் ஏனைய ஊக்குவிப்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளாக குருசிங்க பிரதி பணிப்பாளர் விவசாயத் திணைக்களம், பெரேரா பிரதி பணிப்பாளர் ஏற்றுமதி அபிவிருத்தி சபை, குருகே தேயிலை சபை பிரதி ஆணையாளர், மற்றும் மொஹொட்டி சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

கடந்த காலங்களில் கொமர்ஷல் வங்கி நுண் தொழில் முயற்சியாளர்களுக்கு இத்தகைய வேலைத்திட்டத்தை நாரம்மல, காலி, மொனறாகலை, வெல்லவாய, பதுளை, பஸ்ஸரை, பண்டாரவளை, வெலிமடை, வெலிகம, கொக்கல, கராப்பிட்டிய, மாத்தறை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் நடத்தியுள்ளது.

வங்கியின் விவசாய மற்றும் நுண் நிதிப் பிரிவுகள் இரத்தின[illegible] நாரம்மல, கண்டி, அநுராதபுரம், கிளிநொச்சி, பண்டாரவளை, வெல்லவாய ஹிங்குராக் கொடை, கலேவெல, அச்சுவேலி, வவுனியா மற்றும் திஸ்ஸமகாராம ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. விவசாய மற்றும் நுண் வர்த்தகத் துறைக்கு நிதி தேவைப்படுகின்றவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு ஆதரவளிப்பதோடு அவர்களின் வர்த்தகத்தை எவ்வாறு விருத்தி செய்வது என்பது பற்றிய வழி [illegible]டல், ஆலோசனை என்[illegible]வற்றை வழங்கி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும் இந்தப் பிரி[illegible]ள் உதவுகின்றன.

கொமர்ஷல் வங்கி உலகின் தலைசிறந்த ஆயிரம் வங்கிகள் வரிசையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக (2011–14) இடம் பிடித்துள்ள இலங்கையின் ஒரே யொரு வங்கியாகும். கடந்த பல வருடங்களாக இலங்கையின் மிகச் சிறந்த வங்கி என்ற ரீதியில் பல விருதுகளையும் அது வென்றுள்ளது. அத்தோடு 2013 மற்றும் 2014ம் ஆண்டில் இலங்கையின் மிகச் சிறந்த பத்து கூட்டாண்மை பிரஜைகளில் ஒன்றாகவும் இலங்கை வர்த்தகச் சபையால் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(த)

# வாசகர் திருமுகம்



## விளாத்திக்குளம் வீதிக்கு விடிவு ஏற்படுமா?

விளாத்திக்குளம் வீதியின் நிலை பற்றிக் கீழே குறிப்பிடுகின்றேன். வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கிச் செல்லும் இந்த வீதியானது பூவரசங்குளத்திலிருந்து வடக்குப் பக்கமாகச் செல்கின்றது. இந்த வீதியானது சுமார் 30 வருடங்களுக்கு மேலாகச் சீர் செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த வீதி பூவரசங்குளம் சந்தியிலிருந்து புலவனார் ஊர், மடுக்குளம், வேலங்குளம், சின்னத்தம்பனை, கோவில் மோட்டை, செங்கற்படை, கருங்காலிக்குளம், தெகிளாங்குளம், குஞ்சுக்குளம், கோயில் புளியங்குளம், பூசாரிகுளம், இரணை இலுப்பைக்குளம், காக்கையன்குளம், மண்கிண்டி,புதுக்குளம், விளாத்திக்குளம்,வலைஞன்கட்டு வரை நீண்டு காணப்படுகின்றது.

தற்போது குறிப்பிடப்பட்ட கிராம மக்கள் இந்த வீதியால் பயணம் செய்வது மிகவும் சிரமமானதாக உள்ளது. இந்தக் கிராமங்கள் இருவேறுபட்ட பிரதேச சபைக்கு உட்பட்டவையாக இருக்கின்றமையால், யார் இந்த வீதியைச் செப்பனிடுவது என்ற மனோ நிலை காணப்படுகின்றதோ தெரியாது. இந்த வீதி பூவரசங்குளம் சந்தியிலிருந்து கோவில்புளியங்குளம், முத்துமாரி அம்மன் ஆலய வீதிக்கு சமீபமாக வவுனியா தெற்கு பிரதேச சபைக்கும் அதிருந்து வலைஞன் கட்டு வரை மாந்தை பிரதேச சபைக்கும் உரியது. இந்த வீதியின் ஊடாகப் பயணிப்பவர்கள் அபாயகரமான நிலையை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தப் பகுதியில் ஏராளமான வயல் நிலங்கள் உள்ளன. வயற் செய்கையாளர்களும், மேட்டுநில உப உணவுப்பயிர்ச் செய்கையாளர்களும் தாம் அறுவடை செய்த நெல்,தானியங்கள் மரக்கறி வகைகள் போன்றவற்றை மிகவும் கஷ்டப்பட்டு எடுத்துச் சென்று சந்தைப்படுத்துகின்றனர். இந்த வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளது. இரவு வேளைகளில் இந்தப்பாதையூடாகப் பயணிப்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. பிரசவ வேதனையால் துடிக்கும் பெண்களை இந்தப் பாதையூடாக இரவு வேளைகளில் வவுனியா கொண்டு செல்வது என்பது நினைக்க முடியாத காரியமாகும். இங்கிருந்து வவுனியா, பிரதான பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்குச் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நோயாளர்கள் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக கோவில் புளியங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் சந்தியிலிருந்து இரணை இலுப்பைக்குளம் வரை மோசமான நிலையில் காணப்படுகின்றது. இந்த இடைப்பட்ட தூரம் சைக்கிளில் போகவே 30 நிமிடங்களுக்கு மேல் எடுக்கின்றது. மனித வாழ்வைச் சிதைக்கும் இந்த வீதியை வீதிப் போக்குவரத்துத் திணைக்களமோ வட மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சரோ போக்குவரத்துக்கு ஏற்றதாக மாற்றித் தரவேண்டும் என்பதே முக்கிய கோரிக்கையாக உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் வீதிக்கு விமோசனம் வழங்க ஆவன செய்யுமாறு பணிவோடு வேண்டப்படுகிறது.

*வை. சேனாதிராசா.*

## பேசாலை யோசவாஸ் புஆம் வட்டார வீதிக்கு ஒளி கிடைக்குமா?

மன்னார் பேசாலைக் கிராமத்தில் புனித யோசவாஸ் வீதியின் இருமருங்கும் 20 தொடக்கம் 50க்கும் மேற்பட்ட ஏழை மீனவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்கள் தமது மீன்பிடித் தொழிலுக்கு இரவு வேளைகளில் செல்வதாயின் இருள் சூழ்ந்த வீதியாலேயே பயணிக்கின்றனர். நகரப்புறத்திற்கு அதிகாலை 4 மணிக்கான பஸ்ஸில் பயணிப்பதாயின் இருள் மூடிக் கிடக்கும் வீதியாலேயே செல்ல வேண்டிய துர்ப்பாக்கியநிலை காணப்படுகின்றது.

தேவாலய வழிபாடுகளான கிறிஸ்மஸ், ஈஸ்ரர், புனித வியாழன், வெள்ளி நிகழ்வுகள் இரவுவேளையில் இடம்பெறும். இந்தச் சடங்குகளில் கலந்து கொள்வதில் சிரமமாக உள்ளது. நாய்களின் அட்டகாசம் மற்றும் பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. இது தொடர்பாக மன்னார் பிரதேசசபைத் தலைவர் மார்ட்டின் டயஸ்ஸிடம் மனு ஒன்றையும் மக்கள் சமர்ப்பித்துள்ளனர். மன்னார் பிரதேச சபை தெருவிளக்குகளை அமைக்க உதவும் என மக்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

*தொ.கிறிஸ்ரியன்,பேசாலை.*

## கேலிச் சித்திரம்




# ஆசிரியர்களின் வேதனை பாரீர்

வன்னியில் தமது சேவைக் காலத்தை நிறைவுசெய்துவிட்டு, இடமாற்றத்துக்காக காத்திருக்கும் ஆசிரியர்களின் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. இடமாற்றம் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்று ஆசிரியர்களும், அதனை உடனே வழங்க முடியாது என வடமாகாண கல்வித் திணைக்களமும் விடாப்பிடி நிலையில் செயற்படுவதால் இந்தப் பிரச்சினை இப்போது பூதாகரமாகியிருக்கிறது.

இதன் எதிரொலியாக நேற்று இரவு 9.30 வரை வடக்கு மாகாண கல்வி அமைச்சரும், கல்வி அதிகாரிகளும் குறித்த ஆசிரியர்களால் சிறை வைக்கப்பட்டனர். இரவையும் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்பட்ட இந்த திடீர் சிறை வைப்புக் காரணமாக அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டதுடன் பொலிஸாரும் அங்கு குவிக்கப்பட்டனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர், கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய இந்த ஆசிரியர்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடமாற்றக் கடிதம் வழங்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. இதனால், நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கு ஆசிரியர்கள் படை எடுத்தனர். ஆயினும், அங்கிருந்த கல்வி அதிகாரிகளோ ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் வழங்கிய உறுதிமொழி குறித்து சிறிதும் அக்கறையற்றவர்களாக தம்பாட்டில் இருந்துவிட்டனர். பிற்பகல்வரை பொறுமை காத்த ஆசிரியர்கள் அலுவலகம் மூடும் வேளையில் கொந்தளிக்கத் தொடங்கினர். இதனால் அங்கு வெடித்தது போராட்டம். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலக வாயிலை இழுத்து மூடினர் ஆசிரியர்கள். இதனால், அலுவலகத்துக்குள் இருந்தவர்கள் உள்ளே மாட்டிக் கொண்டனர். இவர்களுள் மாகாணக் கல்வி அமைச்சர் குருகுலராஜாவும், கல்வி அமைச்சின் அதிகாரிகளும், மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளும் அடங்குவர். ஆசிரியர்களுடன் உயரதிகாரிகளும், கல்வி அமைச்சரும் பேச்சுக்களை மேற்கொண்டபோதும், அவை அனைத்தும் பயனற்றுப்போயின. ஆசிரியர்கள் பிரதான வாயிலை மூடித் திறப்பை எடுத்துக்கொண்டனர். தமக்கு இடமாற்றக் கடிதம் வழங்கப்படாவிட்டால் வாயிலைத் திறக்க மாட்டோம் என்று அவர்கள் உடும்புப் பிடியில் இருந்தனர்.

இருள் சூழத் தொடங்கியபோதும், ஆசிரியர்களின் போராட்டத்தில் சிறிதும் தளர்வில்லை. நேரம் இரவு 9.30 மணி ஆகிய போதும், ஆசிரியர்களுடன் இணைந்து ஆசிரியைகளும் வாயிலைவிட்டு அசையாது நின்றனர். நீண்டநாள்களாக அவர்கள் எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்காத விரக்தி நிலை அவர்களை ஆட் கொண்டிருந்தது. உறுதிமொழிகளை வழங்கிய மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கு இந்தப் போராட்டம் நல்லதொரு பாடமாக அமைந்தது. ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தை இவ்வளவு காலம் இழுத் தடித்து பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்ட அதிகாரிகளுக்கு நேற்று நல்ல பாடம் புகட்டப்பட்டது. தமது நலனை மட்டுமே நோக்காகக் கொண்டு செயற்பட்ட அவர்கள், ஆசிரியர்களின் நலனைப் புறந் தள்ளியமையால் – கணக்கெடுக்காமையால் ஆத்திரம் மேலீட்டால் நேற்று இந்த சிறை வைப்புப் போராட்டத்தில் குதித்தனர் ஆசிரியர்கள்.

தமது 5 வருட சேவைக்காலத்தை வன்னியில் பல கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் இந்த ஆசிரியர்கள் பூர்த்திசெய்திருந்தார்கள். குடும்பங்களை யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு, தமது சேவைக்காக வன்னியில் தங்கியிருந்த ஆசிரியர்களும் உள்ளனர். குழந்தைகளுடன் உள்ள ஆசிரியைகளில் பலர், ஒவ்வொருநாளும் அதிகாலையில் பஸ் பயணம் மேற்கொண்டு வன்னிக்குச் சென்று பணியை முடித்துவிட்டு, மீண்டும் இரவில் வீடு திரும்பும் மிகக் கஷ்டமான நிலையை எதிர் கொண்டிருந்தனர். இவ்வாறு தமது பணிக்காக குடும்பங்களையும் பிள்ளைகளையும் பிரிந்து அவர்கள் பட்ட வேதனை வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கு தெரியாததொன்றல்ல. தெரிந்தும் அவர்கள் தமது நலனை மட்டுமே சிந்தித்தார்களே அன்றி, எமது நலனை நோக்கவில்லையென குற்றஞ்சாட்டினார்கள் குறித்த ஆசிரியர்கள்.

ஆசிரியர்கள், அதிபர்கள் இடமாற்றத்தில் அடிக்கடி பிரச்சினையை எதிர்நோக்குவது வடக்கு மாகாண கல்வித் திணைக்களம்தான். ஆயினும், திணைக்கள அதிகாரிகள் பட்டும் திருந்தாத நிலையிலேயே உள்ளனர். ஏனைய மாகாணங்களில் உள்ள கல்வித் திணைக்களங்களில் ஆசிரியர்கள், அதிபர்கள் இட மாற்றம் உரிய ஒழுங்கமைப்பின் கீழ் திட்டமிட்டு குறித்த காலப்பகுதியில் இடம் பெறுவதால் அங்கு இந்தப் பிரச்சினைகள் எழுவதில்லை. ஆனால் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு இது தீராத நோயாகிவிட்டது.

அதிபர், ஆசிரியர் இடமாற்றத்தில் உரிய–சரியான ஒழுங்கமைப்பு இல்லாமையே இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணம். எனவே வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இந்த இடமாற்றம் தொடர்பில் சரியான ஒரு திட்டத்தை வகுத்து உரிய காலப் பகுதியில் அதனைச் செயற்படுத்தி இப்படியான பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே எதிர்காலத்தில் சிறந்தது.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் கைதிகளின் கோரிக்கை அரசினால் கவனத்தில் எடுக்கப்படுமா?

சாதாரண மனித வாழ்வின் இயல்புத் தன்மையை இழந்துவிடும் நிலையில் நான்கு சுவர்கள் சூழ்ந்த கூண்டுக்குள் நாம் முடக்கப்பட்டு உள்ளோம். சீரழிந்து கொண்டிருக்கும், ஒரு தொகுதி மக்களைத் தூக்கி நிறுத்தமாறு, கருணை வேண்டித் தங்களிடம் கரம் நீட்டுகிறோம்--

முழுநாட்டினதும் மக்கள், இன்று அபிவிருத்தி, சமாதானம், சுகவாழ்வை அனுபவித்து வரும் வேளை, நாம் ஏமாற்றத்தையே உணர்கிறோம் --

நாம் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நியாயத்தை, சிங்கள மக்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்தச் சூழமைவில், தாங்கள் நல்ல முடிவை மேற்கொள்வீர்கள் என்று நம்புகிறோம்--

தமக்கு,பொதுமன்னிப்பு வழங்கி,விடுதலை செய்யுமாறு கோரி, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த மனுவில் தமிழ் அரசியல் கைதிகள் மேற்கண்டவாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இந்த நாட்டின் போர்ச்சூழல், அதனால் அரசுகள் மேழெழுப்பிய அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் ஆகியவற்றின் பெயரால், தாம் கைது செய்யப்பட்டு, கடந்த பல ஆண்டுகளாக சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பது குறித்தும் அவர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டி உள்ளனர்.

சூழ்நிலைக் கைதிகளான தாம் நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில், 320 பேர்கள் வரை அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்--

குற்றம் இழைத்திருப்பினும்கூட, அதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலத்தை விடவும் அதிக ஆண்டுகள் தாம் “தண்டனை” அனுபவித்து வருவதாகவும்--

தமது பூவுலக வாழ்க்கைக் காலத்தின் அரைவாசிப் பகுதிக்கும் அதிகமான வருடங்களை சிறைக் கூடங்களிலேயே தொலைத்திருப்பதாகவும்-- அவர்கள் தமது மகஜரில் சுட்டிக் காட்டி உள் ளனர்.

ஜனாதிபதிக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு மிக உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

மனிதாபிமானம், மனித நேயம் என்பன பூவுலகில் மலினமுறல் ஆகாது. ஒவ்வாத சட்டங்களை முன்னிறுத்தி, தனது பிரசைகளை உடலாலும் மனதாலும் சித்திரவதை செய்வது, கொடுங்கோல் ஆட்சி ஊடாக மனித விழுமியங்களைக் காலால் மிதித்து சர்வாதிகாரம் செய்வதெல்லாம்--

ஜனநாயக ஆட்சி நிலவும் தேசங்களுக்கு ஒவ்வாதவை, ஒவ்வாமை (Alergy) கொண்டவை என்று நிராகரிக்கப்படுவது மேலெழுந்து வருகிறது.

அங்கெல்லாம் நீதிமன்றத் தீர்ப்பால் பாதிக்கப்பட்டோர் தீர்ப்புக்கு எதிராக , நட்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்வது நியமமாகவும், வழமையாகவும் வளர்ந்து வருகிறது.

அமெரிக்காவில், நீதிமன்றத்தால் சிறைத்தண்டனை வழங்கப்பட்ட ஒருவர், பத்தொன்பது வருடங்களின் பின்னர் அண்மையில் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டதன் பேரில் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்திருக்கும் தகவல் வெளிவந்திருக்கிறது.

இத்தகைய புதுயுக காலத்திலும் முந்திய கொழும்பு அரசு அதனைக் கைக்கொள்ளவோ, கடைப்பிடிக்கவோ முன்வரவில்லை என்பது இந்த நாட்டின் கறுப்புப் புள்ளி எனலாம்.

ஆனால், இலங்கையிலோ, விசாரணையும் இன்றி, தீர்ப்பும் இன்றி தமிழ் அரசியல் கைதிகள் 320 பேர் சிறைகளில் பல ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். “சூழ்நிலைக் கைதிகளான” அவர்கள் தமது எதிர்காலத்துக்கு ஒளி ஏற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் நியாயமான வேண்டுதலை- கோரிக்கையை - புதிய அரசு நிறைவேற்ற முன்வரட்டும். அதில் மனம் கொள்ளுமா....?

# காங்கேசனில் வசந்த மாளிகை; யாருக்காக, இது யாருக்காக...!

*சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து*
*ரெங்கன்*

> “இதில் விரயமாக்கப் பட்டுள்ள பணத்தை அங்கு போரினால் பாதிப்புற்றுள்ள மக்களுக்காக பயன் படுத்தியிருக்கலாம். அவர்களில் அனேகர் தலைக்குமேல் கூரை கூட இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள்”

கடந்த கால ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதில் அநாவசியமான காலதாமதம் ஏற்படுவதாகத் கூறப்பட்டாலும் அதில் முழுக்கவும் ஐ.தே.கவை குற்றம் சாட்டிவிடமுடியாது. ஆளும் கட்சியினர் களநிலைமைகளை சரியாகப் புரிந்து கொள்ளாமல் போய்விட்டனர். எவ்வாறு ஆரம்பிப்பது என்பது பற்றி ஆராயாமல் கண்ணை மூடிக்கொண்டு காரியத்தில் இறங்கி விட்டார்கள் என்று கூறப்படுகின்றது. புலன் விசாரணைகளில் ஈடுபடும் பிரிவின், குறிப்பாக பொலிஸ் திணைக்களத்தில் இருப்பவர்களில் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் முன்னைய அரசினால் நியமிக்கப்பட்டவர்கள். விசாரணைக்குட்படுத்தப்படவிருந்தவர்கள் பலருக்கு முன்கூட்டியே கேள்விக் கொத்துக்கள் வழங்கப்பட்டிருந்தமை ஜனாதிபதி சிறிசேனவுக்கு தெரிய வந்துள்ளது. சில சந்தர்ப்பங்களில் நுணுக்கமான கேள்விகள் கேட்கப்படாமல் தவிர்க்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. சில அமைப்புகளில் அலுவலர்கள் பற்றாக்குறை இருந்த போதிலும் மேலதிக அலுவலர்கள் நியமிக்கப்படுவதில் அக்கறை செலுத்தப்படவில்லை.

இந்த விடயங்களைக் கையாள வேண்டிய பணி திறமையற்ற உயர் அதிகாரிகளிடம்கொடுக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. இந்தக் குறைபாடுகளை அல்லது பல வீனங்களைக் கண்டுபிடித்து நிவர்த்தி செய்யாமல் போனமையே அதிக குறைகேட்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியிருந்தது. இதனால் ஜனாதிபதியினால் கூட சிறிது சிறிதாகவே நடவடிக்கைகளை எடுக்கும் நிலை ஏற்பட்டிருந்தது. அண்மையில் ஒரு முக்கிய அமைச்சில் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை, விசாரண்ணகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலேயே இடமாற்றம் செய்து அவர் உத்தரவிட வேண்டியிருந்தது.

இதில் ஒரு நல்ல விடயம் நடந்திருப்பது என்னவென்றால் அமைச்சரவை அனுமதியைப் பெற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனியாக நிதி குற்றங்கள் தொடர்பான புலனாய்வுப் பிரிவு ஒன்றினை அமைத்திருப்பதாகும். இந்தப் பிரிவானது ஊழல் எதிர்ப்பு செயலகம் ஒன்றின் கீழ் இயங்குகின்றது. இது பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் புகார்களை ஆராய்ந்ததன் பின்னர் அதற்குரிய விசாரணை அமைப்புக்களிடம் ஒப்படைக்கின்றது. இந்தச் செயலகத்துக்கான அலுவலர்களை ஜனதா விமுக்தி பெரமுனவின் தலைவர் அனுரகுமார திசநாயக்க தம் கைப்பட தெரிவு செய்துள்ளார். இந்தப் பிரிவு ஏற்கனவே மூன்று வெவ்வேறு நிறுவனங்கள் தொடர்பான புலனாய்வுகளை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது. இதில் ஒன்று மக்கள் லீசிங் கொம்பனியிடமிருந்து பெற்ற 140 மில்லியன் ரூபாவை ஒரு நிறுவனம் மோசடி செய்திருப்பதாகும். இந்த நிறுவனம் முன்னாள் வெளியுறவுத்துறை கண்காணிப்பு எம்.பியும், முன்னாள் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவருமான சஜின் வாஸ் குணவர்த்தனவுடன் சம்பந்தப்பட்டது. அவரிடம் ஏற்கனவே ஊழல் மற்றும் லஞ்சப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகள் நடத்தி வாக்கு மூலம் பெற்றிருக்கிறார்கள்.

ராஜபக்ஷவின் நம்பகத் தன்மைக்கு கடந்த வாரம் மேலும் ஓர் அடி விழுந்ததைப் பார்க்க முடிந்தது. காங்கேசன் துறையில் 2.5 பில்லியன் ரூபா செலவில் ஜனாதிபதி மாளிகை ஒன்று கட்டப்படுவது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியாகியிருந்த அறிக்கைக்கு ராஜபக்ஷ மறுப்பு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அது ஒரு சர்வதேச உறவு மையம் என்று ராஜபக்ஷ கூறியிருந்தார். இதேபோன்றதொரு மாளிகை அருகம்பேயிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தியிருந்தார்.

மலைச்சரிவுகளில் அமைக்கப்பட்டுள்ள வெவ்வேறு வசிப்பிடப் பிரிவுகளில் எலிசபெத் மகாராணியின் பக்கிம்ஹாம் மாளிகையில் காணப்படும் சொகுசு வசதிகளை விட திறமானவை என்று கூறப்படுகின்றது. இவ்வளவு பெரிய செலவில் இப்படியான சர்வதேச உறவு மையங்கள் எதற்குத் தேவைப்படுகின்றன என்பது பெரிய கேள்வியாக எழுந்துள்ளது. அம்பாந்தோட்டையிலும் இப்படியான சர்வதேச மாநாட்டு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. ஆனால் இது வரை எந்த சர்வதேச மாநாட்டுக்கும் அது பயன்படுத்தப்படவில்லை. ராஜபக்ஷ தம் அறிக்கையில் காங்கேசன்துறையிலும் அருகம்பேயிலும் கட்டப்படுகின்ற கட்டடங்கள் ஜனாதிபதி மாளிகைகளாகக் கட்டப்படவில்லை. இலங்கையில் சர்வதேச மாநாடுகள் நடைபெறும்போது பயன்படுத்தப்படுவதற்காகவே கட்டப்படுகின்றன. வடக்கு கிழக்குக்கு வெளிநாட்டுப் பிரமுகர்கள் வருகை தரும் போதும் பயன்படுத்தப்படுவதாக இருக்கும். இவை ஜனாதிபதி மாளிகைகள் என்று காட்சிப் படுத்தப் பார்ப்பது கடந்த சில மாதங்களாக என்மீது அவதூறு காண்பிக்க எடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளில் ஒன்றே என்று குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சரவைக்கு இப்படியான திட்டங்களை யார் பரிந்துரை செய்திருந்தாலும் வரியிறுப்பாளர்களின் பணம் இவ்வகையில் வெளிப்படையாக செலவு செய்திருக்க வேண்டியதில்லை. பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவே வெளிநாடுகளிடம் கடனுக்காக கை[illegible]தும் நிலையிலுள்ள அரசு வெளிநாட்டு முக்கியஸ்தர்களுக்காக இவ்வாறு ஆடம்பரமான மாளிகைகளை அமைக்கத்தான் வேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. ராஜபக்ஷவின் விளக்கம் ஏற்கனவே காணப்படும் நிலைமையை மேலும் மோசமாக்கவே உதவியுள்ளது. பொது மக்களின் பணம் இவ்வாறுதான் வீணடிக்கப்பட்டுள்ளது என்பதை இது நிரூபிப்பதாய் உள்ளது.

முன்னர் ஜனாதிபதி செயலகம் விடுத்திருந்த அறிவித்தலில் பின்வரும் தகவல் தரப்பட்டிருந்தது. காங்கேசன்துறையில் ஜனாதிபதி மாளிகையின் கட்டுமானப் பணிகள் 2012 ஜூலை மாதம் கடற்படையினரால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கான செலவு ரூ 2000 மில்லியன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் அது முற்றுப் பெறும்போது தளபாடங்களையும் சேர்த்தால் செலவு 2500 மில்லியனாக இருக்கக் கூடும். 100 ஏக்கர் நிலப்பகுதியில் இந்தக் கட்டடம் அமையவிருக்கிறது. அதில் 20 அறைகள், ஒரு தேகப் பயிற்சிச் சாலை, இரண்டு நீச்சல் தடாகங்கள், அமைச்சர்களின் கூட்டம் நடைபெறுவதற்கான ஒரு மண்டபம், கடல் நீரைச் சுத்திகரிப்பதற்கான இரண்டு சுத்திகரிப்பு நிலையங்கள் இவை ஒவ்வொன்றினதும் பெறுமதி 20 லட்சம் ரூபாய். இதுவும் இப்போது யாழ்ப்பாண மக்கள் தமது குடிதண்ணீர் அசுத்தமாக்கப்பட்டுவிட்டது என்று புகார் கூறிக் கொண்டிருக்கும் நிலையில் ஏறத்தாழ 300 கடற்படையினர் இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 90 வீத வேலைகள் முடிவடைந்துள்ளன. அண்மையில் அந்த இடத்தைச் சென்று பார்வையிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தக் கட்டடத்தைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்ற வகையில் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.



காங்கேசன்துறை மாளிகைக்கு விரயமாக்கப்பட்டுள்ள பணத்தை அங்குபோரினால் பாதிப்புற்றுள்ள மக்களுக்கு பயன்படுத்தியிருக்க முடியும். அவர்களில் அநேகர் இன்னமும் தமது தலைக்கு மேல் பாதுகாப்பான கூரை கூட இல்லாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

# அங்கு மோடிக்கு சவாலாக கெஜ்ரிவால் அதே பாணியில் இங்கு சோபித தேரர்

சிங்கள மூலம்–உப்புல் யோசெப் பெர்னாண்டோ (மவ்பிம)
தமிழில்–விஎஸ்ரீ

தமது அண்மைய இந்தியப் பயணத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமரைச் சந்தித்த சமயம், பிரதமர் மோடி டில்லி மாநிலத் தேர்தலில் தமது பா.ஜ.கட்சியின் தோல்வியைச் சந்தித்த நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபாலவை வரவேற்க வேண்டியிருந்தது. டில்லி மாநிலத் தேர்தலில் மோடி அலை நலிவு கண்டமை மோடியைக் கூட ஆச்சரியப்பட வைத்திருந்தது. நல்லாட்சி என்ற கொள்கை முன்வைப்பின் மூலமே மோடி அலை தோற்றம் பெற்றது. இலங்கையிலும் ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால முன்வைத்ததும் இந்த நல்லாட்சிக் கொள்கை நிலைப்பாடே.

மைத்திரிபால,மோடியைப்போன்றே உடுப்பு அணிய ஆரம்பித்தார். இதனாலேயே இந்தியாவில் எழுச்சி பெற்ற மோடி அலையைப் போன்றே இலங்கையிலும் மைத்திரி அலை எழுச்சி பெற்றதாக விமர்சிக்கப்பட்டது.


தாம் பதவிக்கு வந்தால் அரசியல்வாதிகளால் சூறையாடப்பட்ட பொது மக்களது நிதியை மீண்டும் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மோடி வாக்குறுதி அளித்தார். ஊழல் புரிந்தோரைத் தண்டிப்பேன் என தேர்தல் மேடைகளில் பரப்புரை செய்தார். கறுப்புப் பணத்தை வெளிக்கொண்டு வருவேன் என பொதுமக்களுக்கு வாக்குறுதி அளித்தார்.


ஆனால் மோடி பிரதமர் பதவியை ஏற்ற பின்னர் தமது தேர்தல்கால வாக்குறுதிகளில் ஒன்றைத் தானும் அவரால் நிறைவேற்ற இயலவில்லை. ஊழல் புரிந்தோரை சட்டப்படி தண்டிக்கத் தம்மால் இயலாவிட்டாலும் கூட, தம் மீதான நல்லெண்ணம், நம்பிக்கை காரணமாக டில்லி மாநிலத் தேர்தலில் வாக்காளர்கள் தமது தரப்புக்கே வாக்களித்து வெற்றிபெற வைப்பர் என மோடி நம்பினார். ஆனால் அந்தத் தேர்தலில் வாக்காளர்கள் ஆம் ஆத்மி கட்சிக்கும், அந்தக் கட்சியின் தலைவர் கெஜ்ரிவாலுக்கும் பேராதவு வழங்கி வெற்றி பெற வைத்தனர்.

யார் இந்த கெஜ்ரிவால்? இந்தியாவில் ஊழல் எதிர்ப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தவரே அவராவார். அதற்காக நாட்டு மக்களை ஒன்று திரட்டியவர். இந்த கெஜ்ரிவால் முன்னெடுத்த திட்டத்தைத் தாமும் கையிலெடுத்தே பதவிக்கு வந்தவர் மோடி. மூன்றாவது அணியான கெஜ்ரிவாலின் கட்சியை விட முக்கிய எதிர்க்கட்சியான பா.ஜ.கட்சியை பதவிக்குக் கொண்டு வருவதன் மூலம், அதிகாரத்தில் இருந்த மன்மோகன்சிங்கின் தலைமையிலான காங்கிரஸ் அரசின் ஊழல் மோசடிக்காரர்களைத் தண்டிக்க இயலுமென நாட்டு மக்கள் நம்பினர்.

### மோடிக்கு சவாலாக கெஜ்ரிவால்

நாட்டு மக்களது அந்த நோக்கத்தைத் தாம் நிறைவேற்றி வைப்பதாக மோடி உறுதியளித்தார். அதனாலேயே நாட்டு மக்கள் மோடியைப் பதவியில் அமர்த்தினர். கெஜ்ரிவால் பின்தள்ளப்பட்டார். ஆனால் மோடியால் தமது வாக்குறுதியை நிறைவேற்ற இயலவில்லை. அதனாலேயே தம்மால் புறக்கணிக்கப்பட்ட கெஜ்ரிவாலை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வர டில்லி மாநில வாக்காளர்கள் தீர்மானித்தனர். முடிவில் மோடியை வெட்கமடைய வைத்து கெஜ்ரிவால் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். டில்லி மாநில சட்டசபையின் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளார்.



கெஜ்ரிவால் உண்மையில் இலங்கையின் மாதுளுவாவே சோபித தேரருக்கு ஒப்பானவர். இலங்கையிலும் ஊழல் மோசடிகளுக்கு எதிரான மக்கள் இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் சோபித தேரரே. இந்தியாவில்போன்றே இலங்கையிலும் கல்விமான்களும் புத்திஜீவிகளும் சோபித தேரரின் பின்னால் ஒன்று திரண்டனர். ஜனாதிபதித் தேர்தலை மஹிந்த பிரகடனப்படுத்திய வேளையில் சோபித தேரரின் அமைப்பின் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ஒருவரை தேடிக் கண்டு பிடிப்பது சிரமமாய் அமைந்தது.

சோபிததேரரின் அமைப்பும் எதிர்க்கட்சிகள் தரப்பும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் நியமனம் குறித்த கயிறிழுப்பில் ஈடுபட்டிருந்த வேளை, மைத்திரிபால சிறிசேன அரங்கத்துக்கு வந்தார். இந்தியாவில் கெஜ்ரிவால், மோடியை எதிரணிப் பொது வேட்பாளராக ஏற்காத போதிலும், இலங்கையில் சோபித தேரர் மைத்திரிபால சிறிசேனவை பொது எதிரணி வேட்பாளராக ஏற்றுக்கொண்டார். சோபித தேரரின் ஊழல் மோசடிகளுக்கு எதிரான அமைப்பின் நிபந்தனைகளுக்கு மைத்திரிபால சிறிசேனவும் ஒப்புக் கொண்டார்.

### சோபித தேரர் சீற்றம்

மைத்திரிபால அரசின் உயர் மட்டத் தீர்மானங்களை மேற்கொள்ளும் சபையான நிறைவேற்றுச் சபையில் தாமும் இணைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட போதிலும் இது வரை சபையின் எந்தவொரு கூட்டத்துக்கும் தாம் அழைக்கப்படவில்லை எனதற்போது சோபித தேரர் குற்றம் காட்டுகின்றார். நாட்டுமக்களுக்குப் புதிய அரசு வழங்கிய நூறு நாள்கள் வேலைத்திட்டம் உரிய வேளைக்குள் நிறைவேற்றப்படாவிட்டால் தாம் வீதியில் இறங்கிப் போராடப் போவதாக சோபித தேரர் அரசுக்கு எச்சரிக்கை விடுத்து வருகிறார். தோசைக்கல் சூடேறியுள்ள வேளையில் தோசை தயாரித்து முடிக்கப்பட வேண்டும் என்பது சோபித தேரரின் நிலைப்பாடு.

மைத்திரிபால அதனை மறந்து போயுள்ளார். ஆனால் மைத்திரிபாலவின் நிர்வாகத்தின் கீழ் பொலிஸ் துறையும் நீதித்துறையும் உள்ளடங்கி இருக்கவில்லை. ஊழல் மோசடிக் காரர்கள் இதுவரையில் கைது செய்யப்படாமைக்கான காரணம் தனக்கும் புரியவில்லை என மைத்திரிபால கூறியதற்குக் காரணம் இதுவே.

அண்மையில் மோடியுடனான தமது சந்திப்பின்போது, இலங்கை அரசியல்வாதிகளது வெளிநாடுகளிலுள்ள கறுப்புப் பணத்தை இலங்கைக்குக் கொண்டு வர இந்தியாவின் நிதிப் புலனாய்வுப் பிரிவின் உதவியைப் பெற்றுக் கொள்ள உதவும்படி கோரியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

### மைத்திரிக்கு மோடி கூறிய இரகசியம்

ஊழல் மோசடிக்காரர்களைக் கைது செய்வதை உரிய முறையில் செய்யாது விட்டால் உங்களுக்கும் எனக்கு நேர்ந்த கதிதான் நேரக் கூடுமென மோடி, மைத்திரிபாலவின் காதுக்குள் இரகசியமாகக் கூறியிருப்பாரோ என்பது தெரியவில்லை. எது எவ்வாறான போதிலும் மைத்திரிபால, இலங்கையின் கெஜ்ரிவால் எனக் கருதத்தக்க சோபித தேரருடன் முரண்படாது, சோபிததேரரின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார். ஏனெனில் ஒளித்து மறைத்துப் பாதுகாக்க வேண்டிய திருடர்கள் எவரும் மைத்திரிபாலவுக்குக் கிடையாது என்பதாக இருக்கக் கூடும். இந்த இடத்தில் ஒளித்து மறைத்துப் பாதுகாக்கும் இலச்சினை ஐ.தே.கட்சியின் தரப்பிலேயே பதிவாகிறது.

ஐ.தே.கட்சி அமைச்சர்கள் முன்னைய ஊழல் மோசடி அரசியல்வாதிகளைப் பாதுகாக்க முற்படுவதாக ஜே.வி.பி.தற்போது குற்றம் சுமத்தி வருகிறது. உண்மையில் திருடர்களைப் பாதுகாப்பதற்கு மேலாக அவர்களைக் குற்றமற்றவர்கள் எனக் காட்டவே ஐ.தே.கட்சி அமைச்சர்கள் முயல்கின்றனர். ஊழல் மோசடிக்காரர்களைப் பிடிக்க இயலாது விட்டால் வாயை மூடிக்கொண்டிருந்தால் பரவாயில்லை.

மிதக்கும் ஆயுதக் கப்பல் விவகாரம், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாய் அமையும் ரக்னா லங்கா நிறுவன விவகாரம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டோர் மீது எவ்வித சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ராஜபக்ஷ தரப்பினர் அரச தரப்பை நோக்கிக் கேலிச் சிரிப்புச் சிரிக்கும் நிலை நிலவுகிறது. ஏனெனில் ராஜபக்ஷ தரப்பினர் மீதான சகல குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அவர்களது தரப்புக்காக வக்காலத்து வாங்குபவர்களாக அரச தரப்பு அமைச்சர்களே இருந்து வருகின்றனர்.

இந்தச் சுத்துமாத்துக்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க இயலாத நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் சோபித தேரர், இந்தியாவின் கெஜ்ரிவால் ஆக நேருமானால் அரசின் கதி அதோ கதிதான். சோபித தேரர், முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல்ஜயசூரிய உள்ளிட்ட கல்விமான்கள், புத்திஜீவிகளைத் தம்முடன் இணைத்துக் கொண்டு புதுக் கட்சியொன்றை நிறுவி எதிர்வரும் பொதுத் தேர்தலில் களம் இறங்குவாரானால் முக்கிய கட்சிகளின் தீவிர ஆதரவாளரல்லாதோர், இளம் தலைமுறையினர் தரப்புக்கள் சோபித தேரர் தரப்பால் கவரப்படுவது நிச்சயம்.

**அவர் விஸ்வரூபம் எடுத்தால் ஆபத்து**

மைத்திரிபால சிறிசேன என்ன ஆனபோதிலும் நாட்டின் ஜனாதிபதி என்பதால் அவருக்கு அதுவோர் பிரச்சினையாக இருக்கப் போவதில்லை. இந்தியாவில் ராகுல் காந்தியின் கவர்ச்சியை வைத்துக்கூட காங்கிரஸ் கட்சியால் டில்லி மாநிலத் தேர்தலில் எதுவுமே செய்ய இயலாது போனதிலிருந்து, இலங்கையில் சுதந்திரக் கட்சியிலுள்ள ஊழல் மோசடிக்காரர்கள் மற்றும் ராஜபக்ஷ தரப்பினரால் மீண்டும் அரசியலில் தலைதூக்குவது அத்தனை இலேசான காரியமல்ல என்பது புலனாகிறது. மோடியின் அரசு மக்களது அதிருப்திக்கு ஆளாகியமையால் தாம் அரசியலில் தலையெடுக்கலாம் என்ற காங்கிரஸ் தரப்பினரின் கணிப்பீடு தப்புக்கணக்காகப் போயிற்று.

இந்திய மக்கள் மீண்டும் அவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவர்கள் மோடி அரசின் மீதான வெறுப்பின் காரணமாகப் புதிய தலைமைத்துவமொன்றை புதிய சக்தியொன்றை நாடிச்சென்றனர். அந்தப் புதிய நம்பிக்கை நட்சத்திரமாக கெஜ்ரிவால் அமைந்தார்.

எனவே இலங்கையில் கெஜ்ரிவால்கள் உருவாக இடமளிக்கக் கூடாது என்றால் அரசு ஊழல் மோசடிக்காரத் திருடர்களுடன் விளையாடும் திருடன்–பொலிஸ் விளையாட்டை நிறுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 500 | 700 | 700 | 700 | 600 |
| நண்டு | 250 | 300 | 350 | 300 | 250 | 400 |
| கணவாய் | 500 | 550 | 500 | 500 | 600 | – |
| பாரை | 600 | 500 | 500 | 500 | 600 | 370 |
| சுறா | 550 | 500 | 600 | 600 | 700 | 480 |
| சீலா | 300 | 350 | 400 | 450 | 500 | 300 |
| விளை | 600 | 400 | 550 | 500 | 500 | 350 |
| முரல் | 250 | 300 | 400 | 350 | 350 | 250 |
| கும்பிளா | 400 | 250 | 400 | 450 | 450 | 300 |
| கிழாக்கன் | 300 | 500 | 300 | 400 | – | 300 |
| ஒரா | 400 | 300 | 350 | 350 | – | 300 |
| திரளி | 150 | 200 | 250 | 250 | 200 | – |
| நகரை | 150 | 200 | 150 | 350 | – | – |
| சூடை | 100 | 100 | 150 | 150 | 150 | 60 |
| ஒட்டி | 150 | 150 | 150 | 200 | 200 | – |
| திருக்கை | 150 | 300 | 250 | 250 | 250 | 150 |
| பாலை | 450 | 300 | 250 | 400 | – | – |
| வாளை | 150 | 100 | 200 | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 100 | 80 | 100 | 100 | – |
| மதனம் | 150 | 200 | 180 | 250 | 300 | 200 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### உன்னைப் பற்றியே சிந்திக்காதே

நிலையில் இருந்து பிறழாதவன், மன சாந்தமுடையவன், இரக்கமும், கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன் மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்.

தீமையைச் செய்வதால், எமக்கு நாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் எமக்கு நாமே நன்மை தேடிக் கொண்டவர்களாகிறோம்.

சித்தாந்தங்களையும், தத்துவங்களையும் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை விளையப்போகிறது. நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடைய தாக்குங்கள்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல், பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால், உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும். எம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டே இருப்பது சுயநலங்களிலேயே மிகப்பெரிய பாவமாகும். சுயநலஎண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

## நேரிய வழிகளைக் கடைப்பிடிப்போம்

மனிதன் தன் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகள், கவலைகள், துன்பங்களில் இருந்து விடுதலை பெற ஆலயங்களுக்குச் செல்கின்றான். ஆலயம் என்பது ஆண்டவனின் இல்லம். மனிதனுக்கு மன நிம்மதியை கொடுக்கின்ற புனித இடம். இவ்விடங்களில் தூய்மை காப்பது அனைவரின் பொறுப்பாக இருக்கின்றது. கடவுள்வாழும் இடங்களை கள்வர் குகை ஆக்கக் கூடாது. வியாபாரக் கூடங்களாக மாற்றக் கூடாது. இயேசுவின் காலத்திலே ஜெருசலேம் ஆலயத்திலே ஆடு,மாடு, புறா விற்றவர்களைச் சாட்டையால் அடித்துத் துரத்தி ஆலயம் என் தந்தையின் இல்லம், அதனைக் கள்வரின் குகை ஆக்காதீர் என்று வியாபாரிகளை விரட்டினார்.

கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம் என்று எம் முன்னோர்கள் எமக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். இன்று ஆள்களும் இல்லை ஆலயங்களும் உடைக்கப்பட்டு கானகமாக எம் மக்களின் வாழ்விடங்கள் இருந்து கொண்டே இருக்கின்றன. இது அரசியல் சூழ்நிலையாக இருந்த போதிலும் மக்கள் வாழும் இடங்களிலும் இன்று ஆலயங்கள் புனிதத்தின் இடமாக மதிக்கப்படுவதிலும் பார்க்க வியாபாரத்தின் சுரண்டலுக்கான இடமாகக் கொள்ளப்படுவது ஆன்மிக வாதிகளுக்குக் கவலை தருகின்ற முக்கிய விடயமாகும்.

### தவக்காலச் சிந்தனை

முன்னர், ஞாயிறு தினத்தின் முக்கியத்துவம், தவக் காலத்தின் பக்தி நிலை, ஆலயத் திரு விழாக்களின் புனிதத்துவம், தான தருமங்களின் பெறுமதிநிலை, இவைகள்; இன்று கடமைகளில் ஒன்று, வேலை இல்லாதவர்களின் வேலை . அவர்களை விட எங்கள் விழாவின் வேலைப்பாடுகள் உச்சமானவை, வலக் கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாத தான தருமங்கள் விளம்பரம் செய்து பிரசாரப்படுத்தும் நிலைகள் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் உருவாக வேண்டிய இணைப்பை பிரிக்கின்றவைகளாக மாற்றம் பெற்று வருகின்றன.

கூட்டங்கள் வேடிக்கை பார்ப்பதற்கே. உணர்வுபூர்வமான உள்ளங்கள் ஊனமாகிவிட்டன. நல்ல சமாரித்தர்கள் விமர்சகர்களாகி விட்டார்கள். பரிசேயக் கட்சிகள் பல இடங்களிலும் பெருகிக் காணப்படுகின்றன. அன்பு செய்பவன் வாழத் தெரியாதவன், மன்னிக்கிறவன் இயலாதவன், கணினி வந்த பின்னர் கற்பிப்பவர்களும் கணிப்பில் இல்லாதவர்கள் என்ற மனப்பாங்கு சமூகத்தில் புரையோடிப் போகும் நிலை விரைந்து கொண்டு இருக்கின்றது. காலத்தின் அறிகுறிகளை அறியும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய சரியான வழிகளையும் பின்பற்றாமல் விடக்கூடாது. நாளைய சந்ததிக்கு எம்வாழ்வின் முன்மாதிரியை வழிகாட்ட விசுவாசத்தில் உறுதி உள்ளவர்களாக வாழ முற்படுவோம்.

அன்ரனி பீற்றர்,
ஆசிரிய ஆலோசகர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 1 | 4 | | | 9 | 6 |
| | 2 | | | 3 | 8 | 4 | | 7 |
| | 1 | | | | 2 | | | 8 |
| | | 3 | 8 | 2 | 6 | | | |
| | | | 4 | | 7 | | | |
| | | | 3 | 1 | 9 | 8 | | |
| 1 | | | 9 | | | | 4 | |
| 3 | | 2 | 5 | 6 | | | 8 | |
| 9 | 4 | | | 8 | 1 | 3 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 3 | 2 | 6 | 7 | 4 | 5 | 1 |
| 7 | 5 | 1 | 8 | 9 | 4 | 6 | 3 | 2 |
| 6 | 4 | 2 | 3 | 5 | 1 | 7 | 8 | 9 |
| 3 | 2 | 6 | 5 | 8 | 9 | 1 | 7 | 4 |
| 8 | 9 | 7 | 1 | 4 | 3 | 2 | 6 | 5 |
| 5 | 1 | 4 | 6 | 7 | 2 | 8 | 9 | 3 |
| 2 | 7 | 5 | 9 | 1 | 6 | 3 | 4 | 8 |
| 1 | 6 | 9 | 4 | 3 | 8 | 5 | 2 | 7 |
| 4 | 3 | 8 | 7 | 2 | 5 | 9 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை.. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## சத்து நிறைந்த பழைய சோறு

முதல் நாள் சோற்றில் நீரூற்றி, மறுநாள் சாப்பிடும் இந்த பழைய சோற்றில் தான் விற்றமின் பி6, விற்றமின் பி12, ஏராளமாக இருக்கின்றன என்கிறது புது ஆய்வு. தவிரவும் உடலுக்கு, குறிப்பாக சிறு குடலுக்கு நன்மை செய்து நம் உணவுப் பாதையையே ஆரோக்கியமாக வைத்திருக்கிறதாம்! கூடவே இரண்டு சிறிய வெங்காயம் சேரும்போது, நோய் எதிர்ப்பு சக்தி அபரிமிதமாக பெருகுகிறதாம். அப்புறம் பன்றிக் காய்ச்சல் என்ன, எந்தக் காய்ச்சலும் நம்மை அணுகாது ! காலையில் சிற்றுண்டியாக இந்த பழைய சாதத்தைக் குடிப்பதால், உடல் லேசாகவும், அதே சமயம் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது. இரவே தண்ணீர் ஊற்றி மூடி வைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பக்டீரியாக்கள் இதில் உருவாகின்றன. மறுநாள் இதை குடிக் கும் போது உடல் சூட்டைத் தணிப்ப தோடு குடல்புண், வயிற்று வலி போன்றவற்றையும் குணப் படுத்தும். அதுமட்டுமில்லாமல் இதிலிருக்கும் நார்ச்சத்து, மலச்சிக்கல் இல்லாமல் உடலை சீராக இயங்கச் செய்கிறது. இந்தப் பழைய சாதம் உணவு முறையை சில நாள் தொடர்ந்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் கட்டுக்குள் வந்துவிடும், உடல் எடையும் குறையும்.

## நாளை

மாசி—28
வியாழக்கிழமை
12.03.2015

திதி: ஷஷ்டி மு.ப.07.33 வரை
நட்சத்திரம்: அனுசம் மு.இ.09.16 வரை
சுபநேரம்: 07.52-09.22 வரை
இராகுகாலம்: 01.52-03.22 வரை

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20–40 | 20 | 30–50 | 60 | 20–40 | 40 | 20 | 15–20 |
| கத்தரி | 80–100 | 70–80 | 80–100 | 80 | 80–120 | 100 | 60 | 75–80 |
| கரட் | 100 –120 | 120 | 100–120 | 120 | 60–100 | 120 | 70–100 | 100 |
| மரவள்ளி | 40–50 | 50 | 40–60 | 50 | 30–40 | 60 | 30 | 35–40 |
| பயிற்றை | 60–80 | 70 | 60–80 | 80 | 60–100 | 120 | 50 | 80–90 |
| பாகல் | 40–60 | 70 | 80 | 100 | 80–120 | 120 | 70 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 60 | 30–40 | 80 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 65–80 | 90 | 40–80 | 80 |
| சி.வெங்காயம் | 40 | 100–80 | 60–80 | 80 | 50–80 | 80 | 60–80 | 60 |
| பூசணி | 40–70 | 60 | 60 | 60 | 60–90 | 80 | 60 | 80 |
| தக்காளி | 30–50 | 20 | 40 –50 | 30 | 20–40 | 70 | 50 | 50–60 |
| வாழைக்காய் | 60–80 | 70 | 50–70 | 70 | 60–80 | 80 | 60 | 60–70 |
| கீரை | 20 | 40 –50 | 30 | 10–15 | 20–30 | 20 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 30 | 30–25 | 20 | 20 | 15 |
| பச்சை மிளகாய் | 60 –80 | 60 | 60 –80 | 60 | 60–80 | 80 | 70–130 | 50–60 |
| புடோல் | 40–50 | 40 | 40 | 50 | 40–60 | 70 | 70 | 50 |
| கோவா | 40–50 | 45 | 50 | 60 | 20–40 | 70 | 60 | 35–40 |
| வெண்டி | 50–70 | 60 | 140 | 50 | 50–70 | 70 | 50 | 40 |
| போஞ்சி | 120–140 | 140 | 100 | 120 | 80–120 | 120 | 110 | 100–120 |
| லீக்ஸ் | 140–150 | 180 | 140–160 | 120 | 140–170 | 200 | 120 | 180 |
| தேங்காய் | 60–70 | 35–40 | 50 | 60 –50 | 35–55 | 60 | 40–60 | 45 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 85 –90 | 65–80 | 90 | 90 | 75–90 |
| தேசிக்காய் | 50 | 50 | 50 | 30 | 20 –40 | 40 | 30–60 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 –15 | 30 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 100–120 | 120 | 140 –200 | 120 | 100–160 | 200 | 130 | 150 |
| இராசவள்ளி | 120 | 90 | 100 | 100 | 80–120 | 120 | 100 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 03 | 05 | 02 | 03 | 05 | 02 | – |

# தமிழ் மாதங்களில் பிறந்தவர்களின் பலன்கள்

## ஐப்பசி


சூரியன் துலா ராசியில் சஞ்சரிக்கும்போது துலா மாதமென்றும், ஐப்பசி மாதம் என்றும் அழைக்கின்றோம். சித்திரை மாதத்தில் சூரியன் உச்சமென்றும், ஐப்பசி மாதத்தில் நீசம் என்றும் சோதிட சாஸ்திரம் கூறுகின்றது. பூமத்திய ரேகைக்கு வடக்கே உள்ள பிரதேசங்களில் சித்திரை மாதத்தில் சூரியனுடைய வெப்பம் அதிகமாகவும், ஐப்பசி மாதத்தில் வெப்பம் தணிந்தும் காணப்படுவதே இதற்கு ஆதாரம். துலா ராசியில் சுக்கிரன் ஆட்சி. மேட ராசியில் நீசமடையும் சனிபகவானுக்குத் துலா ராசி உச்ச வீடு. இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு சூரியனுடைய ஆதிக்கம் குறைந்தும் சுக்கிரன், சனி இவர்களுடைய ஆதிக்கம் நிறைந்தும் காணப்படும்.

### தோற்ற அமைப்பு

கவர்ச்சிகரமான தோற்றமுடையவர். நடுத்தர உயரமானவர். உருண்டையான தலையும், விரிந்த நெற்றியும், வளைந்த புருவமும், பளபளப்பான தலைமுடியும் இவருடைய அழகை மிகைப்படுத்திடும். கனிந்த பார்வையும், எடுப்பான நாசியும், மலர்ந்த முகமும், முகத்திற்கேற்ற உதடுகளும் யாவரையும் கவர்ந்திடச் செய்யும். கைகள், கால்கள், விரல்கள், இடை முதலிய ஒவ்வொரு அங்கமும் இவர்களது உயரத்திற்கேற்ப வார்ப்படம் வார்த்ததுபோல் பொருத்தமாக அமையும். வேகமாக நடந்தாலும் மெதுவாக நடந்தாலும் அளந்து வைப்பதுபோல் இருக்கும். இவர்கள் உடை அலங்காரப் பிரியர்கள். உயர்தர ஆடை ஆபரணங்களைக் கால நேரங்களுக்கு அனுசரணையாக உடுத்துவதில் இவருக்கு நிகர் இவரே.

### குணாதிசயங்கள்

சுக்கிரன் வழங்கும் குணங்கள் என்னவென்றால், எல்லாவற்றிலும் பற்றுடையவர்களாக இருத்தலே ஆகும். உறவுகளிடம் என்றும் மாறாத அன்பு செலுத்துபவர். செய்த உபகாரத்தை மறக்காதவர்.



மற்றவர் தம்மைக் கைவிட்டாலும் இவர் அவர்களைக் கைவிடார். வாழ்க்கைக்குத் தேவைப்படும் சகல வஸ்துக்களையும் சேகரித்து வைப்பதையே நோக்கமாகக் கொண்டவர். பெண்களிடத்தில் நயமாகப் பேசி அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமாவார். இளமை மாறினாலும் இவருக்கு முதிர்வு தட்டாது. மற்றவர்களைத் தம்முடைய சிறந்த பாவங்களாலும், பாவனைகளாலும் அரிய குணாதிசயங்களாலும் வாக்கு சாதுர்யத்தினாலும், மேலான தம்முடைய வசீகரத் தோற்றத்தினாலும் எளிதில் வசியமாக்கிக் கொள்வார். விளக்கொளியைக் கண்டதும் ஈசல் நெருங்குவதைப்போல் தூரச் செல்பவர்களும் புதிதாக அறிமுகமானவர்களும் இவரைக் கண்டவுடன் அருகாமையில் வந்து ஓரிரு வார்த்தைகளைப்பேசி, இவர்கள் வாயால் ஓரிரண்டு வார்த்தைகளைச் சொல்லக் கேட்டு ரசித்த பிறகே நகர்ந்து செல்வர். மற்றவர்கள் இன்புறுவதைக் கண்டு இவர் இன்புற்றுப் புளகாங்கித மடைவார்.

'பார்த்தால் பசி தீரும்' என்பதற்கிணங்க இவரைப் பார்த்துக் கொண்டிருந்தாலோ அல்லது இவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தாலோ பொழுது சாய்வதும் தெரியாதாம்! பசி எடுப்பதும் தெரியாதாம்! தனிமை இவருக்குப் பிடிக்காத விடயம்.

ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்கள் சனி வழங்கக்கூடிய அம்சங்களுக்குப் பெரும்பாலும் பாத்திரக்காரர்களாக விளங்குவர். பொறுமைசாலிகள். ஆனால், தம்மை உதாசீனப்படுத்துபவர்களைக் கண்ணெடுத்தும் பாரார். அவர்கள் சொல்வதைச் செவிகொடுத்துக்கேளார். ஆகையால், இவர்கள் மகா கர்விகள் என்றும் ஒரு சிலர் கருதக்கூடும். பிறர் இவரைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றி இவர் சிறிதும் கவலை கொள்ளார். பிடிவாதக் கொள்கை உடையவர். ஆனால், நியாயத்துக்கும், நீதிக்கும், நேர்மைக்கும் விரோதமாக எந்தக் காரியத்தையும் செய்யத் துணியமாட்டார். குற்றம் புரிந்தவர்களைக் கண்டிக்காமலும், தண்டிக்காமலும் விடுவது இவருக்குப் பிடிக்காத விடயம். இவருடைய முடிவும், தீர்ப்பும் பாரபட்சமற்றதாக விளங்கும். தண்டிக்க வேண்டிய விவகாரங்களில் இவர் நடுநாயகமாக விளங்குவார். மத்தியஸ்தம் விரும்பும் இரு தரப்பினர்களும் இவரை நாடி, இவர் சொல்லும் தீர்ப்பை ஆதரித்து, அங்கீகரித்திடுவர். பிறருக்காக சரீரப் பிரயாசையை சுயநலம் பாராது ஏற்பர். உழைப்பினால் வரும் ஊதியத்தையே பெரிதெனக் கருதிடுவர். பொதுநல சேவையில் சுயநலம் கருதாது பாடுபடுவர்.

கல்வி சிறிதெனினும் அறிவில் சிறந்தவர். விரிந்த அனுபவமுடையவர். இதனால் இவர் சாமர்த்தியமாக வாழ்க்கையை நடத்திக்கொள்வர். அதிக பொறுப்பைத் தாமாகவே ஏற்றுக் கொள்வார். நடு வயதில் அடிமைத்தனம் நீங்கி வறுமை அகன்று சுதந்திரமேற்படும். ஆனால், இறுதியில் தூய்மையும், அமைதியும் ஆனந்தமும் இவருக்குண்டாகும் என்பதில் ஐயமில்லை.

சூரியன் இங்கு நீசம் அடைவதால், ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்கள் ஆத்மபலம் குன்றியவர்கள் என்று கூறலாம். சிறிய விவகாரமாக இருந்தபோதிலும் சுயமாகத் தலையிடமாட்டார் கள்.பலருடைய ஆலோசனைகளைக் கேட்டும், மற்றவர்களுடைய ஆதரவைக் கொண்டும் உதவியைக் கொண்டும் எதையும் ஆரம்பிப்பார்கள். சிறு வயதில் தந்தையாருடைய ஆதரவு குறையும். முன்னோர் தேடி வைத்த பொருள் இருந்தாலும் அவற்றின் மூலம் அதிக லாபத்தை எதிர்பார்க்க இயலாது. ஆத்ம சக்தியும், மனோதிடமும் குன்றிய போது உற்சாகம் ஏற்படுவதற்கு பொடி, புகையிலை போன்ற லாகிரி வஸ்துகளையும், கோப்பி, தேநீர் போன்ற பானங்களையும், ஒரு சிலர் மதுபானங்களையும் அடிக்கடி உபயோகப்படுத்துவர். புலால் உண்பதிலும் பிரியமுடையவர்.

வேடிக்கை, விளையாட்டுப் பந்தயங்களிலும், விநோதக் கண்காட்சிகளிலும் அதிக ஓய்வு நேரத்தைச் செலவிடுவர். தோட்ட வேலைகளிலும், வீட்டுவேலைகளிலும் அதிக கவனத்தைச் செலுத்திடுவர். தாமே செயலில் ஈடுபடுவர். முன்னேற்ற விவகாரங்களிலும், பொது விவகாரங்களிலும், சுப காரிய பிரயத்தனங்களிலும் இவரும் இவர் குடும்பத்தினரும் ஒத்துப்போகமாட்டார்கள். எல்லாவற்றையும் தாமே கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும். அனுபவம் நல்ல பாடம் கற்பித்த போதிலும், விடாமல் உடன் பிறந்தவர்களையும் குடும்பத்தில் பெரியவர்களையும் தம்முடன் ஒத்துழைக்குமாறு அழைத்திடுவர். ஒத்துழைக்காததைக் கண்டுஅலுத்துச்சலித்துக்கொள்வர். சிறிய விடயங்களை இவர் ஒரு பொருட்டாகக் கருதமாட்டார். பெருந்தன்மையும் மன்னிக்கும் கண்ணியமும் இவரிடத்தில் உண்டு. ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் உள்ள வேறுபாடுகளை நொடிப்பொழுதில் கண்டுபிடிக்கும் உள்ளுணர்வுடையவர். அந்தரங்கமான பக்தியுடையவர். ஆன்மிகத் துறையில் கருத்தை நிலைநிறுத்திடுவர். மற்றவர்கள் புறக்கண்ணால் பார்க்க முடியாத பொருள்களையும் தத்துவங்களையும் அகக் கண்ணால் காணும் அற்புத சக்தி வாய்ந்தவர். இவர்கள் கலா ரசிகர்கள். இசைஞானமுடையவர்கள். உருக்கமாகப் பாடுவதில் அலாதியான ஆனந்தக் களிப்படைந்திடுவர். சந்தர்ப்ப சூழ்நிலையை நன்குணர்ந்து, தக்கபடி பயன்படுத்திக் கொள்வர்.

### நோயும் பரிகாரமும்

சிறுநீர்த் தொகுதியிலும், இன உறுப்புகளிலும் வலி, இடுப்புலி, அடிவயிற்று உபாதை, பெண்களாயிருந்தால் மாதவிடாய் காலங்களில் கர்ப்பநோய் போன்ற அசதிகள் தோன்றி நோய் வாய்ப்படுவர். ஜீரண கோசத்திலும் அடிக்கடி கோளாறுகள் தோன்றிடும். பிணிகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் குணமேற்படுவதே இவருடைய வாழ்க்கையின் அதிசயம்.

### சாதகமும் பாதகமும்

இவர் பிறர் காரியங்களில் தலையிடார். ஆனால், வந்த வம்பு வழக்குகளை விடார். குறிப்பிட்ட காரியங்களை குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர். அதேபோல், பிறரிடத்தில் இவர் ஒப்படைத்த காரியங்களை இவர் கருதியபடி செய்து முடிக்காவிட்டால் சீறி விழுவர். கை நிறையப் பணமும், தேவைக்கேற்ப பொருள் வசதியும் இவருக்கு அமையாவிட்டால் சோர்ந்துவிடுவர். உல்லாச நிகழ்ச்சிகள் இவரை உற்சாகப்படுத்திடும். செயலால் அன்றி சொல்லால் இவரை வசமாக்குவது கடினம். எவ்வித கடின வேலைகளையும் நொடிப் பொழுதில் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உடையவர். ஆனால், மனம் மாறினால் சத்தியாக்கிரகம் செய்து, எந்த வேலையிலும் ஈடுபடாமல் மௌனம் சாதித்திடுவர். நேர்மையானவர். ஆதலால், நேர்மையற்ற செயல்களும் நேர்மையற்றவர்களின் உறவும் இவருக்குப் பிடிக்காதவை. அதேசமயம், எந்த விவகாரங்களுக்கும் இவர் வளைந்து கொடுப்பார். நியாயமும், மத்தியஸ்தமும் இவருடைய இயற்கையான பொக்கிஷங்கள் ஆகும்.



# பெண்களை சீரழிக்கும் நாடகங்கள்

தொலைக்காட்சி என்பது ஒரு பொழுது போக்குச் சாதனம். அதில் வரும் நிகழ்ச்சிகள் மக்களின் மன அழுத்தங்களைக் குறைக்க வேண்டும். ஒரு மனநிறைவான மனநிலையையும் உருவாக்க வேண்டும். ஆனால், இன்றைய காலத்தில் ஒளிபரப்பாகி வரும் தமிழ்த் தொடர்களைப் பாருங்கள். அப்படியா இருக்கின்றன? நிலைமையை மோசமாக்கிக் கொண்டு வருகின்றன. ஒற்றுமையாக இருக்கும் குடும்பங்களைப் பிரிக்கின்றன. தாயிடம் இருந்து மகனைப் பிரிக்கின்றன. அப்பா மகள் உறவு முறையைப் பிளவுபடுத்துகின்றன. கணவன் மனைவி உறவைக் கொச்சைப் படுத்துகின்றன. சொந்த பந்தங்களைக் கொலை செய்யத் தூண்டுகின்றன. கள்ள உறவுக்கு வழிகாட்டுகின்றன. இரட்டை அர்த்த வசனங்களை அள்ளித் தெளித்து, ஒட்டு மொத்த இளம் சமுதாயத்தையே குட்டிச் சுவராக்கி வருகின்றன. எல்லாமே வேறு வேறு மாதிரியான பயணங்கள். பொதுவாகவே, பெண்கள் ஈவு இரக்கம் உள்ள நல்ல ஜீவநதிகள். அதை யாராலும் மறுக்க முடியாது. எங்கோ ஒன்று இரண்டு குறைபட்டுப் போய் இருக்கலாம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், இந்த மெகா தொடர்கள், எமது பெண்களின் அந்த நல்ல இரக்க சிந்தனைகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் செல்லரிக்கச் செய்கின்றன. நல்ல பல வெள்ளந்தி மனங்களைக் கெடுத்தும் வருகின்றன. மல்லிகைப் பூக்களாய் இருந்தவர்கள் கள்ளிப் பூக்களாய் மாறி வருகின்றனர். ஒரு தொடர் முடிந்த பிறகு, யாராவது சிரித்தபடி சந்தோஷமாக வீட்டு வேலையைப் பார்க்கப் போகிறார்களா? சொல்லுங்கள். இல்லவே இல்லை. மனதில் கவலை. சட்டி பானைகளைக் கழுவும் போது, அதே எண்ணங்கள் தொடர அவற்றை போட்டு உடைக்கிறார்கள்.

நாளைக்கு என்ன நடக்குமோ என்கிற ஒருவித எதிர்பார்ப்பு. அதைப்பற்றியே சுற்றிச் சுற்றி வரும் கற்பனைகள். இவள் ஏன் அப்படி செய்தாள். அவள் நல்லவள்தானே. அவளுக்கு என்ன வந்தது. பைத்தியம் பிடித்துப் போச்சா. இப்படி ஆயிரம் கிலோ மன உளைச்சல்கள். முன்பு எல்லாம் பிரிக்க முடியாதது எது என்று கேட்டால் நகமும் சதையும் என்று சொல்வார்கள். இப்பொழுது அப்படி இல்லை. யாரிடமாவது அந்தக் கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். மெகா தொடர்களும், பெண்களும் என்றுதான் சொல்வார்கள். அந்த அளவுக்கு இன்றைய தமிழ்ப் பெண்களில் பலர், தொலைக்காட்சித் தொடர்களுக்கு அடிமைகளாக மாறி வருகிறார்கள். எல்லாப் பெண்களையும் சொல்லவில்லை. ஒரு சில பெண்களுக்குப் பைத்தியமே பிடித்து விடும் அளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறது. பெண்களில் பலர் தங்களுடைய குடும்பங்களைப் பற்றி கவலைப் படுகிறார்களோ இல்லையோ, நாடகங்களில் வரும் கதாபாத்திரங்களைப் பற்றித் தான் ரொம்பவும் கவலைப் படுகிறார்கள். ரொம்பவும் அலட்டிக் கொள்கிறார்கள். அவர்களைக் குறை சொல்ல முடியாது. அப்படி ஒரு தாக்கம் எமது வாழ்வியலில் சன்னம் சன்னமாய் வேர்விட்டு விட்டது.



# பார்வை ஒன்றே போதுமே

ஒரு காட்டில் ஒரு துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பார்வை கிடையாது. அந்த வழியாக வந்த ஒருவன் ' ஏ கிழவா: இந்த வழியாக சற்று முன் யாராவது சென்றார்களா? என்று அதிகாரத்தோடு கேட்டான். அதற்குத் துறவி , 'இதற்கு முன் இந்த வழியாக யாரும் சென்றதாகத் தெரியவில்லை. என்றார். சிறிது நேரத்தில் மற்றொருவன் வந்து, ' ஐயா, இதற்கு முன் யாராவது இப்பக்கமாகச் சென்றார்களா? என்று கேட்டான். அதற்கு அத் துறவி, சற்று முன் இந்த வழியாகச் சென்ற ஒருவன் இதே கேள்வியைக் கேட்டு விட்டுச் சென்றான் என்றார். மேலும் சிறிது நேரம் கழித்து இன்னொருவன் வந்தான். அவன் 'துறவியாரே, வணங்குகிறேன். இதற்கு முன்பு இந்த வழியாக யாராவது செல்லும் சத்தம் தங்களுக்குக் கேட்டதா? தயவு செய்து கூறுங்கள்' என்று பணிவோடு வினவினான். உடனே துறவி, ' மன்னர் பெருமானே, வணக்கம். இந்த வழியாக முதலில் ஒரு வீரன் சென்றான். அடுத்து ஓர் அமைச்சர் சென்றார். இருவருமே நீங்கள் கேட்ட இதே கேள்வியைத்தான் கேட்டனர் என்றார். மிகவும் வியந்து போனான் அரசன், ' துறவியாரே, தங்களுக்குப் பார்வை இல்லை. அப்படி இருந்தும் நான் அரசன் என்றும், முன்னால் சென்றவர்கள் வீரன், அமைச்சர் என்றும் எப்படி அறிந்தீர்கள்? என்று கேட்டான். 'அரசே, இதைக் கண்டறிய பார்வை தேவையில்லை. அவரவர் பேசுவதை வைத்தே அவர் யார், அவர் தகுதி என்ன என்பதை எல்லாம் அறிய முடியும்.' முதலில் வந்தவர் சிறிதும் மரியாதை யின்றிக் கேள்வி கேட்டார். அடுத்து வந்தவர் பேச்சில் அதிகாரம் தெரிந்தது. ஆனால் தாங்களோ மிகவும் பணிவாகப் பேசுகிறீர்கள் என்று விளக்கினார் அந்தப் பார்வையற்ற துறவி...!

# வர்ணம் தீட்டலாம் வாங்க...









# மீன் இனத்தைச் சேர்ந்தது கடல் குதிரை

லத்தீன் மொழியில் கடல்குதிரையின் பெயர் ஹிப்போகேம்பஸ். அதன் பொருள் குதிரைத் தட்டான்.

மீனைப் போல படுக்கைவாட்டில் நீந்தாமல் நிமிர்ந்து நின்று நீந்தும். இதன் முகம் குதிரையின் முகம் போலவே இருப்பதால் 'கடல் குதிரை' என்று அழைக்கிறார்கள்.

கடல் குதிரை தனது செதிள்களால் சுவாசிக்கும்.

உலகில் உள்ள உயிரினங்களிலேயே குட்டிகளைப் பிரசவிக்கும் ஒரே ஆண் உயிரி கடல் குதிரைதான். ஆண் கடல் குதிரையின் உடலில் ஒரு சிறிய தோல் பை வளர்ந்திருக்கும். பெண் கடல் குதிரை அந்தப் பைக்குள் முட்டையிடும்.

முட்டைகளைப் பொரித்து குட்டிகளை வளர்க்கும் கடமை ஆண் கடல் குதிரையைச் சாரும். 50 முதல் 1500 முட்டைகள் வரை இட்டு பிரசவிக்கும். முட்டைகளை அடை வைக்கும் காலம் 14 நாள்கள் தொடங்கி 4 வாரங்கள் வரை.

தந்தையின் வயிற்றிலிருந்து பிரியும் குட்டிகளில் ஆயிரத்தில் ஒன்றுதான் பெரிதாகும்.

குஞ்சுகள் பைக்குள்ளே வளர்ந்த பிறகே இரை தேட வெளியே வரும்.

கடல் குதிரைகள் கூர்மையான பார்வைத்திறன் உடையவை. முகத்தின் பக்கவாட்டில் அவற்றின் கண்கள் இருப்பதால் முன்னும் பின்னும் பார்க்க முடியும். வேட்டையாடுவதற்குப் பார்வைத் திறன் உதவுகிறது.

கடல்குதிரையின் நீள்வடிவ கூர்மையான முகம், உணவைச் சிறிய இண்டு இடுக்குகளிலும் புகுந்து தின்பதற்கு உதவுகிறது. உணவைப் பார்த்தவுடன் 'வக்கும் க்ளீனர்' எந்திரம் போல அதன் மூக்கால் உணவை நேரடியாக உறிஞ்சி விடும். உணவு பெரிதாக இருந்தால் மூக்கு விரிவடையவும் செய்யும். கடல் குதிரை உணவை சுவைப்பதில்லை.

சிறிய இறால் வகை மீன்களைச் சாப்பிடும். வளர்ந்த கடல் குதிரை நாள் ஒன்றுக்கு 30 முதல் 50 முறை சாப்பிடும். குட்டிக் கடல் குதிரைகள் ஒரு நாளைக்கு 3,000 உணவுத் துண்டுகளைச் சாப்பிடும்.

கடல் குதிரையின் வால் பற்றிப் பிடிக்கும் தன்மையுடையது. கடலில் உள்ள புற்கள் மற்றும் பிற தாவரங்களைப் பற்றிக் கொண்டு வேகமான நீர்ப்போக்கால் அடித்துச் செல்லப்படாமல் தப்பித்துவிடும்.

கடல் குதிரைகள் சூழ்நிலைக்கு ஏற்ப வேகமாக தன் நிறங்களை மாற்றிக்கொள்ளும். ஆண் கடல் குதிரையும், பெண் கடல் குதிரையும் இணையும்போது நிறங்களை மாற்றும்.

கடல்குதிரைகள் மிக மெதுவாகவே நீந்தும்.

உலகம் முழுவதும் 30 முதல் 40 வரையிலான கடல் குதிரை வகைகள் உண்டு.

கடல் குதிரைக்கு பல்லும் வயிறும் கிடையாது. உணவு வெளியேறி விடுவதால் தொடர்ந்து சாப்பிட்டுக்கொண்டே இருக்கும்.

கடல்குதிரை தன் வாழ்நாள் முழுவதும் செய்யும் இரண்டே வேலைகள் உண்பதும் ஓய்வெடுப்பதும்தான்.

அரை அங்குலம் முதல் எட்டு அங்குலம் வரை கடல்குதிரையின் அளவுகள் உள்ளன. கடல் குதிரைகளுக்கு எதிரிகளிடம் சண்டையிடுவதற்கு எந்த உறுப்புகளும் இல்லை. கூர்மையான பார்வையால் எதிரிகளைக் கண்டவுடன் மறைந்துகொள்ளும் தகவமைப்பு மட்டுமே அதற்குப் பாதுகாப்பு.

கடல் குதிரையின் ஆயுள்காலம் நான்கு முதல் ஆறு ஆண்டுகள். கடல் குதிரைகளைப் பிடித்து வளர்க்கும்போது அதனால் தாக்குப்பிடிக்க முடியாமல் சீக்கிரமே இறந்துவிடும்.

# எடுத்த செயலில் எடுத்த லட்சியத்தை வெற்றி பெற

செய்யும் செயலில் முழுமையான ஆர்வத்தை, வளர்த்துக்கொள்

வெற்றி பெறுவேன் என்று முழு நம்பிக்கையுடன் இரு...

வெற்றி பெற.. செய்யும் செயலை முழுமையாக, ஆழமாக, தெளிவாகச் செய். வெற்றி பெறும் வரை முயற்சியை கைவிடாதே ..

எடுத்த செயலில் வெற்றி பெற உறுதியாய் இரு ....

இவ்வாறு செய்யும் போது வெற்றியை, உங்கள் லட்சியத்தை நீங்கள் நிச்சயம் அடைவீர்கள் ..





# கிராமங்களுக்குள் சீறிப் பாய்ந்த கடல்

சிலாபம்–நீர்கொழும்பு மார்க்கத்தில் உள்ள மாரவில– தல்வில பிரதேசத்தில் கடல் சீறி எழுந்து கரையோரக் கிராமங்களுக்குள் பாய்ந்ததால் அந்தப் பிரதேச வாசிகள் பீதிக்குள்ளாகினர்.

இவ்வாறு திடீரென்று கடல் சீறிப் பாய்ந்தமை சுனாமியொன்றுக்கான அறிகுறியென்றே அவர்கள் கூறினர்.

100 மீற்றர் தூரம் வரை கரை மீறிப் பாய்ந்ததால் அங்கிருந்த பல வீடுகள் கடல் நீரில் மூழ்கின. இந்தத் திடீர் கடல் பெருக்கைப் பற்றி விவரித்த அப்பகுதி மீனவர்கள், தாம் 50 ஆண்டுகளாக கடலை அண்டியே வாழ்ந்த வருவதாகவும், ஆனால் இது போன்ற கடல் சீற்றத்தை இதுவரை கண்டிருக்கவில்லையெனவும், சுனாமியின்போதும் இவ்வாறு கடலலை கிராமத்துக்குள் பாய்ந்திருக்கவில்லையெனவும் கூறினர். (த–22)

## பணிப் பெண்களாக செல்லவேண்டாம்

### சோபித தேரர் கோருகிறார்

நம் நாட்டுப் பெண்கள் வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் செல்வதை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என நீதியான சமூகத்தை நோக்கிய தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மகளிர்தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவிலேயே அதிகமான வீட்டுப் பணிப்பெண்களை ஏற்றுமதி செய்யும் நாடு இலங்கையாகும்.

இவ்வாறு பணிப்பெண்களாகச் செல்லும் நம் நாட்டுப் பெண்கள் நாளுக்கு நாள் கை,கால்களை உடைத்துக் கொண்டும், சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டும் மீண்டும் நாட்டுக்குத் திருப்பி அனுப்பபடுகின்றனர்.

இந்நிலையை முற்றாக நீக்குவதற்கு தற்போதைய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனச் சோபித தேரர் கேட்டுக்கொண்டார். (த)

## ரயில்களில் பிச்சை எடுப்போர் கைதாவர்

ரயில்களில் பயணிக்கும் பயணிகளிடம் பிச்சை கேட்பவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க கருத்து வெளியிடுகையில்,

நெடும் தூர சேவையில் ஈடுபடும் ரயில்களில் பயணிகளிடம் பிச்சை கேட்பவர்களால் இடையூறுகள் ஏற்படுகின்றன. இதனால் பயணிகள் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.

இது தொடர்பில் பயணிகளிடம் இருந்து எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனாலேயே இனி வரும் காலங்களில் இவ்வாறனவர்களைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. குறித்த நடவடிக்கையில் ரயில்வே பாதுகாப்புப் பிரிவினரே ஈடுபடுத்தவுள்ளனர்–என்றார். (த)

## பிறந்த குழந்தையை கொன்ற இலங்கை யுவதிக்குச் சிறை

பிறந்த குழந்தையைக் கொன்று குப்பைத் தொட்டியில் வீசிய இலங்கை யுவதிக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தில் மூன்று வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இலங்கை யுவதி ஐக்கிய அரபு இராச்சியத்தில் பிறந்த குழந்தை ஒன்றைக் கொலை செய்து பிளாஸ்ரிக் பையில் திணித்துக் குப்பை வாளியில் வீசியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் இடம்பெற்று வந்த விசாரணைகளின் முடிவில் யுவதிக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதித்துள்ள நீதிமன்றம்,குழந்தையின் பெற்றோருக்கு நட்ட ஈடு வழங்குமாறும் தீர்ப்பளித்தது.

இதேவேளை, யுவதி சிறைக்காலம் நிறைவடைந்த பின்னர் அவர் நாடு கடத்தப்படவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (த)


## வீட்டுக்கிருத்திய நிகழ்வு அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 28 . 02 . 1927

விண்ணில் 09 . 02 . 2015

அமரர் கந்தசாமி

**தெய்வானைப்பிள்ளை**

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயரம்
அன்பால் அரவணைத்து எமை ஆளாக்கிய தாயே
அரனடியில் என்றும் இளைப்பாறி இன்புறுக
நித்தியம் உனை நெஞ்சில் சுமப்போமே நாம்

எமது அன்பு அன்னையின் பிரிவுத் துயரறிந்து நேரில் கலந்தும், செய்திகள் பகிர்ந்தும், உற்ற உதவிகள் நல்கியும், உறுதுணை புரிந்த உள்ளங்களுக்கு எமது நன்றி.

இன்று (11.03.2015) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

(காலஞ்சென்ற) க.அருண்மொழித்தேவன் குடும்பம்
க.ஞானசம்பந்தன் குடும்பம்
க. சந்திரசேகரம்பிள்ளை குடும்பம்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (57694)(10)





| தோற்றம் | மறைவு |
|---|---|
| * | * |
| 1998 | 2015 |
| * | * |
| 09 | 03 |
| * | * |
| 22 | 10 |

## இராமேஸ்வரன் குலதீபன்

(2014 - தரம் 11 மாணவன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

9/8, மலர்மகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமேஸ்வரன் குலதீபன் நேற்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இராமேஸ்வரன் - இந்திரவதனி தம்பதியரின் அன்பு மகனும், வினோஜாவின் அன்புத் தம்பியும், நாகராசா-மதிவதனி, கேதீஸ்வரன் -அற்புதவதனி (FRANCE) ஆகியோரின் பெறா மகனும், திருச்செல்வத்தின் மருமகனும், மதுஷளா, தயானந்தி, மதுசன், கஜானி, கௌதமன், கஜந்தன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நகவல் : குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

## கனகரட்ணம் இரத்தினசபாபதி

(ஓய்வுபெற்ற தொலைபேசி இயக்குநர்-யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல. 20/2, பாரதி வீதி, கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் இரத்தினசபாபதி 10.03.2015 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகரட்ணம்-செல்வநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், சுப்பிரமணியம் கமலாவதி தம்பதியரின் மருமகனும், அருந்ததியின் அன்புக் கணவரும், லங்கினி (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி), யாழினி (பிரான்ஸ்), மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெய சீலன் (பிரதேச செயலர், பருத்தித்துறை), பாலகுமார் (பிரான்ஸ்) ஆகி யோரின் மாமனும், அம்பிகாபதி, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் விமல நாதன், காலஞ்சென்ற சத்திய கலா மற்றும் நித்தியகலா, சகுந்தலா, இரத்தின கலா, சிவநாதன், சசிகலா, இரத்தினநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (12.03.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பாரதி வீதி, கச்சேரியடி இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

20/2, பாரதி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
021 222 8558

தகவல்:
குடும்பத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை திருமதி வினோஜினி டனிஸ்ரன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி மொண்பேட் மேரி ஜோண் ஒவ் ஆர்க்**

அவர்கள் 10.03.2015 ஆம் திகதி காலமானதையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரிய கழகம்
யா/கோக்குவில் இந்துக் கல்லூரி



## ஏழாண்டு நினைவலைகள்

தோற்றம் 01 . 06 . 1933



மறைவு 11 . 03 . 2008

அமரர் இளையவன் வல்லிபுரம்

(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான், சமூக சேவையாளர், உதயன் செய்தியாளர்.)

ஏற்றம் பல காண ஏணியாய் நின்றீர்களே!- அப்பா
ஏழாண்டாகியது எம்மை நீங்கள் பிரிந்து
கரும்பின் சுவை அடி நோக்கிச் செறிவது போல...
காலம் பல செல்லச் செல்ல கரும்பாய் இனிக்கிறீர்கள்!
காலத்தின் பெரும்பாகம் கல்விக்கும் சமூகத்திற்குமாய்...
காத்திரமாய் கழித்திட்ட கரும வீரர்!
மறைந்தும் மறையாச் சேவைகளால்- மக்கள்
மறவாது மனதுரைப்பதால்.... பெருமையடைகின்றோம்!...

குடும்பத்தினர்.

'ஜெயமகால்',
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

நகவல்: வ.முருகதாஸ் (077612 7411)
(57625)(4.3.7)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

சங்கத்தானை சாரதா வீதியைப் பிறந்த இடமாகவும் வரணி கரம்பைக் குறிச்சியைப் புகுந்த இடமாகவும்-பின்னர் கனடாவில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த

அமரர் திருமதி **தங்கரத்தினம் கந்தையா**



தோற்றம் 19.05. 1924 — மறைவு 09.02.2015

அன்பின் அணிகலனாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
பர்ணமித்துப் பவனிவந்தீர்களே
எங்களை ஏங்கவைத்து
சோக வெள்ளத்தில் மூழ்கடித்து
விண்ணுலகு விரைந்த விந்தைதான் என்னே!
மாதம் ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் துயர்
எம்மை வாழவைத்த தெய்வமே
உங்கள் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குலவிளக்கு அணைந்த செய்திகேட்டு வந்து துயரில் பங்குகொண்ட, தொலைபேசி மூலம் தமது அனுதாபத்தைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் 15.03.2015 ஞாயிற்றுக்கிழமை சங்கத்தானை சாரதா வீதியில் உள்ள அன்னாரின் தங்கை திருமதி முருகேசு இராசமணியின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சாரதா வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# இலங்கை அரசியல்வாதிகளின் ரகசிய சொத்துக்கள் லண்டனில்

## நீதியமைச்சர் விஜேதாச தெரிவிப்பு

இலங்கை அரசியல் வாதிகள் இங்கிலாந்தில் மறைத்து வைத்திருக்கும் சொத்துக்களை கண்டறியவதற்காக லண்டனிலுள்ள மோசடிகளை கண்டறியும் அலுவலகத்தின் உதவியை நாடியிருப்பதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கூறினார்.

இதேவேளை– அமைச்சர் விஜேதாச அண்மையில் இங்கிலாந்துக்கு பயணம் செய்தபோது மேற்படி அலுவலகத்தின் முக்கிய அதிகாரிகளுடன் இது குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

மோசடிகளைகண்டறியும் அலுவலகமானது இங்கிலாந்தில் சுயாதீனமாக இயங்கும் ஒரு அரச அலுவலகமாகும். இது அந்த நாட்டின் சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் இயங்கி வருகிறது.

இந்த அலுவலகத்துக்கு பாரதூரமான மற்றும் சிக்கலான ஏமாற்று செயற்பாடுகள், ஊழல் மோசடிக[ள்] அல்லது அதற்காக முயற்சித்தல் மற்றும் ஏனைய பெரும் குற்றச் செயல்கள் குறித்து இந்த அலுவலகம் சுயாதீனமாக விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது. மேலும், இந்த அலுவலகம் தனது கொள்கைகளுக்கமைய செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

ஒரு சில அரசியல்வாதிகளினால் இங்கிலாந்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களை கண்டறிவதற்காக இலங்கை அரசுடன் இந்த அலுவலகம் இணைந்து செயற்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

வேறு நாடுகளில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் சொத்துக்களை கண்டறியும் செயற்பாட்டின் போது சட்டங்கள் சிக்கல் நிலைக்கு உள்ளாகின்றன. அதன் காரணமாகவே சர்வதேச தரப்பினரின் தொழில்நுட்ப உதவிகளில் நாம் பெருமளவில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதென்பது ஒருஇரவில்செய்து முடிக்க கூடிய விடயமல்ல. ஆனாலும் தற்போது நாம் சரியானஇடத்திலேயே உள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

விசாரணைகளின் அடிப்படையில் கடந்த அரசின்பல அமைச்சரவை அமைச்சர்கள் தமது சொந்தபெய[ரி]லும் வேறு பெய[ர்]களிலும்இங்கிலாந்தில் பல சொத்துக்களைவாங்கியிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

இந்த லண்டன் அலுவலகத்தின் விசாரணைகளானது, உலக வங்கியின் திருடப்பட்ட சொத்துக்களை கண்டறியும் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாடுகளுக்கு புறம்பானதாகவே அமையும்.

உலக வங்கியின் மேற்படி நிகழ்ச்சித் திட்டத்துக்[கு] பொறுப்பான அ[தி]காரிகள் கடந்த வாரம் இலங்கை வந்து அரசின் முக்கிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருந்தனர். கடந்த வரவு – செலவுத்திட்டத்தின் துண்டு விழும் தொகையின் 75 சதவீதமானது உக்ரேன், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சுவிற்ஸர்லாந்து ஆகியநாடுகளில் முக்கிய அரசியல் புள்ளிகளால் வைப்பிடப்பட்டுள்ளமைதெரிய வந்திருப்பதாகவும் நீதியமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


ST.JOHN'S COLLEGE JAFFNA
OLD BOYS' ASSOCIATION
ANNUAL GENERAL MEET

The 99th Annual General Meeting of the Old Boys' Association will be held on Saturday 21st March 2015 at 9.30 a.m in the College Auditorium.

PROGRAMME FOR THE DAY
08.00 a.m - Holy Communion Service
09.00 a.m - Fellowship Breakfast
09.30 a.m - Annual General Meeting

AGENDA
01.Prayer
02.Vote of condolence
03.Minutes of the last AGM
04.Principals review
05.Annual report
06.Statement of accounts
07.Election of office bearers

11.00 a.m. - T20 Cricket match (Old Boys' Vs Present Boys')
01.00 p.m - Fellowship lunch
01.30 p.m - T 20 Cricket match (Continued)
02.30 p.m - Soft ball cricket match between old Boys
04.00 p.m - Principals Tea
04.30 p.m - Soccer match (Old Boys' Vs Present Boys')

Breakfast & Lunch Tickets are available at the college till 20th March 2015.

V.Sanjeev
Secretary
(அ/16879)(4.3.7)



கண்டெடுக்கப்பட்டுள்ளது
ஓட்டுமடத்துக்கும் காக்கைதீவுக்கும் இடையில் கமேரா ஒன்று தவறிவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. உரியவர் தொடர்பு கொள்ளவும்.
077 5204778 (57669)(10.3)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர் கமத்தொழில், கமநல சேவைகள், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு அமைச்சு - வடமாகாணம்
தஞ்சமும் தருமமும் தகவுமே பற்றிக் டிறஞ்சனின்
நெஞ்சமும் கருமமும் உரையுமே நீடு
பஞ்சமும் பசியும் போக்கிடும் உழவோர் தம்
கமநலம் சிறக்க காலமெல்லாம் உழைத்த
கவின் பெறு சேவையாளனின் பதவி உயர்வினை
மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
கமநல சேவைகள் நிலைய சமூகம்
தொல்புரம்.



ALL OUT
Pest Control Service
கறையான் தொல்லையா?
உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்துக் கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.



தொடர்புகளுக்கு:
ந. ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200



வைத்தியம் தலைமுடி உதிர்தல், உடல் பருமன் கூட்டுதல் / குறைத்தல், ஆண்மைக் குறைவு, குழந்தையின்மை, நரம்புத் தளர்ச்சிகள், வெள்ளை படுதல்
Shan's Health Care
K.K.S வீதி, கொக்குவில். 077 035 7307
(57647)(4.9.7)



தேவை
மானிப்பாயில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றுக்கு களஞ்சிய இருப்பு எழுதுநர், உதவியாளர் பெண்கள் தேவை. ஆற்றல் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கல்வித்தகைமை: G.C.E O/L.
மானிப்பாய் பிரதேசத்தை அண்டியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(57683)(10.3) T.P: 0775203548



விற்பனைக்கு
கண்ணாடி கதவுகள், மேசைகள், கதிரைகள், ஜெனரேற்றர், தைத்த கேட்டின் சீலைகள், பெரியவை, சிறியவை, கண்ணாடி சோக்கேஸ் ஆகியவை மலிவு விற் பனைக்கு உண்டு. (57684)(10.3)
தொலைபேசி இல. : 0729311927



வேலையாள் தேவை
பாமசி வேலை தெரிந்த பெண்பிள்ளை, Pharmacist உம் தேவை. தகுந்த சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
(57672)(10.3) T.P: 077 867 2305



பெயர் மாற்றம்
மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி தேவ்வாரானி தர்மரத்தினம் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை தேவாரானி தர்மரத்தினம் என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேனென சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(57682)(10.3)
திருமதி தேவாரானி தர்மரத்தினம்



HOME VISIT CLASSES
PERSONAL AND GROUP
ACCOUNTING - O/L, A/L AND
BANKERS - ENG, TAMIL MEDIUM
ENGLISH - LANG, LIT. ANY GRADE
(57678)(10.3) 0773316402



மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம் ஜய வருஷ பங்குனித்திங்கள் உற்சவம்



16.03.2015, 23.03.2015, 30.3.2015, 6.4.2015, 13.04.2015 ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ளன. பங்குனித்திங்கள் உற்சவம் அதிகாலை 5.30 மணிக்கு உஷத் காலப் பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பூசைகள், அபிஷேகம், உற்சவம்கள் இடம்பெறும்.

உற்சவகால கடைகள் பற்றிய அறிவித்தல்
14.03.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கடைகள் வழங்கப்படும். கடைகள் எடுப்பவர்கள் முழுப்பணத்தையும் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.
முக்கிய அறிவித்தல்:
அம்பாள் ஆலயத்தின் திருப்பணிகளுக்காகவோ உற்சவங்களுக் காகவோ அன்னதானத்துக்காகவோ நிதி, பொருள் சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. எனவே அடியார்கள் ஆலய அலுவலகத்தில் மட்டும் கையளித்து பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.
ஆலய இணையத்தள முகவரி: www.madduvilpanriththalichchiamman.com
T.P: 0213735259
சிவபஞ்சாட்சரம்,
தர்மகர்த்தா.
மட்டுவில், சாவகச்சேரி.



சாரதி தேவை
ஆறுதல் நிறுவனத்துக்கு சாரதி உடன் தேவை. தகுதியானவர்கள் 18.03.2015 மு.ப 10.00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நிறுவனத்துக்கு நேரில் சமுகமளிக்கவும். வேதனம் பேசித்தீர்க்கப்படும்.
ஆறுதல் நிறுவனம்,
இல. 51 வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 221 7092 (அ/16867)(4.3.7)



பரீட்சைக்கு தோற்றும் 2015 மாணவர்களுக்கு
இலவச கருத்தரங்கு
இரு மொழிகளிலும்
நாளை 12.03.2015 வியாழக்கிழமை
9AM-12noon Genetics
அச்சுறுத்த தாள்கள் எழுதுவதில்லை
12 noon-3 pm organic Chemistry
தொடர்பு: சிங்கம் மாஸ்டர் 077 773 0840
Science Corner மருதனார்மடம்



மணப்பெண் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மேற்கு ஐரோப்பிய நாடொன்றில் பிரஜாவுரிமை பெற்ற 32 வயது, 7 இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணப் பெண் தேவை.
தொடர்பு: 077 953 0735 (அ/16866)(4.3.7)



தவறிவிட்டது
(09.03.2015) திங்கட்கிழமை இரவு தனியார் பஸ்ஸில் காணி உறுதிப்பத்திரமும் மற்றும் முக்கிய ஆவணங்களும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்) (57674)(10.3)
தொடர்பு: 021 205 2841, 0767056934



மணமகன் தேவை
யாழ்.கௌரவ றோமன் கத்தோலிக்க 1976 ஆம் ஆண்டு அரச உத்தியோகம் பார்க்கும் பட்டதாரி விவாகரத்து பெற்ற பிள்ளைகள் அற்ற அழகிய பெண்ணிற்கு இதே தகைமை களுடைய மணமகன் தேவை: 077 614 6716, 077 611 9652



வீடு வாடகைக்கு
கிளிநொச்சி கணேசபுரத்தில் A9 வீதியில் இருந்து 1.5km தூரத்தில் நான்கு அறை, சமையல் அறை, குளியல் அறை அடங்கலாக அனைத்து வசதிகளுடனும் வீடு வாடகைக்கு உண்டு.
(51378)(10.3) தொடர்பு: 0777765925



IDM
Nations Campus
Since 1981
IDM NATIONS CAMPUS - JAFFNA
www.idmedu.lk | www.facebook.com/idmnc.j | www.facebook.com/idm
வியாபார முகாமைத்துவப் பட்டப்படிப்பை யாழ் மண்ணிலிருந்தவாறே பூர்த்தி செய்வதற்கு அரிய வாய்ப்பு
தொழில் புரிவோர் மற்றும் தொழில் தேடுநர்களுக்குரிய வகையில் தகுதி மிக்க விரிவுரையாளர் குழாமுடன் வார இறுதி நாட்களில் விரிவுரைகள் இடம்பெறும்.
• மிக குறுகிய காலத்தில்
• மிக குறைந்த செலவில்
• இலகு தவணைக் கட்டண முறையுடன்
• University of New Buckinghamshire இன் பட்டப்படிப்பை
• யாழ் மண்ணிலிருந்தவாறே பூர்த்தி செய்து கொள்ள முடியும்.
077 441 9901
➤ BA (Hons) in Business Management
➤ BA (Hons) in Human Resource Management
➤ BA (Hons) in Marketing
➤ BA (Hons) in Finance
BM @ IDM
edexcel | bucks | UGC Sri Lanka | Charles Sturt University | Open University
# 216, Nawalar Road, Jaffna.
E-mail : idmncjaffna@gmail.com
TEL : 021 222 99

# மகனின் தாக்குதலில் தந்தை சாவு

மாவனெல்லை, அரநாயக்க– அம்பலங் கந்த பிரதேசத்தில், கூறிய ஆயுதத்தால் தாக்கித் தந்தையை மகன் கொலை செய்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற் றுள்ளது. காணிப் பிரச்சினை தொடர் பாக ஏற்பட்ட வாக்குவாதமே இந்தக் கொலைக்குக் காரணமாகியதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து சந்தேக நப ரான மகன் கைதுசெய்யப்பட்டு விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சம்ப வத்தில் 50 வயதான நபர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர் பில் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருவதுடன்கைதுசெய்யப்பட்ட நபரை நீதி மன்றில் முன்னிலைப் படுத்துவதற்கு நடவடிக்கை களை மேற்கொண்டு வரு கின்றனர்.

# தொடர்ந்தது போராட்டம்

கொழும்பு, மார்ச், 11

கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தரை பதவி விலகக் கோரி பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

உபவேந்தர் பதவி விலகும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சங்கச் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் குமார ஹிரிம்புரேகமவை பதவி விலகக் கோரி உபவேந்தர் அலுவலகம் மற்றும் பதிவாளர் அலுவலகத்தை பல்கலை விரிவுரையாளர்கள் நேற்று முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

(த–10)

# மாகம்புர மஹிந்த துறைமுகத்துக்கு முதல் கப்பல்

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் முதற் தடவையாக அம்பாந்தோட்ட மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்துக்குப் பயணிகள் கப்பலொன்று வந்துள்ளது.

ஐரோப்பாவில் இருந்து வந்துள்ள இந்தக் கப்பலில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 381 உல்லாசப் பயணிகள் இருந்தனர்.

இந்த உல்லாசப் பயணிகள் கதிர்காமம்,புத்தள மற்றும் யால தேசிய வனத்தையும் பார்வையிடச் சென்றிருந்தனர். அன்றைபதினம் முழுவதும் இந்தக் கப்பல் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தன் காரணமாக கப்பலுக்கான தண்ணீர் உள்ளிட்ட ஏனைய சேவைகள் வழங்கப்பட்டதால் நல்லதொரு வருமானம் கிடைத்திருந்ததாகவும் துறைமுகப் பொது முகாமையாளரான நோமன் வீரலான தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் அப்பாத்துரை நடராஜா

(மண்ணில்: 26.06.1923 விண்ணில்: 09.03.2015)


கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்) அதன் வளர்ச்சிக்கும், இருப்புக்கும் கடந்த காலங்களில் இவரது சேவை மகத்தானது. 1993 ஆம் ஆண்டு தொடக்கம் நிர்வாக சபை பொருளாளராக கடமையாற்றிய காலத்தில் மிக சிறப்பாக முருகன் தொண்டினை ஆற்றியவர் தனது மகன் ரவீந்திரராஜனையும் முருகன் தொண்டாற்ற அவரது பாதையில் தேர்ந்தெடுக்க உந்து சக்தியாக திகழ்ந்தவர். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருடன் நாமும் சேர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முருகனின் பாதார விந்தங்களை பணிகின்றோம்.

**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்) நிர்வாக சபையும், நண்பர்களும்.**

**கொக்குவில்.**

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. கணபதிப்பிள்ளை மங்களேஸ்வரன்

(B.A, P.G.D.E,MED,SLPS-I)

10.03.2015 கொழும்பு ராஜகீய வித்தியாலய புதிய நாடக மண்டபத்தில் இடம்பெற்ற பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் முதலாம் தர அதிபர் சேவை நியமனத்தைப் பெற்ற எமது கல்லூரி முதல்வர் திரு. க.மங்களேஸ்வரன் அவர்களைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்பும் பெற்று இன்பமுடன் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்**
**யா/வரணி மத்திய கல்லூரி**

## மரண அறிவித்தல்

### கி.பி. அரவிந்தன் (கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ்)

தோற்றம்: 17.09.1953 (யாழ்ப்பாணம்)

மறைவு: 08.03.2015 (மொந்தினி-பிரான்ஸ்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் நெடுந்தீவைப் பூர்வீகமாகவும், பிரான்ஸ் மொந்தினிலே கோர்மை நகரைப் புலம் பெயர் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கி.பி அரவிந்தன் (கிறிஸ்தோப்பர் -பிரான்சிஸ் மனோகரன்) 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமாகினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர்-மாசிலாமணி (இளைப்பாறிய தாதி) தம்பதியரின் மூத்த புதல்வனும், சுமத்திரியின் அன்புக் கணவரும், அங்கதன், மானினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சுந்தரமூர்த்தி மற்றும் பவானி தம்பதியரின் மருமகனும், ஜோர்ஜ் கிளமென்ற (ஜெயா-பிரான்ஸ்), மரிய அல்போன்ஸ் (ரூபன்-நோர்வே), சகாயமேரி பப்ரிஸ்ற் (விஜிதா-பிரான்ஸ்), லூட்ஸ் மேரி கொன்சலா (வனிதா-ஜேர்மனி), ஜெறாட் ஜேம்ஸ் (ரவி-ஜேர்மனி), யூஜின் மேரி இமெல்டா (குமுதா-கனடா ஆகி யோரின் அன்புச் சகோதரரும், சிவகுமாரன், கேசவன் தனஞ்சயன், மாதவி (இலங்கை), அஞ்சலீசம்மா (பிரான்ஸ்) மரிய செல்வராணி (நோர்வே), யேசு ரொபின்சன் (பிரான்ஸ்), இம்மானுவேல்சுரேஸ் (ஜேர்மனி), தேவவதனா (ஜேர்மனி) அன்ரன் றெஜி (கனடா), கெங்காதேவி, இராஜேஸ்வரி, விஜய குமாரி, குருசாமி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரீற்றோ, சமீரா, நிலானி, நிலவன், மாதினி, வேலவன், பகலவன், மாலிகை, அம்பிகை ஆகியோரது பாசமிகு மாமாவும், ஜெனி ஜெறோம், நயனி, ஜெயனி, யாதவி, வித்தகி ஆகியோரது பாசப் பெரியப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வு நாளை மறுதினம் (13.03.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 இலிருந்து 1.30 மணிவரை Cimetiere intercommunal des Joncherolles, 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

00331345062566-0033760194974
மனைவி சுமத்திரி பிரான்சிஸ்
0033625285233 கோதரன் ஜோர்ஜ்
0232050803 சிவகுமாரன் (இலங்கை)

தகவல்: திருமதி
சுமத்திரி பிரான்சிஸ்

### P.K. குமாரகுலசிங்கம்

(இளைப்பாறிய ஓவசியர்-நீர்ப்பாசனத் திணைக்களம்-புத்தளம், மன்னார்)



சிவலிங்கபுளியடி, வண்ணார்பண்ணையைப் பூர்வீகமாகவும், பிறப்பிடமாகவும், தோவாலயவீதி, ஓட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட பெரிய தம்பி கந்தையா குமாரகுலசிங்கம் (இளைப்பாறிய ஓவசியர்-நீர்ப்பாசனத் திணைக்களம்) 08.03.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற P.K. பாலசிங்கம் (படியாதவன்-இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்), கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர்) மற்றும் யோகேஸ்வரி கந்தையா (இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி), திருமதி இராஜேஸ்வரி சுந்தரநடராஜன் (இளைப்பாறிய பிரதி அதிபர் முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா), திருமதி இரட் ணேஸ்வரி ஜெயபாலன் (இளைப்பாறிய முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், P.K.B. பாலஸங்கர் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், கோப்பாய்), P.K.B. பாலமயூரன் (கனடா) ஆகியோரின் சிறிய தகப்பனும், J.ஷாந்திபூசன் (கனடா), திருமதி, மேனகா சாந்தி சுதாசன் (கனடா), திருமதி. ஜெனிததாசாந்தி மணிபல்லவன் (லண்டன்), திருமதி. துதிப்பிரியா சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பொது வைத்தியசாலை, வவுனியா), திருமதி. பிரியலக்ஷனா சாந்தரூபன் (முகாமைத்துவ உதவியாளர் நீர்ப்பாசன திணைக் களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி. சிவபதிமலர் பால சிங்கம், N.சுந்தரநடராஜன் (இளைப் பாறிய அதிபர் கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம், வவுனியா), காலஞ் சென்ற R. ஜெயபாலன் (நிர்வாக உத்தியோகஸ்தர்-நெல சந்தைப்படுத்தும் சபை, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டம்) ஆகியோரின் அருமை மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2015) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விதானை சங்கரியர் வளவு**
**478/3, K.K.S. வீதி,**
**சிவலிங்கபுளியடி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**P.K.B. பாலஸங்கர்**
பெறாமகன்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 10.02.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் வீரசிங்கம் சகாதேவசங்கரி



*[ஓய்வுபெற்ற மக்கள்வங்கி பதில் முகாமையாளரும், சமாதான நீதிவானும்]*

தோற்றம் 01.01.1936

மறைவு 10.02.2015


வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் நாளை(12.03.2015) வியாழக்கிழமை மு.பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் கோயில் தெற்கு வீதி.**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(57678)(4.6.3)



## கணபதிப்பிள்ளை கந்தவனம்

திக்கம் அல்வாயைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தவனம் நேற்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தவனம் பாக்கியத்தின் அன்புக் கணவரும், நிர்மலாதேவி, பத்மாதேவி, சாரதாதேவி,காலஞ்சென்ற நந்தகோபால் மற்றும் விஷ்ணுகோபால், முருகானந்தகோபால், பாமாதேவி, இரட் ணகோபால் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமசிவம், குலசேகரம், ரவீந்திரராஜா, தேவமலர்ச்செல்வி, சுமதி, இராஜசேனா, தேவிகா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2015) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊரணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

தகவல் :
முருகானந்தவேல்
0777563179

## புதுக்குடியிருப்பில்

சொந்தமானசுமார் 44 ஏக்கர் காணி இரா ணுவத் தேவைக்காக சுவீகரிக்கப்பட் டுள்ளது என்ற வர்த்தமானி அறிவித் தல் கடந்த வருடம் வெளியிடப்பட்டது. விசுவமடு மேற்கில் 3 ஏக்கர் காணி யும், மாணிக்கபுரத்தில் 2 ஏக்கரும், சுதந் திரபுரத்தில் 20 ஏக்கர் தென்னங் காணி யும், புதுக்குடியிருப்பு பிரதேச செயல கத்துக்கு முன்பாகவுள்ள 19 ஏக்கர் காணியும் அதில் உள்ளடங் குகின்றன. இந்தக் காணிகள் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38 (ஏ) பிரிவின் கீழ் சுவீகரிக் கப்பட்டுள்ளன. சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளில், விசுவமடு மேற்கு மற்றும் மாணிக்கபுரத்தில் உள்ள காணிகள் கடந்த 3 ஆம் திகதி உத்தியோகபூர் வமாக இராணுவத்தினரிடம் கையளிக் கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் எஞ்சிய காணித் துண் டுகளில், புதுக்குடியிருப்பு பிரதேச செய லகத்துக்கு முன்பாகவுள்ள 19 ஏக்கர் காணியில், எட்டே முக்கால் ஏக்கரையே அடுத்த கட்டமாக சுவீகரிக்க நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த 19 ஏக்கர் காணியில் மிகப் பெரிய 8 கல்வீடுகள் அமைந்துள்ளன. அந்த ஒட்டுமொத்தக் காணியும் 20 குடும் பங்களுக்குச் சொந்தமானது.

எட்டே முக்கால் ஏக்கர் காணியையும் இராணுவத்தினரிடம் கையளிப்பதற்கு எதிர்வரும் 17 ஆம் திகதி ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு, கிளிநொச்சி மாவட்ட காணி சுவீகரிப்பு உத்தியோகத் தர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத் துக்குப் பணிப்புரைவிடுத்துள்ளார். (ற-5)

## ஜெயக்குமாரி

ஜெயக்குமாரி தரப்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரத்ன வேல் தலைமையிலான 4 பேர் கொண்ட சட்டத்தரணிகள் குழு, ஜெயக் குமாரியின் குடும்ப நிலைமையைக் கருத்திற்கொண்டு பிணை வழங்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்தது.

அதனையடுத்து அவர் இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனும திக்கப்பட்டார். வெளிநாடுத் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை தான் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஒப் பமிட வேண்டும் என்றும் பணிக்கப் பட்டுள்ளது. கடந்த வருடம் மார்ச் மாதம் கிளிநொச்சி தருமபுரம் பகுதி யில், பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலி ஸார் மீது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர், ஜெயக்குமாரி வீட்டில் தங்கியி ருந்தார் என்று தெரிவித்து ஜெயக்கு மாரியும் அவரது 14 வயதான மகள் விபூசிகாவும் கைது செய்யப்பட்டனர். பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விபூசிகா கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார். ஜெயக்கு மாரி, பூஸா தடுப்பு முகாமில், பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் கீழ் (எம்.ஓ.டி) தடுத்து வைக்கப்பட்டார். கடந்த டிசெம் பர் மாதம் வரையில், மஹிந்த ஆட்சிக் காலத்தில் தொடர்ச்சியாக தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். கடந்த ஜனவரி மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் அவர் மகஸின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

அதனையடுத்து அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி நீதிமன்றத்தில் பிணை மனு விண்ணப்பிக்கப்பட்டது.

கடந்த 6 ஆம் திகதி இவரது பிணை மனு விசாரணை எடுத்துக் கொள்ளப்பட விருந்தது. ஆனால் ஜெயக்குமாரி மன் றில் முற்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் நேற்றைய தினம் வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஜெயக்குமாரி மன்றில் முற்படுத்தப் பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டார்.

ஜெயக்குமாரி சார்பில் மன்றில் முன்னி லையான சட்டத்தரணி கே.எஸ்.ரத்ன வேல் 'உதயனுக்குத்' தெரிவிக்கையில், "பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை பிணை யில் விடுவிக்க முடியாது. அதனால் சட்டமா அதிபர் திணைக்களத்தினரு டன் இது சம்பந்தமாக பேச்சு நடத்தி னோம். ஜெயக்குமாரிக்கு இளம்பிள்ளை இருக்கின்றார் என்பதையும் மற்றொரு காணாமற்போனபிள்ளையைத்தேடியே அவர்கள் போராட்டம் நடத்தினர் என்றும், அந்தப் பிள்ளையை இன்றும் தேடி வரு கின்றனர் எனவும் நாம் தெரிவித்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளை மீள உரு வாக்கப்படுவதற்கு ஆதரவளித்தார் என்று சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை. எனவே அவரை நிபந்தனை அற்ற பிணையில் விடுவிக்குமாறு சட்டமாஅதிபர் திணைக் களத்தினரிடம் கேட்டிருந்தோம். ஆனா லும் நீதிமன்றத்தில், பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நிபந்தனையற்ற விதத்தில் விடுவிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் அவர் நிபந்த னையுடன் பிணையில் விடுவிக்கப்பட் டார்"– என்று தெரிவித்தார்.

அதேவேளை, ஜெயக்குமாரி எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி நீதிமன்றில் மீண் டும் முன்னிலையாக வேண்டும். (ற-5)

## பொறுப்புக்

மறக்காது. அதேபோன்று செப்ரெம் பரில் ஐ.நாடுகள் விசாரணை அறிக்கை வெளியாகி விவாதிக்கப்படவேண்டும் என்பதிலும் நாங்கள் உறுதியாகவுள் ளோம் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்திப்பதற்கு முன்னர் பிரிட்டனின் நேற்றைய டெய்லி மிரர் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் இதனை குறிப்பிட்டுள் ளார். அவர் அதில் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

இலங்கைக்கு 2013 இல் பயணம் செய்த தருணத்திலிருந்து இலங்கை யின் கடந்த கால விவகாரங்களுக்குத் தீர்வு காண உதவுவது குறித்தும், அந்த நாட்டுக்குச் சிறந்த எதிர்காலம் அமைய உதவுவது குறித்தும் நான் உறுதியாக இருக்கிறேன். அந்த நாட்டு மக்கள் புதிய ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்துள்ளனர். அவர் நல்லிணக்கம் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்த தனது முழுமையான உறுதிப்பாட்டை வெளிப் படுத்தியுள்ளார். அரசியல் , பொருளா தார, சமூக சீர்திருத்தங்கள் மூலமாக வும் ,கடந்த கால விவகாரங்களுக்கு வெளிப்படையாகவும், நேர்மையாக வும் தீர்வு காண்பதன் மூலமாகவும் இலங்கைக்குள்ள சாத்தியப்பாடுக ளைப் பயன்படுத்த முனைவதற்கு புதிய அரசுக்கு உண்மையாக வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியுடனான முதலாவது சந்திப்பின்போது அவருக் கான எனது செய்தி இதுவாகவே அமைந்திருக்கும்.

அவருக்கு முன்னர் இலங்கை ஜனாதிப தியாக பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ வுக்கு முற்றிலும் மாறான விதத்தில் சிறி சேன எடுத்துள்ள வெளிப்படையான முற்போக்கான நடவடிக்கைகளுக்கு பதிலாகவே ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கையை வெளியிடுவதை மேலும் ஆறு மாதங்களுக்கு பிற்போடுவது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் யோசனைக்கு நாங் கள் ஆதரவளித்தோம்.

ஒரு வருட காலத்திற்கு முன்னர் யாழ்ப் பாணத்தில் நான் சந்தித்தவர்களின் முகங் களை என்னால் மறக்க முடியாது. தாங்க முடியாத துயரங்கள் மற்றும் இழப்புகள் குறித்து அவர்களது கதை கள் என்றும் என் மனதில் தங்கியிருந்து மாற்றங்களுக்கான முயற்சிகளை முன்னெடுக்கச்செய்யும். நான் அங்கு கேட்டதும் பார்த்ததும், நான் ஏன் அங்கு சென்றேன் என்பதைச் சுட்டிக்காட்டும் விடயமாக அமைந்துள்ளது.

அங்கு அவ்வேளை முன்னேற்றங்கள் எதுவும் காணப்படவில்லை என்பதை வெளியுலகிற்கு தெரியப்படுத்தவும், சீர்திருத்தங்களுக்கான சர்வதேச அழுத் தங்களை ஏற்படுத்துவதற்காகவுமே நான் யாழ்ப்பாணம் சென்றேன். இலங்கை முழுவதிலும் உள்ள பாதிக் கப்பட்டவர்களுக்காக நாங்கள் அதற்கு காரணமானவர்களைப் பொறுப்புக் கூறச்செய்யவேண்டும்.

அதனை நாங்கள் மறக்கமாட்டோம். அதன் காரணமாகவே 2015 செப் ரெம்பரில் ஐநா விசாரணை அறிக்கை வெளியாகி அது குறித்து விவாதிக் கப்படவேண்டும் என நாங்களும் ஐக் கிய நாடுகள் மனித உரிமை ஆணை யாளரும் தெளிவாக தெரிவித்துள்ளோம். நாங்கள் அதனை பின்பற்றுவோம். இன்னும் ஆறு மாத காலத்திற்கு பின்னர் உலகின் கவனம் மீண்டும் இலங்கை மீது விழும்–என்றுள்ளது. (த)

## போராடிய

82 ஆசிரியர்களும், முல்லைத்தீவு வல யத்தில் 35 ஆசிரியர்களும், மன்னார் வலயத்தில் 11 ஆசிரியர்களும், மடு வலயத்தில் 20 ஆசிரியர்களும், தீவக வலயத்தில் 54 ஆசிரியர்களுமாக மொத்தம் 298 பேருக்கு இடமாற்றக் கடிதங்ககள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி இடமாற்றக் கடிதங்களைப் பெற்று தாம் விரும்பிய பாடசாலைகளுக்குச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி, வவுனியா வடக்கு, முல் லைத்தீவு, வடமராட்சி கிழக்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த சில ஆசிரியர் களின் இடமாற்றக் கடிதங்கள் நிராகரிக் கப்பட்டுள்ளன. அவர்களை இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மாகாணத் திணைக்களத்துக் குச் சென்று தமது பணிக்கால விவரங் கள் மற்றும் இடமாற்றத்துக்குத் தகுந்த காரணங்களை முன்வைக்குமாறு அறு வுறுத்தப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தைப் பெறுவதற்காக நேற்று முற்பகல் 10 மணிக்கே பல ஆசிரியர் கள் மாகாணக் கல்வித் திணைக்களத் தில் திரண்டிருந்தனர். பிற்பகல் ஆனதும் அனைவரும் அங்கு ஒன்றுகூடினர். பிற்பகல் 4.30 அளவில் அவர்களுக் குக் கடிதம் வழங்கப்பட்டது.

ஆசிரியர்கள் தமக்கு இடமாற்றம் வழங் குமாறு கோரித் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வந்தனர். நேற்று முன்தினமும் அவர்கள் காலையிலி ருந்து வடமாகாணக் கல்வி அமைச் சின் செயலகம் முன்பாகவும் போராட் டத்தில் ஈடுபட்டனர். அதற்கு உரிய பதில் வழங்கப்படாததால்வடமாகாணக்கல்வி அமைச்சர் செயலாளர் உள்ளிட்ட அதி காரிகள் அலுவலகத்திலிருந்து வெளி யேறாதவாறு வாயிலைப் பூட்டி இரவு 9.30 மணிவரை போராட்டத்தில் ஈடு பட்டனர். அதன்பின்னரே நேற்றுக் கடி தங்களை வழங்க அதிகாரிகள் சம்ம தித்திருந்தனர். (ற-4,422)

## பனடோல்

இடத்தைச் சேர்ந்த கிருபாகரன் அருண் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த குழந் தைக்குத் தாய் பனடோல் கொடுத்து தண்ணி பருக்கியுள்ளார். ஆனால் பன டோல் தொண்டையில் சிக்கியதைய டுத்துக் குழந்தைக்கு மூச்சுத் திணறி மயக்கம் ஏற்பட்டது. உடனடியாகக் குழந்தையை அச்சுவேலி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் குழந்தை அதற்கு முன்னரே உயிரிழந்து விட்டது என்று தெரிவிக் கப்பட்டது.

உடல் பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி உடற்கூற்றுப் பரி சோதனையின் பின்னர் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4)

## ஆட்சி

வரவுள்ளார். யாழ்ப்பாணத்துக்கு வரும் அவர், இந்திய அரசின் நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கவுள் ளார். இளவாலைப் பிரதேசத்தில் அமைக் கப்பட்டு வரும் வீடுகளே கையளிக்கப் படவுள்ளன.

எட்டு வீடுகளுக்கான சான்றிதழைக் கையளிக்கும் இந்தியப் பிரதமர், ஒரு வீட்டை மட்டும் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார்.

அந்த வீடுகளின் நிர்மாணப் பணிகள் இன்னமும் முழுமையடையவில்லை. அதனால் அவசர அவசரமாக இராணு வத்தினர் வீடுகளை நிர்மாணிக்கும் நட வடிக்கையில் முழு வீச்சாக ஈடுபட் டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் செல்லவுள்ள பிரதே சங்கள் யாவும் பூரணமாக துப்புரவு செய்யப்படுகின்றது. கீரிமலை – மாவிட்ட புரம் வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகள் வெட்டப்பட்டு துப்புரவாக் கப்பட்டுள்ளன. வீடு கையளிப்பு இடம் பெறவுள்ள இடத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களும் பூரணமாக துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (ற-5)

## யாழ்.சிறையில்

கிளிநொச்சி பாரதி புரத்தைச் சேர்ந்த தேவதாஸ் குணசீலன் (வயது 46) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை அவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. அதனைய டுத்து அவரை சிறைச்சாலை உத்தியோ கத்தர்கள் யாழ்.போதனா வைத்தியசா லைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அங்கு பரிசோதனைக்குட்படுத்திய போது அவர் அதற்கு முன்னரே உயிரிழந்து விட்டமை தெரியவந்தது. விசாரணை களின் பின்னர் சடலம் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4)

## சிப்பாயின்

முகாமில் உள்ள மாமரம் ஒன்றிலேயே அவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டார். அவரது சடலம் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரத அறையில் வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுவதா கப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

## பேரவையினரை

முன்னைய ஆட்சியாளர்களால் நிய மிக்கப்பட்டு, செயற்பட்டு வந்த பல் கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவரை பதவி விலகு மாறு கோரப்பட்டிருந்தது. அவர் பதவி விலகியதன் பின்னர் கடந்த புதன்கிழமை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவராக பேராசிரி யர் மொஹான் டீ சில்வா நியமிக்கப் பட்டார். அவர் ஜெயவர்த்தனபுர மருத் துவ பீட முன்னாள் பீடாதிபதியாவார். பதில் தலைவராக பேராசிரியர் எம். குணரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீட முன்னாள் பீடாதிபதியாவார்.

புதிதாகப் பொறுப்பேற்ற அரசு பேர வைக்குப் புதிய உறுப்பினர்களை நிய மிக்கத் திட்டமிட்டுள்ளது. அவ்வாறு புதியவர்கள் விரைவில் நியமிக்கப்பட வுள்ளதால் பழைய உறுப்பினர்களை வெளியேறுமாறு மொஹான் டீசில்வா நேற்றுப் பிற்பகல் அறிவித்துள்ளார்.

அதேவேளை, யாழ்.பல்கலைக்கழகப் பேரவையில் உறுப்பினர்கள் அரசியல் ரீதியான நியமனங்களைக் கொண்டி ருந்ததோடு குறிப்பாக, அமைச்சரின் சிபாரிசில் யாழ்.பல்கலைக்கு நியமிக்கப் பட்ட வெளிவாரி உறுப்பினர்கள் பல் கலையின் வளர்ச்சிக்கு உதவும் வகை யில் ஆக்கபூர்வமான செயற்பாடுக ளைக் கொண்டிருக்கவில்லை என்றும் பல்கலை வளர்ச்சியில் அக்கறையற் றிருக்கின்றனர் என்றும் பல்கலைக் கழகத் தரப்பினராலேயே பலதடவை கள் குற்றம் சாட்டப்பட்டு ஆர்ப்பாட்டங் களும் இடம்பெற்றிருந்தன. (ற-4)

## மகளை

செயற்பாட்டாளர்கள் அவருக்கு மாலை அணிவித்து கையில் பூச் செண்டு கொடுத்து வரவேற்றனர்.

ஜெயக்குமாரி கண்ணீர் மல்கியபடி தனது இரு கரங்களையும் கூப்பியபடி கொண்டு, தனது விடுதலைக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரி விப்பதாகக் கூறினார்.

அழுதவாறே ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்தார்: "என்ர காணா மற்போன பிள்ளையைத்தான் தேடித் தி யுறன். இண்டைக்கும் என்ர பிள்ளை வரவேணும். நான் அநாதையாய் போயிட்டன். என்ர பொம்பிளை பிள்ளை தனிச்சுப் போயிட்டுது. என்ர பிள்ளையை தனிய தவிக்க விட்டிட்டு ஒரு வருசம் சிறையில இருத்திட் டாங்கள்"– என்று அவர் கண்ணீருடன் கூறினார். (ற-5)

## மனம்

எனவும், அவ்வாறு தெரிவித்தமைக்கு மிகவும் மனம் வருந்துவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

இதேவேளை– இந்தியப் பிரதமரின் இலங்கை பயணத்தின் பின்னர் இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைக்குத் தீர்வு காணப் படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார். (ற)


# Vacancies

எமது யாழ்.நகர் பயிற்சி நிலையத்தில்
கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு
தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**Assistant Center Manager - Male**

The applicant should posses a computer Degree qualification or Higher Diploma from Recognized Institution (Age 24-28)

**Course Counselor - Female**

பாடநெறிகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதுடன் மாணவர் தொடர்பு அலுவலராக பணிபுரிய உயர்தரம் மற்றும் கணனி டிப்ளோமா கற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். கொழும்பு தலைமை காரியாலயத்தில் ஆரம்ப பயிற்சிகள் அளிக்கப்படும். (Age 19-24)

**Lecturer for Java, C, C++ - Male / Female**

**Lecturer for AutoCAD (Part time) - Male**

**Instructor for Tally & QB - Male / Female**

சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்

**ASIAN COMPUTER EDUCATION**

hoartwork@gmail.com



## மரண அறிவித்தல்

### அருட்தந்தை அன்ரனி சகாயநாதன்

(முன்னாள் மாகாண அதிபர் திருவுளச் சபை, பரப்பான் கண்டல் பங்குத்தந்தை)

மன்னார் முருங்கன் பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் தற்போது பரப்பான் கண்டல் மன்னாரில் வசித்து வந்தவருமான அன் ரனி சகாயநாதன் நேற்று (10.03.2015) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின் னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அருட்தந்தை சணா
திருவுளச்சபை அருள்பணி

(57603)
(10.3)



## மரண அறிவித்தல்

### சிவசிவாபிள்ளை ரவீந்திரதாஸ்

(ஓய்வுபெற்ற கிராமஅலுவலர் J/86)



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கலட்டியைப் பிறப் பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாக வும் தற்போது பொற்பதி வீதிகொக்குவிலில் வசித்த வருமான சிவசிவாபிள்ளை ரவீந்திரதாஸ் நேற்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03. 2015) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# நட்டமடையும் விவசாயிகள்

அச்சுவேலி,மார்ச் 11
யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கை 'சதொச' நிறுவனத்தின் மூலம் சந்தைப்படுத்துவதற்கு விவசாயிகள் மேற்கொண்ட முயற்சி இந்த வருடம் கைகூடவில்லை. இதனால் தனியார் துறையினருக்கு விற்பனை செய்வதாகவும் இதனால் தமக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கை விற்பனை செய்வதற்கு சதொச நிறுவனத்துடன் பேச்சு நடத்தப்பட்டு வந்தபோதிலும் சதொச நிறுவனத்தின் நிர்வாகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றம் உருளைக்கிழங்கு கொள்வனவில் இணக்கப்பாடு இல்லாத நிலையை ஏற்படுத்தி உள்ளது என்று யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில், விவசாயிகள் தனிப்பட்ட ரீதியில் தனியார்துறையினருக்கும் கொழும்பு, தம்புள்ள மத்திய சந்தைக்கும் எடுத்துச் சென்றும் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் ஏற்று இறக்கு கூலி, தரகு என்பனவற்றை விவசாயிகள் செலுத்துவதால் கணிசமான அளவு செலவு ஏற்படுகின்றது.

இந்த முறை உருளைக்கிழங்குச் செய்கையாளர்களுக்கு எந்தவித மானிய உதவியும் வழங்கப்படவில்லை. அதேநேரம் விற்பனை விலையிலும் தளம்பல் ஏற்பட்டுள்ளது.

விளைச்சலில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் நியாயமான விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் போனது விவசாயிகளை பாதிப்படையச் செய்துள்ளது-என்றார். (வ-11)

## தென்னருவி 2015 வர்த்தகக் கண்காட்சி

தென்மராட்சி கல்வி வலயத்தின் 'தென்னருவி 2015' வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 13,14 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

13ஆம் திகதி மாணவர்களும் 14ஆம் திகதி பொது மக்களும் மு.ப.10 மணி தொடக்கம் பி.ப.4 மணிவரை பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானமும் சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், மேலதிக மாகாணப் பணிப்பாளர் திருமதி பா.செல்வின், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (வ-9)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

தென்மராட்சி, மார்ச் 11
போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்த நபரை சாவகச்சேரி பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மட்டுவில் பகுதியில் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது 5 பைக்கற்றுக்களில் வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை கைப்பற்றியதுடன் குறித்த நபரையும் கைது செய்தனர்.

குறித்த நபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். கஞ்சா விநியோகத்தர்களைக் கைது செய்ய பொலிஸாருக்கு உதவ வேண்டும் என்ற நிபந்தனையுடன் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது. (வ-9)

## 3 கடைகள் தீயால் சேதம்

நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் ஏற்பட்ட தீயினால் மூன்று வர்த்தக நிலையங் களுக்கு சேதம் ஏற்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. பொலிஸாரும் தீயணைப்பு படையினரும் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)



## விபசாரக் குற்றம்: ஒருவர் கைது

தென்மராட்சி, மார்ச் 11
மீசாலைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் விபசாரம் நடத்தியது தொடர்பாக மேலும் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில் குறித்த விடுதியில் திடீர் பரிசோதனை நடத்திய சாவகச்சேரி பொலிஸார்பெண் உட்பட மூவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இதுதொடர்பாகத்தேடப்பட்டு வந்த நபரை ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்தனர். குறித்த நபரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். அதை அடுத்து அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## விழிப்புணர்வு பேரணி நாளை

மட்டக்களப்பு, மார்ச் 11
மட்டக்களப்பு மாவட்ட புற்றுநோய் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை கல்லடிப் பாலம் முதல் நகரிலுள்ள காந்திப் பூங்கா வரை புற்றுநோய் விழிப்புணர்வுப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளதாக, சங்கத்தின் தலைவர் மருத்துவர் என்.சயனொளிபவன் தெரிவித்தார். (வ)



யாழ்-புல்லுக்குளத்தின் பாதுகாப்பு அணைகளில் ஒரு பகுதி இடிந்து சரிந்துள்ளன. இதனால் அணையின் வெளிப் பக்கமாக செல்லும் நடைபாதையூடாகப் பயணிக்கும் மக்கள் ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (வ-17)

## ஆணின் சடலம் இனங்காணல்

கல்முனைப் பொலிஸ் பிரிவிலுள்ள பெரிய நீலாவணை கடற்கரையில் நேற்று முன்தினம் காலை கரையொதுங்கிய சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சடலம் பாண்டிருப்பு மாரியம்மன் கோயில் வீதியில் வசித்து வந்த அரசரட்ணம் சாந்தகுமார் (வயது-41) என்பவருடையது என்று சடலம் என்று அவரது மனைவி தயாநிதி பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் அடிக்கடி வலிப்பு நோயால் அவஸ்தைக்குள்ளாகுபவர் என்றும் சற்று புத்தி பேதலித்தவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் அவர் ஞாயிற்றுக்கிழமை இரவு காணாமல் போயிருந்ததாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## திருகோணமலை வர்த்தகர்கள் 72 பேருக்கு எதிராக வழக்கு

### பொருள்களின் விலை குறைக்காததால்

திருகோணமலை, மார்ச் 11
அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருள்கள் பலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

எனினும் விலை குறைப்பு செய்யப்பட்ட பொருள்களை உரிய விலைக்கு விற்பனை செய்யாத 72 வர்த்தகர்களுக்கு எதிராக திருகோணமலை மாவட்ட மஜிஸ்திரேட் நீதிமன்றில் எதிர்வரும் 17 ஆம் திகதி வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக திருகோணமலை மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பொறுப்பதிகாரி ஆர்.எப். அன்வர் சதாத் தெரிவித்தார்.

விலை குறைப்பு செய்யப்பட்ட பொருள்களை வியாபாரிகள் குறைத்து விற்காத சந்தர்ப்பத்தில் அதுதொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்குமாறும் அவர் மேலும் குறிப்பிட்டார். திருகோணமலை மாவட்டத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பொறுப்பதிகாரியுடன் விசாரணை உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்பில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். (வ)

## பாவனைக்கு உதவாத மீன் கைப்பற்றி அழிப்பு

### கிண்ணியா தோனா கடற்கரை மீன்சந்தையில் அதிரடி வேட்டை

கிண்ணியா தோனா கடற்கரை மீன் சந்தையில் பாவனைக்கு உதவாத 150 கிலோவுக்கு அதிகமான மீன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

விற்பனைக்குத் தயாரான நிலையில்வைக்கப்பட்டிருந்த அவற்றை கிண்ணியா மருத்துவ சுகாதார அதிகாரி மற்றும் பொது சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் கைப்பற்றி அழித்துள்ளனர்.

கிண்ணியா மருத்துவ சுகாதார அதிகாரிக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டு மீன்கள் கைப்பற்றப்பட்டதாக மருத்துவ சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார். (வ)

# மருத்துவர்கள் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாண வைத்திய சாலைகளில் காணப்படும் மருத்துவர் பற்றாக்குறையை நீக்குவதாக கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதியளித்துள்ளார்– என்று வடக்கு சுகாதார அமைச்சர் பசத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

"வடக்கு மாகாணத்தில் 101 வைத்தியசாலைகள் உள்ளன. அவற்றில் 31 வைத்தியசாலைகளில் மருத்துவர் எவருமில்லை. அந்த வைத்தியசாலைகள் மூடப்படவில்லை. ஏனைய வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவர்களைக் கொண்டு அவற்றை இயக்கி வருகின்றோம்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"அண்மையில் கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும், மாகாண சுகாதார அமைச்சர்களுக்கும் இடையே சந்திப்பொன்று நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாக கோரிக்கைவிடுத்திருந்தோம். 31 வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லை என்பதைக் கேட்ட சுகாதார அமைச்சர் ஆச்சரியமடைந்தார். வைத்தியர்களாக வெளியேறுபவர்களை மேற்படி 31 வைத்திய சாலைகளுக்கும் தலா ஒருவர் வீதம் இந்தமாத இறுதியில் நியமிப்பதாக அவர் உறுதியளித்தார்."– என்றும் அமைச்சர் சத்தியலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# சுகாதார வசதிகளின்றிய உணவகங்களுக்கு பூட்டு

## உத்தரவிட்டது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சுகாதார வசதிகளின்றி இயங்கி வந்த உணவகங்களை மூடுமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக பொதுச் சுகாதார பரிசோதகரால் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட உணவக உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை தொடர்ந்து அவரை பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. குறித்த உணவகம் சுகாதார தேவைப்பாடுகள் இல்லாது இருப்பதால் அதனை மூடுவதற்கு கட்டளை பிறப்பிக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர் நீதிமன்றிடம் விண்ணப்பித்தார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் பெ.சிவகுமார் உணவகத்தை உடனடியாக மூடுமாறும் உத்தரவிட்டார்.

அதேவேளை, யாழ். சிறைச்சாலை நிர்வாகத்தால் நடத்தப்பட்டுவரும் உணவகமும் சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக நேற்று நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. யாழ். சிறைச்சாலை நிர்வாகத்தின் நலனோன்பு கழகத்தால் குறித்த உணவகம் சிறைச்சாலைக்கு அருகிலுள்ள வீடொன்றில் நடத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகருக்கும் இன்னொரு சிறைச்சாலை உத்தியோகத்தருக்கும் எதிரான இந்த வழக்கு பொதுச் சுகாதார பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது எச்.ஏ.சி. பெரேரா நீதிமன்றில் தோன்றி உடனடியாகக் குறித்த சுகாதார தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதாக மன்றுக்கு உறுதிமொழி வழங்கினார். இதனையடுத்து அவரை எச்சரித்த நீதிமன்றம் இருவார காலப் பகுதியில் குறித்த தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யுமாறு கட்டளையிட்டது.

யாழ். நகரப் பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கும் உணவகங்களுக்கு எதிரான பொது சுகாதார பரிசோதகர்கள் அண்மைக் காலங்களில் எடுத்து வருகின்றனர். அதனால் இவ்வாறான பல உணவகங்களை மூடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ற–103)

## கசிப்பு விற்றோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 11

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட மூன்று குற்றவாளிகளுக்கு தலா 25 ஆயிரம், 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும், மற்றைய குற்றவாளிக்கு 50 ஆயிரம் ரூபா காசுப் பிணையுடன் 25ஆயிரம் ரூபா ஆள்பிணையும் செலுத்துமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ. வஹாப் தீன் உத்தரவிட்டார்.

ஒரு போத்தல் கசிப்பு வைத்திருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட ச.கலைச்செல்வி என்னும் பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் கட்டத் தவறின் ஒருமாதசாதாரண சிறை தண்டனையும் வழங்குமாறும், கசிப்பு விற்றார் என்று கூறி கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்ட 62 வயதான சௌக்கிய ராசா கனகரத்தினம் என்பவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 15 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், கட்டத்தவறின் ஒருமாத கால சாதாரண சிறை தண்டனை,சமூகசேவையும்மேற்கொள்ள வேண்டும் என்றும், இரண்டு போத்தல்களில் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட ச.ஜெசி என்பவருக்கு 50ஆயிரம் ரூபா காசுப் பிணையும், 25ஆயிரம் ரூபா ஆள் பிணை வழங்கியும் உத்தரவிடப்பட்டது. (ற–21)

# பெரும்போக அறுவடை மன்னாரில் ஆரம்பம்



மன்னார், மார்ச் 11

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கை அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை மன்னார் மாவட்டத்தில் 18 ஆயிரத்து 100 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை பெரிய, சிறிய நீர்ப்பாசனம் மற்றும் மானாவரி ஆகிய மூன்று முறைகளில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 60 சதவீதத்துக்கு மேல் வீ.ஜி. 360 (கீரிச் சம்பா) செய்கை பண்ணப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை அழிவடைந்திருந்தது. அதையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குநிவாரணம்வழங்கப்பட்டு, மீண்டும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை ஆரம்பித்துள்ளது. (ற–56)

# தண்ணீருக்கு அல்லாடும் மாந்தை மேற்கு மக்கள்



மன்னார், மார்ச் 11

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேட்டையன் முறிப்பு, மாளிகைத்திடல், மினுக்கன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த கிராமங்களின் சில பகுதிகளுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. எனினும் பெரும்பாலான பகுதிகளுக்கு குடிதண்ணீர்விநியோகிக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

மக்களின் சிரமங்களைக் கருத்தில்கொண்டு தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று அந்தப் பகுதியில் நீர்த்தாங்கி ஒன்றும், அதற்கு நீர்பாய்ச்சுவதற்கு குழாய்க் கிணறு ஒன்றும் அமைத்துக் கொடுத்துள்ளது. ஆயினும் அந்தக் குழாய்க் கிணற்றுத்தண்ணீர் பாவனைக்கு உகந்ததாக இல்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (ற)

## வல்லை கொல்களம் திருத்தப்படவுள்ளது

அச்சுவேலி, மார்ச் 11

அச்சுவேலி வடக்கு வல்லை கொல்களம் மீண்டும் 17 லட்சம் ரூபா செலவில் வலி.கிழக்கு பிரதேச சபையால் திருத்தி அமைக்கப்படவுள்ளது.

கொல்களம் உரிய நடைமுறை விதிகளுக்கு அமைய அமைக்கப்படவில்லை என்று தெரிவித்து சுகாதாரப் பகுதியினரால் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. அதை அடுத்து இரண்டு வருடங்கள் வரையில் மூடப் பட்டிருந்தது.

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கொல்களம் இல்லாமையால் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களுக்கான இறைச்சி வலிகிழக்கு பிரிவுக்கு வெளியே உள்ள கொல்களங்களில் வெட்டப்பட்டு இதுவரை கொண்டுவரப்பட்டது. (ற–11)

## கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு செயலமர்வு

மன்னார், மார்ச் 11

சிறு கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சின் ஏற்பட்டில் மன்னார் மாவட்டத்தில் சிறு கைத்தொழில் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் விசேட விழிப்புணர்வு செயலமர்வு நேற்றுமுன்தினம் காலை மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சிறு கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சுடன் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியவை இணைந்து இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன.

அதில் 200 சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு 4 குழுக்களாக பிரிக்கப்பட்டனர். அந்தக் குழுக்களுக்கு கருவாடு உற்பத்தி, உணவு உற்பத்தி, இரசாயன பொருள்கள் உற்பத்தி, பழப்பயிர் செய்கை மற்றும் வீட்டுத்தோட்டச் செய்கை ஆகிய நான்கு துறைகளுக்குள் உள்வாங்கப்பட்டு அவர்களின் சுய தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் சிறு கைத்தொழில் வர்த்தக அமைச்சின் செயலாளர் கமகே, மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ற–56)

# க[illegible]ிவு ஒயில் குறித்த வழக்கு மீளவும் மல்லாகம் மன்றுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 11

கழிவு ஒயில் தொடர்பான மல்லாகம் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு வழக்கில் மல்லாகம் நீதிமன்றிலிருந்து எடுக்கப்பட்ட வழக்கு ஏட்டை, மல்லாகம் நீதிமன்றுக்கே திருப்பி அனுப்பி வழக்கு விசாரணையை அங்கு தொடர்ந்து முன்னெடுக்குமாறு யாழ். மேல்நீதிமன்று நேற்றுத் தெரிவித்துள்ளது.

சுன்னாகம் உள்ளிட்ட பல இடங்களிலும் நிலத்தடி நீரில் கழிவு [illegible]ில் கலந்ததற்கு நொதேர்ன் [illegible]ன்நிலையத்தினரே காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதனால் அந்த நிறுவனத்துக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, மின்உற்பத்தி நிறுவனத்தைத் தற்காலிகமாக மூடுமாறு உத்தரவிடப்பட்டது.

அந்த உத்தரவுக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் மேன் முறையீடு செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரப்பட்டது. ஆனால் அதற்கு மேல்நீதிமன்று அனுமதி மறுத்ததோடு பராமரிப்புக்கு மாத்திரம் அனுமதி வழங்கியது.

கடந்த ஒருமுறை பராமரிப்புக்குச் சென்றபோதும், அங்கிருந்து அவர்கள் வெளியேறத் தாமதமான நிலையில் யாழ். மேல்நீதிமன்ற உத்தரவுக்கமைய மேல்நீதிமன்றப் பதிவாளர் அங்கு சென்றதையடுத்து அவர்கள் வெளியேறினர்.

அந்த வழக்கு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தபோதும், பின்னர் நகர்தல் பத்திரம் சமர்ப்பித்து வழக்கு முன்னரே எடுக்கப்பட்டது. மேல்நீதிமன்ற நீதிபதி சம்பவ இடத்துக்குச் சென்று பார்ப்பது தொடர்பில் பிரமத நீதியரசரின் அறுவுறுத்தலுக்காக வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. முன்னர், மல்லாகம் நீதிமன்றிலிருந்து மேல்நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருந்த மல்லாகம் நீதிமன்ற வழக்கு ஏட்டை மீண்டும் மல்லாகம் நீதிமன்றுக்கே திருப்பி அனுப்பி வழக்கைத் தொடருமாறு மேல் நீதிமன்று நேற்றுத் தெரிவித் துள்ளது. (ற-4)

# பனை உற்பத்தியை அதிகரிக்க தொழில்சார் உபகரணங்கள்

மன்னார், மார்ச் 11

மன்னார் மாவட்டத்தில் பனை சார் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் வகையில் பனை சார் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கு மன்னார் மாவட்ட பனை அபிவிருத்தி சபையினால் தொழில் சார் உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன.

கைத்தொழில் வர்த்தக அமைச்சர் [illegible]த் பதியுதீனின் பணிப்புரைக்கு அமைவாக குறித்த தொழில்சார் உபகரணங்கள் சுமார் 100 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. பதநீர் உற்பத்தி, ஒடியல் தயாரித்தல் போன்றவற்றுக்கான உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டன. பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கமல்நாதன் விஜிதன் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டு தொழில்சார் உபகரணங்களை வழங்கி உள்ளனர். (ற)

# விசேட தேவையுடைய 650 மாணவர்கள்

## கிளிநொச்சி வலயத்தில் கற்கின்றனர்

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் விசேட தேவையுடைய 650 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர் என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேள் தெரிவித்தார்.

[illegible]தேவையுடைய மாண[illegible] கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் விசேட வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த வகுப்புக்களில் 32 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். மிகுதி மாணவர்கள் பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்றனர். – என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த கால போர்ச்சூழல், இடப்பெயர்வுகள், நலன்புரி வாழ்வு என்பனவே கூடுதலான விசேட தேவையுடைய மாணவர்கள் உருவாகுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறான சிறார்களுக்கு உதவி அமைப்புக்களின் உதவிகள் கூடுதலாக தேவைப்படுகின்றன– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# வடக்குக்கு 49 பஸ்கள் உடன் தேவை


யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாணத்துக்கு உடனடியாக 49 பஸ்கள் தேவையாக இருக்கின்றது. பஸ் டிப்போ மற்றும் மல்லாகம் வேலைத் தளத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு 54 மில்லியன் ரூபா உடனடியாகத் தேவை. – இவ்வாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 309 பஸ்கள் தேவையாகவுள்ளன. ஆனாலும், 260 பஸ்களே தற்போது கைவசம் உள்ளன. சாரதிகள் 439 பேர் தேவை என்கின்ற போதும் 338 பேரே கடமையில் இருக்கின்றனர். நடத்துநர்களும் 439 பேர் தேவையாக உள்ள போதும், 376 பேரே கடமையில் இருக்கின்றனர். அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். – என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7 பஸ் டிப்போக்கள் வடக்கு மாகாணத்தில் இருக்கின்றன. அதில் 6 டிப்போக்கள் மாத்திரம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய டிப்போ புனரமைப்புக்கு 50 மில்லியன் ரூபா தேவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மல்லாகத்திலுள்ள, பிராந்திய வேலைத் தளத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு 4.2 மில்லியன் ரூபா தேவை.– என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் ரயில்வே புனரமைப்புக்கு 800 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஓமந்தை – பளை – காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதைப் புனரமைப்பு பூர்த்தியடைந்துள்ளது. மதவாச்சி – மடு – தலைமன்னார் வரையிலான ரயில் பாதைப் புனரமைப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது– என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)



வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் நேற்று சர்வதேச மகளிர் தினம் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன் இருந்து ஊர்வலமாக காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய மகளிர் விழிப்புணர்வுப் பேரணி கண்டி வீதியூடாக சென்று மு.ப. 10 மணியளவில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தை சென்றடைந்தது. அங்கு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உட்பட பல அதிதிகள் வரவேற்கப்பட்டனர். இந்த நிகழ்வில் க.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன், அன்ரனி ஜெகநாதன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் வவுனியா நகர சபைச் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற-402)

# யாழ். வந்தனர் சின்ஹா குழுவினர்

யாழ்ப்பாணம், மார்ச் 11

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வடபகுதி பயணத்தை இறுதி செய்யும் நோக்குடன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா தலைமையிலான குழுவினர், யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்து பல இடங்களையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வடக்கு மாகாணத்துக்கு வருகை தரவுள்ளார். தலைமன்னார் ரயில் சேவையை ஆரம்பித்து வைத்த பின்னர், யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் மோடி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை யாழில் வைத்துச் சந்திக்கவுள்ளார். அத்துடன் கலாசார நிலையத்துக்கான அடிக்கல்லையும் நடவுள்ளார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் வழங்கும் மதிய விருந்து உபசாரத்தில் பங்கேற்பார். அதனைத் தொடர்ந்து, கீரி மலைக்குச் செல்லும் பிரதமர் அங்கு இந்திய வீட்டுத் திட்டத்தைக் கையளிக்கவுள்ளார்.

இந்தப் பயண ஒழுங்குகளை இறுதி செய்வதற்கும், ஏற்பாடு செய்வதற்குமாக இந்தியத் தூதுவர் வை.கே.சின்ஹா தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு முதலமைச்சர் ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளனர். (ற-5)

# எச்சரிக்கை கோபுரங்கள் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 11

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ். மாவட்டத்தில் உடுத்துறை, மணற்காடு, வல்வெட்டித்துறை, சுப்பர்மடம், நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள முன்னெச்சரிக்கை கோபுரங்கள் இன்றும் நாளையும் சோதனை செய்யப் படவுள்ளன.

இதுதொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் ·. தேவையில்லை என்றும் அறிவிக்கப் புட்டுள்ளது. (வ)

# ஒயிலைத் திருடியவர் சிசிரிவி கமராவால் பொலிஸிடம் சிக்கினார்

யாழ்ப்பாணம், மார்ச் 11

எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றிலிருந்து ஒயில் கொள்கலன் ஒன்றைத் திருடிய முச்சக்கர வண்டியின் சாரதியொருவர் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவின் உதவியுடன் நான்கு மாதங்களின் பின்னர் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கொழும்புத் துறைபகுதியில் வசிக்கும் குறித்த முச்சக்கரவண்டியின் சாரதி தனது சகோதரிக்கு சொந்தமான முச்சக்கரவண்டியை அவர் இந்தியாவுக்கு சென்றிருந்த சமயம் அவருக்கு தெரியாமல் எடுத்துச் சென்று யாழ்ப்பாணம் வின்சர் சந்திப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் எரிபொருள் நிரப்பியுள்ளார்.

அச்சமயம் அங்கிருந்த ஆயிரம் ரூபா மதிப்புள்ள ஒயில் கொள்கலன் ஒன்றை திருடிச் சென்றுள்ளார். எவரும் அதனை அவதானிக்காதவாறு அங்கிருந்து மெதுவாக அவர் நழுவிச் சென்றுவிட்டார். துரதிஷ்டவசமாக எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்த கண்காணிப்பு கமராவில் அவருடைய செயல்கள் யாவும் பதிவு செய்யப்பட்டிருந்ததை அவர் அவதானிக்கவில்லை.

மறுநாள் இருப்பு எடுத்தவேளை ஒயில் கொள்கலன் ஒன்று குறைவதை அவதானித்த உரிமையாளர் கண்காணிப்பு கமராப் பதிவை அவதானித்த போது நபரொருவர் அதனை திருடுவதை கண்டுள்ளார். குறித்த நபர் வந்த முச்சக்கர வண்டியின் இலக்கமும் தெளிவாக தெரிவதை கண்ட உரிமையாளர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இது பற்றி நவம்பர் மாத காலப் பகுதியில் முறைப்பாடொன்றை மேற்கொண்டார்.

குறித்த வாகன இலக்கத்தை பெற்ற பொலிஸார் மோட்டார் வாகன திணைக்களத்திலிருந்து குறித்த வாகன உரிமையாளரின் பெயர் விலாசத்தை பெற்று கடந்தவாரம் குறித்த நபரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். அவரை ஒருவாரகாலம் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேகநபரை கடுமையாக எச்சரித்த நீதிவான் பெ.சிவகுமார் ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் அவரை விடுவித்தார்.

முச்சக்கரவண்டியையும் ஐந்து லட்சம் ரூபா பிணையில் உரிமையாளருக்கு விடுவிக்குமாறு கட்டளையிட்டார். (ற-103)

# அதிரடி காட்டி பொம்மர்ஸை வீழ்த்தி அசத்தியது டயமன்ஸ்

யாழ்ப்பாணம்.மார்ச் 11

இலங்கை உதைபந்தாட்டச் சம் மேளனம் நடத்தும் எவ்.ஏ வெற்றிக் கிண்ணத்துக்கான வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங் களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.பலம் பொருந்திய இரண்டு அணிகள் மோதிக் கொண்டதால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. முதல் பாதி ஆட்டம் ஆரம்ப மாகி 4 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் விளையாட் டுக்கழக அணி வீரன் பிரதீப் தனக்குக் கிடைந்த சந்தர்ப்பத்தைக் கோலாக மாற்றினர். பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியின் முன்கள வீரன் சாரங்கன் ஆட் டத்தின் 13 ஆவது 20 ஆவது நிமிடங் களில் அடுத்தடுத்து கோல்களைப் போட்டார். ஆட்டம் இடைவேளைக் காக நிறுத்தப்பட்ட போது பொம் மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னி லையில் இருந்தது. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியி னரும் ஆட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு களம் புகுந்தனர். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

2ஆம் பாதி ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் டய மன்ஸ் விளையாட் டுக்கழக அணி வீரன் சுசிகரன் தனக்கு கிடைத்த பந்தைக் கோலாக மாற்ற ஆட்டம் சமநிலை யானது. நேரம் செல்லச் செல்ல இரண்டு அணி வீரர்களுள் தமது அணியின் வெற்றிக்காகக் கடுமை யாக மோதிக் கொண்டனர். 16 நிமிடத்தில் துசிகரன் மீண்டும் தனக்கு கிடைத்த பந்தைக் கோலாக மாற்றினர். ஆட்டநேர முடிவில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதேவேளை, இமையாணன் மத்திய விளையாட் டுக்கழக அணிக்கும் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களை யும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற் காகச் சமநிலை தகர்ப்பு உதை கள் வழங்கப்பட்டன. இதில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கருணாகரன் விளையாட்டுக் கழக அணிக்கும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளை யாட் டுக்கழ அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-108-23)

## இன்றைய மோதல்கள்



யாழ்ப்பாணம்,மார்ச் 11

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதை பந்தாட்டச் சுற்றுதொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழ அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம் மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கட்டைக் காடு செபஸ்ரியன் விளை யாட்டுக் கழக அணி மோத வுள்ளது. (த-23)


### சல்லிக்கற்கள் விற்பனைக்கு

½ கியூப் ½ இஞ்சி சல்லி - 3000/=
½ கியூப் ¼ இஞ்சி சல்லி - 5000/=
ஏற்றுக் கூலியுடன் தொடர்புக்கு : 077 404 7912

### சிவப்பு மணல் விற்பனைக்குண்டு

பள்ள நிலங்களைச் சீர் செய்வதற்கும் வீட்டு அத்திபாரங்கள் நிரப்புவதற்கும், பூங்கன்றுகள் நாட்டுவதற்கும் உகந்த சிவப்பு நிற மணல் விற்பனைக்குண்டு.

TP :- 077 649 1027
077 940 0963


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த விஸ்வப் பிரம்மஸ்ரீ கலாபூஷணம்

**சுப்பிரமணியம் பாஸ்கரன்**

ஆச்சாரி பெற்ற சிற்பக்கலைக்கான கலைஞானச்சுடர் - நல்லூர் பிரதேசசபை சிற்பக் கலாஞான பானு - இந்துப்பேரவை ஆளுனர் விருது - வட மாகாணசபை கலாபூஷணம் - நாடளாவியரீதியில்

மேற்படி நாடளாவிய ரீதியில் பன்னிரண்டு (12) விருதுகளும், மாகாணரீதியில் பதினைந்து (15) விருதுகளும் பெற்ற அவர்களுக்கு ஜனாதிபதி மாளிகையில் 26.12.2014 இல் வாழ்நாள் உயர் விருதான "விஸ்வகர்மா" எனும் விருது வழங்கப்பட்டது. இவரது பணிகளைப் பாராட்டி வாழ்த்துவதோடு பல்லாண்டு காலம் வாழ்ந்து மேலும் பல விருதுகளைப் பெற வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு. — கலைமகள் சனசமூக நிலையத்தினர். (87075)(4.3.6)


உதயன்

# GENERAL MANAGER

We are looking for a team leader who possess business acumen, is committed, and have a passion for success.

- Male between the ages of 45-65
- Should have work experience in Account Management/Marketing and Sales (an IT background will be an added advantage)
- A Professional qualification would be an added
- advantage
  Excellent interpersonal communication skills and a
- striking personality
  Excellent command of the English Language
- Knowledge and hands -on experience using MS
- Office applications (Word /PowerPoint/Excel)
  Proactive, result driven and the ability to work
- independently and as a team member
  Patience determination, and persistence to
- troubleshoot partner/client issues
  Good organizatinal skills encompassing physical,
- mental and time management abilities
  Self-motivated worker and a multitasker
- strong Leadership Training abilities

If you believe you possess the required skills then come join us and be part of the **Uthayan** success story!

An attractive remuneration package, pleasant working environment together with perks awaits the right candidates.

Applications with a detailed curriculum vitae and contact details of two non-related referees should be sent to the below-mentioned email address within two weeks of this advertisement.

**E.SARAVANAPAVAN**
**Chairman/Managing Director**
**New Uthayan Publication (Pvt) Ltd**
**Email: md@uthayan.com**


### அகவை 50 இல் அம்மம்மா...



இன்று (11.03.2015) தனது பொன்விழாக் காணும் அம்மம்மா

திருமதி

**மாலா பரமேஸ்வரன்**

அவர்கள் கற்பகப்பிள்ளையார் அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

அன்புப் பேரன்
சிவகணேசன் கவாநிகன்
வட்டுவடக்கு, சித்தன்கேணி.

### 31ஆம் நாள் நினைவேந்தலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 30.09.1952

ஆண்டவன் அடியில் 10.02.2015

**தெய்வேந்திரம்பிள்ளை சௌந்திரேஷ்வரி**

கடந்த 10.02.2015 சிவபதமடைந்த தெய்வேந்திரம்பிள்ளை சௌந்திரேஷ்வரி 4ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவை தற்போதைய வதிவிடமாகவும் ஒட்டுசுட்டான் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்பு அன்னையின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (12.03.2015) எங்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அம்மாவின் கிரியை அழைப்பிதழ் எல்லோருக்கும் தரமுடியவில்லை எனவே எங்களின் மன்னிப்பை ஏற்று எல்லோரும் வந்து எங்கள் அம்மாவின் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

4ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. — பிள்ளைகள் சுரேஷ், ரமேஷ், சிவதீபனா.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மொன்பேட் மேரி ஜோன்ஒவ்ஆர்க் (பேபி)



சுன்னாகம் குராவத்தை நாகியம்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மொன்பேட் மேரி ஜோன்ஒவ்ஆர்க்(பேபி) நேற்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், திரு. திருமதி யோசேப் தம்பதியரின் அன்பு மருமகளும், மொன்பேட்டின் (சித்தி மோட்டோர்ஸ்) அன்பு மனைவியும், நிறோஜினி, விஜோஜினி (ஆசிரியை, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், பொனி பிரான்ஸிஸ் (கெண்டி வோர்ஜ் வேக்ஸ், பரமேஸ்வராச் சந்தி), டனிஸ்ரன் விஜயகுமார் (ஆசிரியர், யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், மைக்கலின், மக்ஸன், றொனால்டோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அற்புதராஜா, அருள்ராஜா மற்றும் பசிந்தா, லூசியா, ஜெயராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.03.2015) புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டு நல்லடக்கத்துக்காக ஏழாலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 272/1, புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். — தகவல் : கணவர், பிள்ளைகள் 021 2220206.

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1949 | 2015 |
| 11 | 03 |
| 13 | 10 |



### திருமதி சிவபாக்கியம் நல்லையார்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பன்னாலை, கொழும்பு, மானிப்பாய், தற்போது அராலி வடக்கு, செட்டியார் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் நல்லையா நேற்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

[illegible]

அராலி வடக்கு, செட்டியார் மடம், வட்டுக்கோட்டை. — தகவல் : குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன்

11 மார்ச் 2015 புதன்கிழமை

விஷயங்களை அறிய மனிதன் காட்டும் ஆர்வம், அவற்றுடன் சொந்தக் கற்பனையைச் சேர்த்துப் பிறருக்குக் கூறுவதற்கு.

—ஓர் அறிஞர்



# மனிதர்களை வாழவைக்கும் கடல் அன்னை

ராஜராஜன்

நாம் வாழுகின்ற பூமியின் மூன்றில் இரண்டு பாகம் கடலால் ஆனது. நிலப்பகுதியிலும். காடுகள், மலைகள், குளங்கள், ஆறுகள், ஏரிகள், பாலை நிலங்கள், மனிதர்கள் வாழ முடியாத பனியால் மூடிய பிரதேசங்கள், சதுப்பு நிலங்கள் ஆகியவற்றைக் கழித்துப் பார்த்தால் மனிதர்கள் வாழுகின்ற நிலப்பரப்பு மிகவும் குறைந்த அளவினதாகவே காணப்படுகின்றது. இதனால் மனிதர்கள் தமது பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்கு கடல் அன்னையின் அரவணைப்பை நாடிச் செல்கின்றனர்.

கடல்நீர் உப்புக் கரித்தாலும், கடலின் மூலமாகக் கிடைக்கும் பயன்கள் இனிப்பானவை. எமது உணவுத் தேவைக்கும் உடல் ஆரோக்கியத்துக்கும் உகந்த கடல் உணவுகள் கடல் அன்னையின் கருணையால் எமக்குக் கிடைக்கின்றன. மதிப்பிட முடியாத அருஞ்செல்வங்களும் அவளிடம் குவிந்து காணப்படுகின்றன.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றார்கள் எமது முன்னோர்கள். அன்று மட்டுமல்ல இன்றும் கூட பெரும்பாலான வணிக நடவடிக்கைகள் கடல் மார்க்கமாகவே இடம்பெற்று வருகின்றன. பாரமான பொருள்களைக் கப்பல்களில் ஏற்றி, கடல் வழியே கொண்டு செல்வது எளிதாக இருப்பதுடன் ஏராளமான பொருள்களையும் எடுத்துச் செல்ல முடிகின்றது.

இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்படாத அந்தக் காலத்தில் பாய் மரங்கள் பிணைக்கப்பட்ட கலங்களின் உதவியுடன் ஆயிரக் கணக்கான மைல்கள் கடற் பயணங்களை மேற்கொண்டார்கள். எமது மூதாதையர் அலை கடலின் நடுவே புயலுக்கும் சூறாவளிக்கும் ஈடுகொடுத்து மாதக் கணக்கிலும் – சில வேலைகளில் வருடக் கணக்கிலும் கடற் பயணங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை கூடக் காணப்பட்டது. ஆனால் இன்று கடற் பயணங்களில் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. நவீன தொழில் நுட்பத்துடன் இயந்திரங்கள் மூலமாக இயக்கப்படும் கப்பல்கள் பயணங்களை எளிதாக்குவதுடன் நேர விரயமும் தவிர்க்கப்படுகின்றது.

மன்னர் காலத்தைய பண்டைய துறைமுகங்கள் பல இன்றும் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவை வாய் திறந்தால் ஆயிரமாயிரம் கதைகளை நாம் கேட்க முடியும்.

ஆனால் இன்று மனித குலத்தையே நாசம் செய்துவிடக்கூடிய போதைப் பொருள்கள் கடல் மார்க்கமாகக் கடத்தி வரப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடத்தல்காரர்கள் கோடிக் கணக்கில் பணத்தைச் சம்பாதிக்கும் அதேவேளையில் போதைப் பொருள்களைப் பயன்படுத்துபவர்கள் தமது வாழ்க்கையையே தொலைத்து நிற்கின்றனர். பாகிஸ்தான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட உழவு இயந்திரங்களில் மறைத்து வைக்கப்பட்டு பெருமளவு போதைப் பொருள்கள் கப்பல் மூலமாகக் கடத்தி வரப்பட்டதாகத் தெரிய வருகின்றது. கடத்தல்காரர்கள் போதைப் பொருள்களையும் திரவியங்களில் ஒன்றாகக் கருதியதாய் தெரிகின்றது.

கடல் அன்னை தனது பொறுமையை இழக்கும் வேளைகளில் மனிதர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் முகமாக அவ்வப் போது இடர்களை ஏற்படுத்தி விடுவதும் உண்டு. இவற்றையே நாம் கடற்கொந்தளிப்பு, சுனாமி என அழைக்கின்றோம். ஆனாலும் கூட மனிதர்கள் இவற்றின் மூலமாக பாடம் கற்பதாகத் தெரியவில்லை. இதற்குப் பதிலாக கடலை ஆத்திர மூட்டும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் கடலுக்கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அதிலும் போர் ஆரம்பமானதன் பின்னர் அந்தத்தொடர்பு மிகவும் நெருக்கமாகிவிட்டது. கடலில் இடம்பெற்ற மோதல்கள் எண்ணிலடங்காதன. அதைப் போன்றுதான் கடல்நீரில் கரைந்த உயிர்களும் எண்ணிக்கை தெரியாதன. இந்தியாவுக்குத் தஞ்சம் தேடிச் சென்ற பல தமிழர்கள் கடலுடன் சங்கமமாகிவிட்டனர். இன்று இந்திய, இலங்கை மீனவர்கள் தமக்குள் மோதிக்கொள்வதைக் கண்டு கடல் அன்னை மனம் வருந்தவே செய்வாள். இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலமாக அவள் விளங்கும்போது இந்த அற்ப மனிதர்கள் தன்மீது நின்று கொண்டு மோதுவதை அவளால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

உலகில் வாழுகின்ற கோடிக்கணக்கான மக்கள் தமது வாழ்வாதாரத்துக்குக் கடலையே நம்பியுள்ளனர். கடலைவிட்டால் இவர்களுக்கு வேறு வழியே இல்லை. இவர்களின் வாழ்வும் சாவும் கடலை நம்பித்தான் உள்ளன. என்னதான் இடர்கள் நேர்ந்தாலும் இவர்கள் கடலைக் கைவிடுவதற்குத் துணிவதில்லை.

கடலில் இருந்து உறிஞ்சி எடுக்கப்படும் நீர் மழையாகப் பொழிந்து நாம் வாழுகின்ற பூமியைக் குளிர்விக்கின்றது. ஆனால் அந்த நீர் உப்புக்கரிப்பதில்லை. இயற்கையின் விநோதங்களில் இதுவும் ஒன்று. இதுமட்டுமல்லாது சில நாடுகளில் கடல்நீரே குடிதண்ணீராகவும் பயன்படுகின்றது.

கடல் அன்னை மனிதர்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றாள். அவளைத் தூர விலக்கி வைத்துவிட்டு மனிதர்களால் வாழவே முடியாது. ஆர்ப்பரிக்கும் அலைகளை அவள் கொண்டிருந்தாலும், அவளது அமைதி கூட சில வேளையில் ஆயிரம் கதைகளைக் கூறும். அந்த அமைதியின் பின்னால் நிச்சயமாக ஏதோ ஒன்று மறைந்து காணப்படும். கடலைப் போற்றுவோம் அதன் பெருமையை விதந்துரைப்போம்.

கடல் அன்னை தனது பொறுமையை இழக்கும் வேளைகளில் மனிதர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் முகமாக அவ்வப் போது இடர்களை ஏற்படுத்தி விடுவதும் உண்டு. இவற்றையே நாம் கடற்கொந்தளிப்பு, சுனாமி என அழைக்கின்றோம். ஆனாலும் கூட மனிதர்கள் இவற்றின் மூலமாக பாடம் கற்பதாகத் தெரியவில்லை.





# மராட்டியர் காலத்தில் உருவாக்கம் பெற்ற கேய (இசை) நாடகம்

செல்வி அபிராமி திருநாவுக்கரசு

தமிழக வரலாற்றுக் கால கட்டங்களில் நாயக்கர் காலத்தின் பின் அரியணை ஏறியவர்கள் மராட்டியர்கள். இவர்கள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 1676 – 1799 வரை ஆட்சியமைத்தும் அதைத் தொடர்ந்து 1855 வரை தஞ்சையில் செல்வாக்குப் பெற்றிருந்த மன்னர்களாக விளங்கினர். கலைகளின் வளர்ச்சியில் மராட்டியர் காலம் ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்றே கூறவேண்டும். மராட்டிய மன்னர்கள் ஒவ்வொருவரும் தமது ஆட்சிக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் கொடுத்தனர். அது மட்டுமன்றி தாமே கலைஞர்களாகவும், கவிஞர்களாகவும் இசை,நடன வித்துவான்களாகவும் விளங்கினர்.

அந்த வகையில் மராட்டியர் காலத்தில் புதிதாக தோற்றம்பெற்ற இசை நாடக வடிவமே கேய நாடகம் ஆகும். இதனை மராட்டிய மன்னரான சகாஜி மன்னர் உருவாக்கினார் என்று கூறப்படுகின்றது. இந்த இசை நாடகத்தின் பூர்வாங்கம் தொல்காப்பியர் காலத்தில் இருந்தே ஆடலும் இசையும் இணைந்திருந்ததைக் காண்கிறோம். பின்னர் சோழர் காலத்தில் ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து எனப் பல்வேறு கூற்றுக்களாகப் பரிணமித்தன. இதன் தொடர்ச்சியான வளர்ச்சியையே மராட்டியர் காலத்தில் காண்கிறோம். இந்தக் காலத்தில் இசை நாடகம் புதிய பாணியில் உருவாக்கப்பட்டமையால் அதனை மராட்டியர்களே உருவாக்கினர் என்கிறோம். இசை நாடக மரபு என்னும் தலைப்பில் கே.ஏ.குணசேகரன் கூறியிருப்பதாவது:

குறவஞ்சி, பள்ளு, நொண்டியாத்ரா; யக்ஷகானம் தமாசா; புதாங்கி, ராமலீலா, ரசலீலா, தெருக்கூத்து; தெய்யும் போன்ற நடனங்களில் இசை முக்கியம் பெறுவதை அவதானிக்கலாம் என்ற அவருடைய கூற்று இங்கு நோக்கத்தக்கது. எனவே சங்ககாலம் தொட்டு நாயக்கர் காலம்வரை நிலவிய கூத்துக்கலையின் புதிய பரிணாமமாக விளங்குவதே இந்த இசை நாடகம் ஆகும்.

இந்த இசை நாடகத்தில் பலவகையான இசை வடிவங்கள் காணப்படும். இதில் இசை பிரதானமாகும். அதாவது ஒரு கதையை இசையுடன் பாடி நடிப்பதே இந்த இசை நாடகம் ஆகும். இங்கு இசையின் மூலம் பல்வித உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இசை,தனிநபர் பாடும் இசை, குழுவினர் பாடும் இசை, வார்த்தையில்லாத இசை போன்றவற்றைக் காண முடியும். இதனை ஆங்கிலத்தில் ஆபரா என்றும் வடமொழியில் கேய நாடகம் என்றும் கூறுவர்.

ஆரம்பம் முதல் இறுதி வரை இசையுடனே அமைந்திருக்கும் "யக்ஷகானத்தையும்" பிரயந்த அமைப்பையும் இணைத்ததாக இந்த நாட்டிய நாடகவகை உருவாக்கப்பட்டது என்றொரு கருத்தும் உண்டு. மராட்டியர் காலத்தில்) உருவாக்கப்பட்ட பல்லக்கி சேவா பிரபந்தங்கள் இந்தக் கேய நாடக வகைக்குத் தக்கதாகவே அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சங்கர பல்லக்கி சேவா பிரபந்தம், விஷ்ணு பல்லக்கி சேவா பிரபந்தம், பஞ்சரத்தினப் பிரபந்தம், தியாகராஜ விநோத சித்திரப் பிரபந்தம் போன்றவை கேய நாடகங்களாக விளங்குகின்றன. இங்கு இசையுடன் நிருத்த நிருத்திய அம்சங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

அதேசமயம் பிரபந்தம் என்பது மக்கள் மத்தியில் விளங்குகின்ற புராண நிகழ்ச்சி அல்லது இலக்கிய வர்ணனையில் அமைந்த பிரபந்தமாகும். ஆறுவகை தாதுக்களையும் நான்கு வகை அங்கங்களையும் கொண்டதே பிரபந்தமாகும். தாதுக்கள் என்பது இசைக் குறியீடான ஸ்வரம், பாடல், விருத்தம் எனப்படும். அத்துடன் தத்தா, ஓம், நாம், தாம் என்ற சொற்கட்டுப் பிரயோகங்களையும் குறிக்கும். கவிதை, காவியத்தையும் பிரபந்தம் என்றே குறிப்பிடுகின்றனர். குறிப்பாக நாலாயிர திவ்ய பிரபந்தத்தையும், மகாபாரதம் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காதல் உணர்வைக்கூறும்காவியங்களையும், மண், நகர், மலை, ஆறு, சூரியோதயம்போன்ற இயற்கையை வர்ணிக்கும் படைப்புக்களையும் பிரபந்தம் என்றனர். அந்த வகையில் இதிகாசம், புராணம் ஆகியவற்றின் கதைகள் அடிப்படையில் அமைந்தவற்றை பீராக்யாந்த பிரபந்தம் எனவும் இதிகாச புராண கதைகளில் கிளைக் கதைகளாக கற்பனையில் உதித்தவற்றைக் கொண்டு படைக்கப்பட்டவற்றை "மிஸ்ரப் பிரபந்தம்" என்றும் அழைப்பர். இதில் மிஸ்ரபிரபந்தமே 16 ஆம் நூற்றாண்டளவில் பிரபல்யமாகியிருந்தது. கிருதி, கீர்த்தனைகளைத் தொடர்ந்து பிரபந்தமே சகாஜி மன்னர் காலத்தில் பிரபலமடைந்தது. இக்காலத்தில் சகாஜி மன்னரால் உருவாக்கப்பட்ட பிரபந்தங்களில் விக்னேஷ்வர தரு, சிருங்காரதரு, லீலாதரு, அபிநயதரு, ஜக்னிதரு போன்ற தருக்களைப் பயன்படுத்தி சிறப்பித்திருக்கிறார். இவை நாட்டியத்துக்கு உரியவையாகவே திகழ்கின்றன.

> மராட்டியர் காலத்தில் உருவாக்கப்பட்ட பல்லக்கி சேவா பிரபந்தங்கள் இந்தக் கேய நாடக வகைக்குத் தக்கதாகவே அமைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் கேய நாடகங்களாக விளங்கும் பிரயந்தங்கள் சில பற்றி இங்கு நோக்கலாம். திருவாரூர் தியாகேசப் பெருமானைப் பல்லக்கில் ஏற்றிச் செல்வது ஆலய வழக்கங்களில் ஒன்றாக இருந்தது. இந்தச் சம்பவத்தை சிறப்பாகச் சித்திரிப்பதே தியாகராஜவிநோத சித்திரப் பிரபந்தம் என்னும் இசை நாடகமாகும். இதில் பங்கேற்கும் பல்லக்குத் தூக்கிகள் தாளம் தப்பாமல் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடிகளையும் பற்றிய தெளிவான விளக்கம் இதில் கொடுக்கப்பட்டுள்ளது. "22 தருக்களாலான இப்படைப்பு சர்ணிகா, நேசபத்யம், உத்பலமாலா, சம்பகமாலா, த்வீகாதம் போன்ற பல்வேறு தெலுங்கு இசைவடிவங்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன"

விஸ்ணு பல்லக்கி சேவா பிரபந்தம் என்பது மராட்டியர் காலத்தில் புகழ்பெற்ற மற்றுமொரு இசை நாடக வகையாகும். இதன் நாயகி இலக்குமி, நாயகன் விஷ்ணு என்ற அமைப்பில் படைக்கப்பட்டுள்ளது. இது சோபனம், பாவ வலிம்பு, தரு, த்வி[illegible]தம், பத்யம், தோத்தகம், தாளவம்பு, மேலுகொலுக்கு ஆகிய தெலுங்கு இசை வடிவங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இறைவனை பல்லக்கில் சுமந்து திருவீதி உலாவரும் காட்சியைத் தெலுங்கில் பாடியிருப்பதே இதன் நோக்கமாகிறது.

ஆடல்நங்கையர் இருவர், நட்டுவனார், செஞ்சு குறவர் ஒருவர், பணியாள் என்ற ஐவர் கொண்ட குழுவுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளது, பஞ்சரத்தின பிரபந்தம் என்னும் அமைப்பு ஆகும். இந்தப் பஞ்சரத்தினப் பிரபந்தம் இந்த ஐந்து கலைஞர்களினதும் இசையிலும், நடனத்திலும் மயங்கிய பரமேஸ்வரன் அவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதான கதையை உடையதாக அமைந்துள்ளது. வேறுபட்ட தாளத்தில் அமைந்த ஜதிக் கோர்வைகளைக் கொண்டு அமைந்துள்ளதால் நாட்டியத்துக்குச் சிறப்பைக் கொடுப்பதாக அமைந்துள்ளது. கோர்வை, ஜதி, கணபதி கௌத்துவம், தரு போன்றவற்றை வரிசையாகக் கொண்டு அமைந்திருப்பதால் தொடரியம் அடிகைக் கொடுப்பதாய் அமைந்துள்ளது. இசைச் சிறப்பும் ஓசைச்சிறப்பும் முன்னதாய் நிற்க சாஹித்யம் அடுத்தகட்டமாகவே வைத்து நோக்கப்படுகிறது. ஆடல்பாடலில் சகாஜி மன்னருக்கு இருந்த ஈடுபாடு இந்த நாட்டிய நாடக அமைப்பினூடாகப் புலப்படுத்தப்படுகிறது.

அடுத்து "விநோத சித்திரப் பிரபந்தமும் ஒரு கேய நாடகம் ஆகும். இதனை உருவாக்கியவரும் சகாஜி மன்னரே. சமஸ்கிருதம், மராத்தியம், தெலுங்கு, தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் இது உருவாக்கப்பட்டுள்ளது. இதனை மணிப்பிரவாள பிரபந்தம் சங்கரகாளி நடன சம்வாத நாடகம், என்றும் அழைப்பர்", "தியாகேசர் பெருமானுக்கும் பத்ரகாளிக்கும் இடையே தெய்வத்திருச்சபையில் ஆடுகின்ற தேவநடனம், அரச சபையில் ஆடுகின்ற ராஜ நடனம், மக்கள் மத்தியில் இடம்பெறுகின்ற தேசி நடனம், இவற்றில் எது சிறந்தது என்று வாக்குவாதம் இடம்பெறுவதாகவும் அதனை அவதானித்துக் கொண்டிருந்த சிவபெருமான் கோபமடைவதாகவும் இறுதியில் தேசி நடனம் சிறந்தது என்று, முடிவு எடுக்கப்பட்டதாகவும் இதன் கதையமைப்பு அமைக்கப்பட்டுள்ளது" இதில் 55 தருக்கள் பல இராகங்களிலும் பல தாளங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இத் தருக்கள் தனித்துவம் பெற்றவை. பல்வேறுபட்ட மலர்கள், புள்ளினங்கள், மி[illegible]கங்கள், மக்கள், சமூக அமைப்புக்கள் ஆகியவற்றைப் பல்வேறு கோணங்களில் விவரிக்கும் தருக்களையே சகாஜி உருவாக்கியுள்ளதாக கூறப்படுகிறது. நாட்டியத்தின் சிறப்பான அபிநயங்களை விஸ்தாரமாக எடுத்துக்காட்டுவதற்காக இந்தக் கேய நாடகத்தை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கி.பி. 1725 இல் ஆக்கப்பட்ட கூறப்பநாக்கரின் விறலி விடு தூதில் தரு, ஜதி, கீதம் ஆடினாள்" என்ற வசனம் பிரயோகப் படுவதிலிருந்து இசை நாடகத்தின் நிலவுகை புலப்படுத்தப்படுகிறது.

"அது தவிர கேய சாஸ்திரங்கள் என்ற ஓர் அமைப்பும் காணப்பட்டது. இவை வெறும் பாடல்களாகப் பாடுவதற்கு உகந்தவையே" இசை மரபில் கீர்த்தனைகளின் உருவாக்கம் இசை நாடகங்களுக்கு வித்திட்டன என்று கூறலாம். இதற்கு மும்மூர்த்திகளில் சியாமா சாஸ்திரிகள் அழுத்தமாய் இட்டு கீர்த்தனைகளை உருவாக்கினார் எனலாம்.

(தொடரும்)



2015 மார்ச் 11 புதன்கிழமை உதயன்

# உலகின் முதல் விஞ்ஞானிகளான சித்தர்கள் பயன்படுத்திய 11 முத்திரைகள்



சித்தர்கள் உலகின் முதல் விஞ்ஞானிகள். இந்த முத்திரையை செய்தால் நரம்பு மண்டலம் ஊக்குவிக்கப்படும். வாயுத் தொல்லை, மலச்சிக்கல், மூலநோய் ஆகியவை நீங்க வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு கருப்பை வலுப்பெறும். பிரசவ காலத்தில் இயல்பான குழந்தைப் பேறு கிடைக்கும். முயற்சித்து பாருங்கள் நிச்சயம் மாற்றம் தெரியும்....

**சின் முத்திரை அல்லது ஞான முத்திரை**

கட்டை விரல் மற்றும் ஆள்காட்டி விரல் நுனிகள் இரண்டும் தொட்டுக்கொண்டு இருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதை செய்வது மனத்தை ஒருநிலைப்படுத்த உதவும். மூளை செல்கள் புத்துணர்ச்சி பெறும். தலைவலி, தூக்கமின்மை, கவலை, கோபம் ஆகியவை விலகும்.

**வாயு முத்திரை**

ஆள்காட்டி விரலைக் கட்டை விரலின் அடிப்பகுதியில் வைத்து கட்டை விரலால் சிறிது அழுத்தம் கொடுக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதை செய்தால் வாயு தொடர்பான நோய்கள் போகும். இரத்த ஓட்டம் சீராகும்.

**சூன்ய முத்திரை**

நடுவிரலை, கட்டை விரலின் அடிப்பகுதியில் வைத்து கட்டை விரலால் அழுத்த வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதனால் காதில் நீர் வடிதல், காது வலி, காது அடைப்பு போன்றவை சீராகும். எலும்புத் தளர்ச்சி மற்றும் இதய நோய் தவிர்க்கப்படும். தசைகள் வலுவடையும். தைரோய்ட் நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கும்.

**பிருதிவி முத்திரை**

பெருவிரல் மற்றும் மோதிர விரலின் நுனிப்பாகம் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். மற்றைய விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் உடல் மற்றும் மூளை செல்கள் ஊக்கம் பெறும்.

**சூரிய முத்திரை**

மோதிர விரலை கட்டை விரலின் அடிப்பாகத்தில் வைத்து மெதுவாக அழுத்த வேண்டும். மற்றைய விரல்கள் நேராக இருக்க வேண்டும். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கும். உடலின் வெப்பம் அதிகரித்து ஜீரண சக்தி பெருகும்.

**வருண முத்திரை**

சுண்டு விரலின் நுனியை கட்டை விரலின் நுனி தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். மற்றைய விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதனால், தோல் சம்புந்தமான நோய்கள் குணமாகும். தோல் வறட்சி. முகப்பருக்கள் வராமல் தடுக்கப்படும்.

**பிராண முத்திரை**

மோதிர விரல், சுண்டு விரல் இரண்டையும் மடக்கி, கட்டை விரலின் நுனியைத் தொட்டுக் கொண்டு இருக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இந்த முத்திரையால் கண் கோளாறுகள் நீங்கி ஒளி பெறும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

**அபான முத்திரை**

மோதிர விரல், நடுவிரல் இரண்டையும் மடக்கி கட்டை விரலின் நுனியை தொட்டு கொண்டிருக்கும்படி வைக்க வேண்டும். மற்ற விரல்கள் நேராக இருக்க வேண்டும். இதை தொடர்ந்து செய்தால் மலச்சிக்கல், மூல நோய், வாயுத் தொல்லை விலகும். உடலிலிருந்து தேவையற்ற கழிவுகள் வெளியேறும்.

**அபான வாயு முத்திரை**

மோதிர விரல், நடுவிரல் இரண்டும் கட்டை விரல் நுனியைத் தொட்டு கொண்டிருக்க வேண்டும். ஆள்காட்டி விரல் கட்டை விரலின் அடிப்பாகத்தைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்தால் இதய நோய் சரியாகும். இரத்த ஓட்டம் சீரடையும்.

**லிங்க முத்திரை**

இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு இடது கட்டை விரலை மட்டும் நிமிர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். உடலில் உள்ள அதிக சூட்டை சமன்படுத்தும். கபத்தை அகற்றும். ஜலதோஷம், ஆஸ்துமா பிரச்சினைகள் விலகும். வறட்டு இருமல், நீர்க்கட்டு பிரச்சினை சரியாகும்.

**அஸ்வின் முத்திரை**

பத்மாசனம் அல்லது வஜ்ராசனத்தில் அல்லது சுகாசனத்தில் அமர்ந்து கொண்டு குதத்தை சுருக்கி விரிவடையச் செய்வதே அஸ்வினி முத்திரையாகும். இதைப் படுத்துக் கொண்டும் செய்யலாம். ஆரம்ப காலத்தில் 10–20 முறையும், பின்னர் 30 – 50 முறையும் செய்யலாம்.



## சிம்பன்சிகளிடம் இருந்து எம்மை வேறுபடுத்தும் மனித மூளையின் முக்கிய ஜீன் கண்டுபிடிப்பு

மனிதர்களாகிய நாம் எமது உடலில் உள்ள முக்கிய மரபணுக்களின் (ஜீன்களின்) 99 வீதமான வற்றை சிம்பன்சிக் குரங்குகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளோம்.

அதாவது எமது மூளையானது சிம்பன்சிக்களின் மூளையை விட 3 மடங்கு பெரியது என்ற போதும் எமது மற்ற உடல் ஜீன்களின் கட்டமைப்பு போன்றதே சிம்பன்சிக்களினதும். ஆனால் எம்மை சிம்பன்சிக்களிடம் இருந்து வேறுபடுத்தும் எமது மூளையிலுள்ள முக்கிய ஜீனை முதன் முறையாக ஜேர்மனியில் உள்ள விஞ் ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர்.





ARHGAP11B எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ஜீனே எமது மூளையின் நியோகோர்ட்டெக்ஸ் என்ற பகுதியில் நியூரோன்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாகவுள்ளது. நியோகோர்ட்டெக்ஸ் என்ற பகுதியே விஞ்ஞானிகளின் கூற்றுப் படி எமது மூளையில் காரண காரியத் தொடர்பை அறிதல் , மொழியறிவு மற்றும் கருத்தறிவு ஆகிய ஆற்றல்களுக்கான பகுதியாகும். மனித மூளையில் மட்டும் காணப்படும் இந்த ஜீன் காரணமாகவே இந்தப் பூமியில் மற்ற எந்தவொரு உயிரினத்தின் மூளையை விடவும் எமது மூளை மிகச் சிக்கலாகவும், மேலானதாகவும் இருக்கின்றது. விஞ்ஞானிகளின் நம்பிக்கைப் படி சுமார் 5 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் சிம்பன்சிக்களிடம் இருந்து எமது மூதாதையர் ஓரே பரிணாமப் பாதையில் பிரிந்த போது இந்த ஜீன் மனித இனத்தின் மூளையில் தோற்றம் பெற்றதாகக் கருதப் படுகின்றது.

இந்த ஜீன் மூளையில் ஸ்டெம் செல் என்ற உயிர் அணுக்களின் உற்பத்திக்குக் காரணமாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதே வேளை ARHGAP11B என்ற இந்த செல் எமது மூதாதையர் வழி வந்த நியாண்டர்தல் இன மனிதர்களின் மூளையிலும் காணப்பட்டுள்ளதாக இனம் காணப்பட்டுள்ளது.

## உதயன் புத்தாண்டு - 2015 மலர் மேய்ச்சல்:

# 'போஷாக்குகள் விளைந்துள்ள ஒரு வயல்!'




நவாலியூர் கவிராயர்

ஒரே நாட்டின் சகோதரத்துவ மொழிகளை அறிய வக்கில்லாமல், உழைக்க வந்துள்ள நாட்டு அந்நியமொழியைக் கற்றுப் பேசுவதைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறான் அவன்.

'விடையில்லா வினாக்கள்' கதையில் இதனை மிருசுவில் தமிழ்தாசன் விவரிக்கிறார். சவூதிக்குப்போன புதிதிலும் பின்னாலும் தமிழ்ப் பாத்திரம், பாத்திரத்துக்கு பெயர் தரப்படவில்லை. தமிழ் மொழியில் பேசவும் தமது நாட்டு உணவைச் சுவைக்கவும் எண்ணி வந்ததைக் கனவாக்கி விடுவதும் அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. எமக்குப் புதிதான ஒரு பக்கத்தை காட்டியமைக்குப் பாராட்டலாம்.

நரேஷ் எழுதியுள்ள 'அந்த ரயில் பயணம்' இரு நண்பர்களின் ஏற்றத்தாழ்வைக் கூறும் கதை. இருவரும் படித்துக் கொண்டே தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர். திட்டமிட்ட படி ஒருவனால் பரீட்சையில் தோற்ற முடியாத நிலைமை தகப்பனாரின் இறப்பு வடிவில் வருகிறது. ஒருவன் கம்பஸ் செல்ல மற்றவன் பிஸ்னஸ் வழி.

படிப்பை முடித்துக் கொண்டவன் சிநேகிதனைக் காண ரயிலில் விரைகிறான். அறிவிப்புக் கொடுக்காமல் சென்ற இவன் கண்ட காட்சி முன்பு இவன் செய்து வந்த வியாபாரத்தில் அவன். பழவண்டிக்கடை வாழ்வு திட்டமிட்டு அமைக்கப்பட வேண்டியதுதான். அதுரயில் பயணங்கள் போன்று நிரந்தரம் அற்றதாகிப் போய்விடுவதைக் கதைசுட்டுகிறது.

'அன்புடை நெஞ்சம்'புத்தூர் விஸ்வம் எழுதியது. பாலு, சாவித்திரி திருமணக் கலப்பினது இரண்டாம் நாள் மாமிசம்,குடிவகை வழங்கி இடம்பெறுகிறது. சும்மா கிடைச்சால் பொலிடோல் என்டாலும் விழுங்கக் கூடிய ஆக்கள் விட்டே வைப்பினம்? முழுங்கிய குடிகாரர் பேச்சால் குழம்பும் கல்யாணம், மாப்பிள்ளை பாலுவின் சமயோசித அணுகுமுறையால் நிவர்த்தி பெறுகிறது.

கல்யாணத்தரகரின் சீதனம் 2 லட்சம் ரூபாவுக்குமான கமிஷன் ஐந்து வீதமும் கெட்டது தான் கண்ட மிச்சம். செம்பாட்டான்மாம்பழச் சுவையை மாந்தப் போகும் பாலுவுக்குத் தேரோட்டமும் தீர்த்தமும் அண்டைக்கே நடந்து முடிஞ்சுதா என்டுதான் வாசகனால் அறிய முடியாமல் போச்சு, கதாசிரியர் முடித்தே விட்டார்.

புத்தூர் விஸ்வம் ஆடிக்கொன்றும், அமாவாசைக் கொன்றுமா எழுதினாலுமென்ன செம்பாட்டான் மாம்பழம் போலை கதை கட்டியாகக் காணவில்லை.

மூத்த பழம் பெரும் எழுத்தாளரும் சமீபத்தில் அமரத்துவமடைந்த எஸ்.பொன்னுத்துரையின் 'ஆண்மை' கதையைப் பார்ப்போம்.

பக்கத்து வீட்டுப் பூரணத்தின்மகன் சந்திரசேகரன் மையல் கொள்வதை மோப்பம் பிடித்து சாம்பசிவத்தார் சரஸ்வதியைக் கட்டி வைக்கிறார். முதல் ஐந்தையும் பெட்டைகளாகப் பீச்சி விட்டு கடைசிப் பெடியனையும் ஈண்டாள் அவள்.

பூரணம் முடிச்சு நாலும் கடுவன்கள். தூக்கத்தில் இருப்பதாக நடித்துக்கிடக்கும் சேகரத்தாரின் நினைவுகளில் பழைய சம்பவங்கள் திரையிடுகின்றன. இடியப்பம் அவித்து வித்துச் சீவிக்கும் 'கடையப்பக்கார' பக்கத்து வீட்டுக் குமரி, பூரணத்தின் மகனின் மனம் சாயாமல் வேலியை உயர்த்தி அடைத்து அயலட்டைத் தொடுசல்களைக் களைந்து சாம்பசிவத்தார் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்.

சேகரத்தாருக்கு இன்றைக்கும் பூரணத்தின் குரல். தோற்றங்களில் மனம் மேயவே செய்கிறது. பூரணத்தாளும் நொட்டைத் தீனேதும் செய்தால் சரஸ்வதி, பிள்ளைகளுக்குக் கொடுக்கும் சாக்கில் சேகரத்தாருக்கும் அதில் கொடுக்கச் சொல்கிறாள்.

'கடையப்பக் காறியள்' எண்டு சாம்பசிவத்தார் ஒதுக்கி வைத்த பூரணம் இன்று செல்வச் சீமாட்டி; ஆனாப் பெருமையில்லை. இருபது வருடங்களுக்கு முன்பாக சாம்பசிவத்தாரால் உயர்த்தி அடைக்கப்பட்டுள்ள வேலிப் பொட்டு இன்றைக்குப் பூரணத்தின் வேண்டுதலுக்காக சேகரத்தால் மீண்டும் விடப்பட்டுள்ளது.

பூரணத்தின் நாலு பெடியளும் சேகரத்தின் ஐந்து பெட்டையளும் பக்கத்து வீட்டு இரும்புத்திரையை விலக்கி புதிய சமுதாயத்தைப் படைப்பர். கதையைச் சம்பவக் கோர்வைகளூடாக நகர்த்த அவருக்கு மொழி நடை கைவந்த கலையல்லவா? ஒரு நல்ல சிறுகதையை வாசித்த திருப்தி ஏற்படுகிறது.

தமிழக இரண்டு சிறுகதைகளையும் பார்க்கலாம். முதுபெரும் எழுத்தாளர் நகுலனின் 'ஒரு இறாத்தல் இறைச்சி' ஒரு எழுத்தாளர் நாயொன்றை வளர்த்து வருகிறார். வசதி படைத்தவர் போலும்? வேலை ஆள்தனி. வெள்ளிக்கிழமைகளில் ஒரு றாத்தல் இறைச்சி வைத்துப் பழக்கப்பட்ட நாய். நண்பரொருவர் எழுத்தாளரைப் பார்க்க விருந்தாளியாக வந்திருக்கையில் அன்று இறைச்சி கொடுக்காததால் எழுத்தாளர் தொடையைக் கடித்து இறைச்சி எடுத்து விடுகிறது.

'உங்க மனித ஜாதியே இப்படித்தான். எதிரில் ஒரு நாலுகால் மிருகம் பட்டினி கிடப்பது மறந்தே விடும்' இவ்விதம் நாய் நினைப்பதாகவே எழுதியுள்ளார்.

பத்து நாள்களுக்குப் பிறகு வேலையாள் நாயைக் கார்ப்பரேஷன் காரரிடம் பிடித்துக் கொடுத்ததும், வேதனை அடையும் அவருக்கு அது கடித்ததும் பெரிதாகப் படவில்லை. வாரம் தவறாமல் அது காலை நக்கியதைத் தான் சகிக்க முடியவில்லை என்பதுடன் கதை நிறைகிறது. அவ்வெழுத்தாளர் நாய் வளர்ப்பைக் கண்டிக்கிறாரா ஊக்குவிக்கிறாரா விளங்குதே இல்லை.

'கறுப்பு ரயில்' கோணங்கி எழுதிய சிறுகதை. சுத்திச் சுத்தி ரயில் தாத்தாவும் கந்தனும், சின்னப்பாப்பாவின் குட்டி ரயிலும் காலித் தீப்பெட்டிகளால் உருவாக்கிய பொன் வண்டு ரயிலும் வியாபித்துள்ளன.

முனியம்மாவின் மகன் சிவகாசிக்குப் போனதால் அவவின் கட்டாயத்தில் குடும்பமே போக வேண்டியதாயிற்றாம். டெயிலர் அண்ணாச்சியின் கருணையால் பொன் வண்டுக்கு கம்பளியும், ரயில் பெட்டிகளான தீப் பெட்டிகளை இணைக்கும் பல வர்ண நூலும் கிடைக்கிறது.

பின்னாடி வைக்கோலில் திரித்த கயிற்றில் சிறுவர் உள் நிற்க உருவான ரயில் கம்மாய் கரைப் பிள்ளையாரை அடைந்து மூச்சு வாங்கிறதாம். முனியம்மாவின் மகன் ரப்பர் கையை மாட்டிக் குறுக்கே நிற்க கந்தன் குதித்துக் குதித்துக் கோயில் மணி அடிக்க ரயிலில் வந்த மாரிமுத்துப் பண்டாரம் பிள்ளையாருக்குப் பூசை வைக்க செடி செத்தைகளை அள்ளிக் கொண்டு வந்தான்.

இவ்விதம் மேலும் தொடரும் 'கறுப்பு ரயில்' கதை கோணங்கி சிறு பிள்ளைகளுக்குக் கோணங்கியாக சொல்லுவதாகப் புரிந்து கொள்ள வேண்டியதுதான். தமிழகத்தின் எத்தனையோ அற்புதமான கதைகள் இருக்க ஆசிரியர் இந்தக் கதைகளை ஏனோ தெரிவு செய்தார்?

### கவிதைகளை நோட்டம் விடுவோம்

உலக நாடனின் 'ஆயனின் மீதேறி சவாரி செய் செய்யலாம்' என்ற தலைப்பிலான கவிதை கானல் நீரைக் கண்டு ஆனந்தமடைவதாகவே படுகி றது. ஆட்சி மாற்றங்களெல்லாம் தமிழர் வாழ் வில் விடிவைத் தந்து விடுமென்று நம்புவ தற்கு இன்னமும் ஏமாந்த, ஏமாறப் போகும் தமிழர்கள் இருக்கவா செய்கின்றனர்?

கந்த–பேரின்பம் முப்பதாண்டு சேவை செய்துள்ள உதயனைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். "ஊடகத் துறையிலே உதய சூரியனாகப் பல்லாண்டு காலம் வாழ்க! என்னும் வரிகள் இன்னமும் பல முப்பதாண்டுகளைக் கொண்டாடுவதற்குத் தென்பூட்டலாக அமைந்துள்ளது.

குனலையூர் பாவரன் பால், பயறு, அரிசி சர்க்கரை எல்லாவற்றுக்கும் ஒவ்வொன்றை உவமித்துப் பொங்கலைப் பாடியுள்ளார். புதிய கருத்துகள் எதுவும் வரவில்லை.

ஊரெழு, கவிமணி அன்னைதாஸனின் இரு கவிதைகள் வெளிவந்துள்ளன. ஒன்றோ பொங்கலைப் பாடியுள்ளது. அடுத்தது எமது கருஞ்சிவப்பு மண்ணில் விளைபொருள்கள் விளையும் பாங்குகளைச் சொல்லி ஸ்ரீமாவோ அரசு எமது கால்களில் நிற்க வைத்த 72 களை நினைவூட்டி அதிசயமெது என விளக்க விளைந்துள்ளது.

அவற்றை முறியடித்து ஜே.ஆர்.ஆட்சியைக் கைப்பற்றி ஏற்படுத்திய மாற்றங்களைச் சோக்காகப் பொங்க மாற்றிடை மோகத்தில் மகளிரெனவும் குறிப்பிட்டே சொல்கிறார்; இத்தகு கவிதைகளே சமகாலங்களில் தேவையாக உள்ளன. எதுகை, மோனை, சந்தம், ஓசை நயங்களும் விரவிச் செல்கின்றன.

கந்தர்மடம், அ.அஜந்தன், இரு கவிதைகளைப் படைத்துள்ளார். மண்ணுக்குள் புதையுண்ட புனிதர்கள்' கவிதை அற்புதமாக அமைந்துள்ளது. வரிகள் ஒவ்வொன்றும் அச்சொட்டானவை.

'வாழ்க்கை முரண்கள்' என்ற அடுத்துள்ள கவிதையில் முரண்பாடுகளைச் சரியாகவும் அந்த வேளை முரணை முரணாக்கிச் சொல்வதும் சிந்திக்கச் செய்துள்ளது.

இரு உதாரணங்கள்

1.மழையில் முழுவதும் உலர்ந்ததும்
வெயிலில் நடுங்கி நனைந்ததும்
2.துப்பாக்கிகள் கவிதை வடித்ததும்
பேனாக்கள் உயிர் பறித்ததும்
நினைவிருக்கின்றன!

'நினைவிருக்கிறது' என்னும் ஒரே வார்த்தை 15 துளிக்கைகள் கீழும் வந்திருந்ததும் தெவிட்டவில்லை. அருண் சக்தி வேல் 'அம்மா என்று அழைத் தாலே போதும்' குரும்பைசிட்டி மாமாரியை மாதோட்ட பரமேஸ்வரியாக உருவகித்துப்பாடுகிறது.

மடத்துக்கடவை த.மோகன்ராஜ், மழையோடு போர் தொடுத்துள்ளார். தேவைக்குப் பெய்யாமல் தேவை முடிந்ததும் மீறி அழிவு செய்யும் மழையைப் பொய்யெனப் பெய்யாதே எனச் சாடுகிறார்.

மூத்த மரபுக் கவிஞர் சோ.பத்மநாதன் (சோ.ப) வின் 'பெயர்த்து நடப்படவை' சிந்திக்க வைத்துள்ளது. அங்காலை அன்னைதாஸனின் கருஞ்சிவப்பு மண்ணை நினைக்க வைப்பதைத் தவிர்க்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தான் கை வைத்த பயிரினம் வாடவா செய்யும்?

பச்சைத் தண்ணீல பலகாரம் சுட்ட பரம்பரையல்லவா? கனடா,நோர்வே, ஆஸ்திரேலியா, எண்டு தளைக்கேக்கை எங்கடை மலைநாட்டுப் பயிரென்ன? மகளுடைய வாதத்துக்கு ஆற்றாமல் தலை கவிழ்கிறார் தங்க வேலாயுதம் அச்சா, அச்சா அப்புடிச் சொல்ல வேண்டும் புதுக் கவிதை!

(தொடரும்)

# பட்டாணி உருவான கதை



ஒரு நாள் ஒரு மூதாட்டி மண் அடுப்பில் சமையல் செய்து கொண்டிருந்தாள். அவள் அடுப்பில் வைத்திருந்த தண்ணீர் கொதித்ததால் அதற்குள் சில காய்கறிகளைப் போட்டாள். அப்போது பட்டாணி அடுப்பில் இருந்த சட்டியிலிருந்து வெளியே குதித்து வந்து, 'என்னைச் வேக வைக்கவேண்டாம். என்னை சமைக்கவேண்டாம்;' என்று கத்தியது. மூதாட்டியோ நீ மரியாதையாக பழையபடி சட்டிக்குள் போகிறாயா? இல்லை உன்னை நசுக்கட்டுமா? என்றாள். ஆனால் மூதாட்டியின் உத்தரவை பட்டாணி கேட்கவில்லை. அங்கிருந்து வேகமாக ஓட்டம் பிடித்தது. அப்போது 'நில் நில் ஓடாதே; உன்னுடன் நானும் வருகிறேன்' என்று இன்னொரு குரல் கேட்டது. பட்டாணி திரும்பிப் பார்த்தது, அப்படிக் கத்தியது என்று சொன்னது எரிந்து கொண்டிருந்த ஒரு துண்டு நிலக்கரி. 'அடுப்புக்குள் இருந்தால் எனக்கு மூச்சு முட்டுகிறது. அதனால் நானும் உன்னுடன் வெளியுலகைப் பார்க்க வருகிறேன்' என்றது, நிலக்கரி. 'என்ன வெளியுலகைப் பார்க்கப் போகிறீர்களா?. அப்படியென்றால் என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். என்றது கீழே கிடந்த வைக்கோல் ஒன்று. 'சரி, வா போகலாம்' என்று நிலக்கரியும் பட்டாணியும் வைக்கோலைத் தங்களுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டன.

மூன்றும் சேர்ந்து நடந்தபோது வீதியின் ஓரிடத்தில் விரிசல் ஏற்பட்டிருந்தது. அந்த இடத்தில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. இனி நாம் தொடர்ந்து செல்ல முடியாது. அதனால் நான் அடுப்புக்கே திரும்பிப் போய் விடுகிறேன் என்றது, நிலக்கரி. அப்படியென்றால் நானும் அடுப்பில் எரியும் சட்டிக்குள் போய் விடுவேன் என்றது பட்டாணி.

நண்பர்களே, சோர்ந்து விடாதீர்கள். நான் இந்தப் பாலத்துக்கு (விரிசல்) இணைப்பாக இருக்கிறேன். நீங்கள் இருவரும் என்மீது ஏறி நடந்து மறுபக்கம் போய்விடலாம் என்று நம்பிக்கை ஊட்டியது, வைக்கோல். முதலில் பட்டாணி, வைக்கோல் மீது ஏறி விரிசலின் மறுபக்கத்தை அடைந்தது. ஆனால் எரிந்து கொண்டிருந்த நிலக்கரி, வைக்கோல் மீது ஏறியதும் அது தீப்பிடித்துக் கொண்டது. இதனால் இரண்டும் சேர்ந்து தண்ணீருக்குள் விழுந்தன.

தன் மீது எரிந்து கொண்டிருந்த நெருப்பு அணைந்ததும் நிலக்கரி பெருமூச்சு விட்டது. அந்த விநோத சத்தத்தைக் கேட்ட பட்டாணி சிரிக்க ஆரம்பித்தது. தொடர்ந்து அது பலமாகச் சிரித்ததால் வெடித்து சிதறி அதிலிருந்த ஒவ்வொரு பட்டாணி விதையும் ஓட ஆரம்பித்தன அவை அனைத்தும் ஒரு தையல்கடையை நோக்கிச் சென்றன. தையல்காரரிடம் தயவு செய்து எங்களை ஒன்றாக வைத்துத் தைத்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டன.

தையல்காரரும் பட்டாணி விதைகளின் வேண்டுகோளை ஏற்று ஒரு தடித்த நூல் கொண்டு தைத்து விட்டார். இதனால் தான் அன்று முதல் பட்டாணியை நாம் உரிப்பதற்கு அதன் மேல் தோலில் நூல் போல் உள்ள பகுதியை உரிக்கவேண்டியிருக்கிறது.


## கூடி வாழ்வோம்

பறவை எல்லாம் பாடுச்சு
பக்கம் வந்து தேடுச்சு
கறவை மாடு சிரிச்சுச்சு
கறந்த பாலும் தந்துச்சு..!
குடிச்சி பறவை மகிழ்ந்துச்சு
கூட்டம் சேர கத்துச்சு
பசிக்கு இங்கே வந்திட
பாடிப் பாடி அழைச்சிச்சு..!
எங்கிருக்கும் பறவையும்
எகிறிப் பறந்து வந்துச்சு
இனத்தின் குரலைக் கேட்டுச்சு
இறங்கி வந்து பார்த்துச்சு..!
கோமாதா நமக்கு எல்லாம்
குடிக்கப் பாலும் தந்துச்சு
கூடி நாமும் கூட்டம் போட்டு



'அன்னை'யென்று சொல்லுச்சு..!
பாதுகாக்கும் தாயாக
பட்டி தொட்டி சொல்லுது
சாதுவாக இருந்த அதுவும்
சினந்து காடு வெல்லுது..!'
பறவைக் கூட்டம் நாமெல்லாம்
போற்றி அதை வணங்குவோம்
சிறகாய் நாமும் இருந்துமே
பறக்க வைத்து மகிழுவோம்..!

## பால் தயிராவது எப்படி?



மனிதர்களுக்குத் தீங்கு செய்யும் பக்றீரியாக்கள் உள்ளன. அதைவிட அதிகமான பக்றீரியாக்கள் நமக்குப் பல்வேறு உதவிகளைச் செய்துகொண்டுதான் இருக்கின்றன. இந்த நன்மை செய்யும் பக்றீரியாக்கள் இல்லையென்றால், நாம் சாப்பிடும் உணவு செரிக்காது. நாமெல்லாம் உயிர் வாழவே முடியாது.நாமே நிறைய பக்றீரியாக்களை மறு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். அவற்றில் ஒன்றுதான் தயிர். உலகிலுள்ள ஒவ்வொரு பொருளுடனும், மற்றொரு பொருள் சேரும்போது வேதிவினை நடக்கிறது. அதேபோல, பாலில் கொஞ்சம் தயிரை ஊற்றி உறை ஊற்றும்போது பாலில் வேதிவினைதான் நடக்கிறது. (சமைப்பதே ஒரு வேதியியல் தான்). பொதுவாக, பாலில் புரதச் சத்து அதிகம். அந்தப் புரதச்சத்து தான் எமது எலும்பு மற்றும் தசை வளர்ச்சிக்கு உதவுகிறது. பால் தயிராகும்போது, அந்தப் புரதச்சத்து கெட்டியாகி உறையும் செயல்பாடுதான் நடக்கிறது. ஏற்கனவே உறைந்த தயிரில் 'லாக்டோபேசில்லஸ் அசிடோபில்லஸ்' என்ற பக்றீரியா இருக்கிறது. காய்ச்சப்பட்ட பாலில் இந்த உறைந்த தயிரை சிறிதளவு ஊற்றும்போது, பாலில் உள்ள லாக்டோஸ் என்ற சர்க்கரைப் பொருளை இந்தப் பக்றீரியா நொதிக்கச் செய்கிறது. இதன்மூலம் லாக்டிக் அமிலம் உருவாக்கப்படுகிறது. இதனால் உருவாகும் நேர்மின் ஹைட்ரஜன் அயனியை, பாலின் புரதப் பொருளில் உள்ள எதிர்மின் துகள்கள் ஈர்க்கின்றன. இதன் காரணமாக புரதப் பொருள் சமநிலையை அடைவதால், புரத மூலக்கூறுகள் ஒன்றை ஒன்று எதிர்ப்பதை விட்டுவிட்டு கெட்டியாகி உறைந்துவிடுகின்றன. லாக்டோ பேசில்லஸ் பக்றீரியா செயல்படுவதற்கு ஏற்ற வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ். அதன் காரணமாகத்தான், பால் காய்ச்சப்பட்ட பின்னர் தயிர் உறை ஊற்றப்படுகிறது. ஆறிய பாலையும் சற்று வெப்பப்படுத்தி உறை ஊற்றினால், தயிர் நன்றாக உறையும்.

## அறிவியல் தகவல்கள்

♠மனிதனால் எப்படி மூச்சு விடாமல் இருக்க முடியாதோ, அது போன்று கண் இமைக்காமலும் இருக்க முடியாது. 6 விநாடிக்கு 7 முறை என்ற விகிதத்தில் கண் இமைத்தல் நிகழ்கிறது.

♠கறிவேப்பிலையில் வாய்ப்புண் வராமல் தடுக்கும் ரைபோபிளேயின் என்ற சத்தும், சோகை வராமல் தடுக்கும் போலிக் அமிலச் சத்தும் நிறைந்துள்ளன.

♠வாழைத் தண்டு உடலில் உள்ள நச்சுப் பொருள்களையும் சிறுநீரகத்தில் உள்ள கற்களையும் நீக்க வல்லது.

♠ஆக்டோபஸ் மீனின் நஞ்சு இரத்த ஓட்டத்தைச் சீராக்கி, இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் மருந்தாகப் பயன்படுகிறது.

♠நகம் கடிக்கும் பழக்கம் ச[illegible]ம்பிக்கை இன்மையையும், ந[illegible]க் கோளாறையும் வெளிப்படுத்து[illegible]தத்தில் அமைந்ததாகும்.

♠ஈக்கள் சர்க்கரையை அதன் கால்களை கொண்டு கண்டறிகின்றன.

♠எறும்புகள் அதன் எடையைவிட 50 மடங்கு அதிக எடையைத் தூக்கிச் சுமக்கக்கூடியவை.

♠கரப்பான்பூச்சியால் தலை துண்டிக்கபட்ட பின்பும் 9 நாள்கள் வரை உயிரோடு இருக்கமுடியும். பின்னர் அது பசியால் இறந்துவிடும்.

♠ஆந்தையால் ஒரே நேரத்தில் இரு கண்களாலும் இரு வேறு காட்சிகளைக் காண முடியும்.

♠பெண் சிலந்திப் பூச்சிகள், ஆண் சிலந்தியுடனான உறவுக்குப் பின்னர் அதனைக் கொன்று விடுகின்றன.

♠ மனிதனுக்கு இணையான அறிவாற்றல் டொல்பினுக்கு உண்டு.

♠பூனைகள் ஒரு நாளைக்கு 16 மணி நேரம் தூங்குகின்றன.

அம்பிகரூபன் உமாமகேஸ்வரி

# தற்கால பரதநாட்டிய ஆற்றுகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் நவீனத்துவங்களும்



பரதநாட்டியம் நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையது. ஆடல், கூத்து, குனிப்பு, தேவதாஸி ஆட்டம், சதிர், சின்னமேளம் என்ற படிமுறைப் பெயர் சூட்டலோடு ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல், த.பாலசரஸ்வதியம்மா, ஈ.கிருஷ்ணையர் போன்ற கலையுக மேதைகளின் தீவிர முயற்சியால் இன்று பரத நாட்டியமாக, உலகம் போற்றும் உன்னத கலையம்சமாக மிளிர்கிறது. வேதங்கள் ஆகமங்கள் பரத நாட்டியத்தின் இறையியல் நோக்கினை விளக்கி நிற்க, சங்க இலக்கியங்களும், அதற்கு முன் பின் காலத்தைய அகழ்வுச் சான்றுகளும் அதன் உலகியல் நோக்கினை எடுத்தியம்புகின்றன.

காலத்துக்குக் காலம் கலைவடிவங்களும், கலைப்படைப்புக்களும் அரசியல் சமூக, பொருளாதார காரணிகளையும், ரஸனைகளையும் அடிப்படையாகக் கொண்டு மாற்றமடைந்து கொண்டு வருகின்றன. இத்தகைய மாற்றங்கள் இன்று பரதக் கலையில் தவிர்க்க முடியாததாகிவிட்டது. மாற்றங்கள் என்னும் போது எமது முன்னோர்களாகிய நட்டுவனார்களும், ஆடலரசிகளும் இணைந்து வளர்த்த பரதக் கலையின் மரபில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் நவீன தொழில் நுட்ப சாதனங்களின் தாக்கத்துக்கும் உலகமயமாக்கல் என்ற செயற்றிட்டத்தில் வாழும் இரசிகர்களது ரஸனைக்கும புதிய பிரபலமான கலைஞர்களின் உத்தியியல் சார் திறமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தும், அவற்றைப் பயன்படுத்தியும் பரதக் கலையானது இன்று பல மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது.



தஞ்சையை அடித்தளமாகக் கொண்ட அடிப்படைப் பாணிகள், தஞ்சை நால்வர் வகுத்த விதிமுறைகள், நாட்டிய சாஸ்திர நூல்களின் வரைவிலக்கணங்கள், இவற்றை மீறிச் செல்லாமல் அளிக்கை பண்ணும் விதத்தில் புதுமைகளும் புகுத்தப்பட்டு வருவதுடன் பல புதிய முயற்சிகளுக்கான ஆய்வுகளும் வெளிவரத் தொடங்கியுள்ளன. இன்றைய பரதக் கலையின் முன்னோடி அம்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டவை. இன்றைய அரங்கேற்றத்தை எடுத்துக் கொண்டால் சிலப்பதிகாரத்தில் மாதவியின் அரங்கேற்றத்தின் வளர்ச்சி எனலாம். அதுபோல உருப்படிகள், நாட்டிய நாடகங்கள், உடை ஒப்பனை இன்னும் பலவற்றை நாயக்கர் மற்றும் மராட்டியர் காலத்தில் இருந்து பெற்றுக்கொண்டது எனலாம். இவ்வாறு முன்னைய காலத்தில் ஒவ்வொரு அரிய விடயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து செவ்வியல் பரதமாக முன்னோர்கள் பெருமைப்படுத்தியுள்ளனர்.

பரதக் கலையில் நவீனத்துவம் என்று கூறுகையில் நவீனம் என்பது புதுமையைக் குறிப்பதாகும். அதாவது தமது நாட்டிய அறிவைப் பயன்படுத்தி தஞ்சை நால்வர் போன்ற பெரும் புலவர்களின் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தாது புதுமைகளைக் கையாள்வது. அந்த அடிப்படையில் பரதக் கலையில் நவீனத்துவத்தினை மூன்று முக்கிய விடயப்பரப்பின் கீழ் ஆராயலாம்.

1. பரத நாட்டிய கச்சேரி முறையில் புகுந்து கொண்ட மாற்றங்கள்.
2. பரத நாட்டிய அளிக்கை முறையில் நவீனத்துவங்கள்.
3. ஆஹார்ய அபிநயத்தில் புகுந்து கொண்ட நவீனத்துவங்கள்.

முதலாவது கட்டமாக உருப்படி மாற்றங்கள் என்னும் போது எந்த நிலையிலிருந்து மாறுகிறது என்று நோக்க வேண்டும். பரதக்கலை முன்னோடிகளும், தஞ்சை, திருவாங்கூர், மைசூர் அரசசமஸ்தானங்களில் கலைமணம் பரப்பியவர்களுமாகிய தஞ்சை சின்னையா, பொன்னையா, வடிவேலு, சிவானந்தமாகிய நாற் சகோதரர்களும் குறிப்பாக தஞ்சை பொன்னையா அவர்களால் சமகால, முற்கால விடய பரப்புக்களை ஆராய்ந்து அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், பதவர்ணம் சுரஜதி, இராக மாளிகை, தில்லானா, ஸ்லோகம் என்ற ஒழுங்கில் நாட்டிய அரங்கேற்ற உருப்படிகளை வகுத்திருந்தார். இன்று தேவை கருதி இவற்றில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் அலாரிப்பு நிகழ்வின் ஆரம்பம் சுத்த நிருத்த உருப்படியாக இடம் பெற்றுவந்தது. இன்று இந்த உருப்படியை மேலும் சிறப்பிக்க அழகிய நான்கு வரிப் பாடல்கள் இறுதியில் அதிகம் இடம்பிடித்திருக்கின்றன. குறிப்பாக தேவாரம், திருப்புகழ் போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் திஸ்ரம், சதுஸ்ர, கண்டமிஸ்ர, சங்கீர்ண, ஜாதிகளில் பயில் நிலையிலிருந்த இவ்வுருப்படி புகழ்பெற்ற இசை நாட்டிய அமைப்பாளரான மதுரை முரளிதரன் என்பவரால் 35 தாளங்களிலும் உருவாக்கப்பட்டிருப்பது பரதக்கலையின் உச்சக்கட்ட ஆராய்ச்சியின் விளைவாக பரதத்துறையினரால் நோக்கப்படுகிறது. அடுத்து ஜதீஸ்வரம் இன்று மிக அரிதாகவே கச்சேரியில் இடம்பிடிக்கும் அம்சமாகிறது.

> இன்றைய பரதக் கலையின் முன்னோடி அம்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்டவை. இன்றைய அரங்கேற்றத்தை எடுத்துக் கொண்டால் சிலப்பதிகாரத்தில் மாதவியின் அரங்கேற்றத்தின் வளர்ச்சி எனலாம்.

தொடர்ந்து 'சலாமு' அல்லது 'யசோகீத' என்று அழைக்கப்படுகின்ற இறைபுகழ் கூறிப்பாடும் சப்தம் இன்று கச்சேரியை விட்டுவிலகி அமைப்பியலில் ஒரே மாதிரியாக நிருத்தமும் நிருத்தியமும் இணைந்து வரும் கௌத்துவங்கள் கச்சேரியை அலங்கரிக்கின்றன. நாயக்கர் மராட்டியர் காலத்தில் பிரபலம் பெற்று விளங்கிய இந்தக் கௌத்துவ நிருத்தங்கள் பின்னாளில் கைவிடப்பட்டு இன்று மீண்டும் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. கௌத்துவ உருப்படியில் புரட்சிகர மாற்றத்தினை "ஸ்ரீமுரளீகர கௌத்துவம்" மூலம் மதுரை முரளீதரன் ஏற்படுத்தியுள்ளார். ஏனைய உருப்படிகளில் பதவர்ணம் பதம், தில்லானா, விருத்தம் என்பன அவற்றிற்குரிய தனித்துவங்கள் மாறாமல் ஆடப்படுகின்றன. ஆயினும் ஒரு மணித்தியாலம் வரையிலும் ஆடப்பட்டுவந்த பதவர்ண உருப்படி இன்று 20 நிமிடங்களாக குறைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலங்களில் கோயில் கிரியைகளிலும் கிரியைகளின்போது ஆடப்பட்ட ஆடல்கள் பலவும் இன்று பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக புஸ்பாஞ்சலி, மல்லாலி தோடய மங்களம், கீர்த்தனை, அஷ்டபதி பாரதியார் மா பாடல்கள் போன்றன. இன்று கச்சேரிகளை அலங்கரிக்கின்ற உருப்படிகளாகும். இன்று உலகளாவிய ரீதியில் பரதக் கலை விரும்பிக் கற்கப்படுகின்ற ஒரு கலையாக இருப்பதால் இந்தக் கலைவடிவத்துள் பல மாற்றங்களை அவதானிக்க முடிகிறது. இதனால் ஒரு கச்சேரியில் மேற்குறிப்பிட்ட உருப்படிகளும் இவை த்விர தாலாட்டு, ஆண்டாள் பாடல், தரங்கிணி, மீனாட்சி கல்யாணம், காவடிச் சிந்து, குறவஞ்சி பாடல், பாம்பு நடனம், மயில் நடனம் போன்ற சிற்றிலக்கிய அல்லது கிராமிய நடனங்கள் இடம்பெறுகின்றன. இதனைப் பலர் எதிர்த்தாலும் கச்சேரியை ஜனரஞ்சகமாக்க இது ஒரு சிறந்த வழி என்றே கூற வேண்டும். அதுமட்டுமன்றி உயர்ந்தோருக்காக (கற்றோர்) அளிக்கை பண்ணப்படும் பரதத்தில் பாமரர் கலைகளுக்கு ஒரு சிறு பகுதியை அர்ப்பணிப்பதால் பரதத்தின் தூய்மை, தெய்வீகம் ஒன்றும் கெட்டுப் போகாது என்பது என் கருத்து.

தென்னிந்தியாவைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற நடனக்கலைஞர்களான நமா வைத்தியநாதன், பிரியதர்சினி கோவிந், ஊர்மிளா சத்திய நாராயணன், சுதாராணி ரகுபதி, ஷோபனா, அனித்தா ரத்னம் போன்றோர் நாட்டிய மேடையில் நாயக்கர் மற்றும் மராட்டியர் காலத்தில் பிரபலம் பெற்ற ஆடல் வடிவங்களின் சாயலை நினைவுபடுத்தி வருகின்றனர்.

அடுத்ததாக அளிக்கை முறைகளில் மாற்றங்கள் என்னும் போது ஒருவர் தனித்து மேடையில் தோன்றும்போது பார்வையாளர்களின் கண்கள் உலாவித் திரியத்தக்கதாக மேடையை முற்று முழுவதுமாக பயன்படுத்துவது, பார்வையாளர்களை நிகழ்வில் முழுமையாக ஒன்றிவிடச் செய்கிறது. அதிகமான சிற்ப நிலை அசைவுகளுக்கும் இன்று முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அத்துடன் இந்தியாவின் இதர மாநிலங்களின் சாஸ்திரிய நடனங்களான கதகளி, மோகினி ஆட்டம், யக்ஷகானம், குச்சுப்புடி, கதக், மணிப்புரி ஒடிசி, பாகவதமேளா போன்ற நடனங்களின் தாக்கங்களை இன்று பரத நாட்டியத்தில் காண முடிகிறது. சில சந்தர்ப்பங்களைச் சிறப்பிப்பதற்கு இவ்வாறான பயன்பாடுகள் தவிர்க்க முடியாததாகியுள்ளன. அத்துடன் ஒளி அமைப்பில் கவனம் செலுத்துவதையும் அவதானிக்க முடிகிறது. மேல்நாட்டு நாடக அரங்குகளைப் போன்று பல வண்ண ஒளிப்பிரயோகங்களும் இன்று நாட்டியத்தில் அவதானிக்க முடிகிறது. குறிப்பிட்ட ஒரு பாடலில் பல்வேறு உணர்ச்சி வெளிப்பாடுகள் தோற்றுவிக்கப்படும், நேர்க்கையைக் காட்டிலும் சஞ்சாரிக் கையின் அபிநயத்தின்போது அதிகமாக ஒன்று அல்லது இரண்டு வித ரஸப் பிரவாகம் ஏற்படும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்த ரஸ உணர்ச்சியை மேலும் கூட்டுவதற்கு குறிப்பிட்ட நிற ஒளி விளக்குகளைப் பயன்படுத்துகின்றனர். இதுமட்டுமன்றி எமது நாட்டின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் பரத நாட்டிய நிகழ்வுகளில் பல செயற்கைகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக அவர்களது மெல்லிசைப் பாடல்களுக்கு பரத நாட்டிய ஆற்றுகையை மேற்கொள்கின்றனர். இதற்குரிய காரணத்தை ஆராய்ந்தால் அங்குள்ள சபையில் அதிகம் சிங்கள மொழி பேசுபவர்கள் இருப்பதால் எமது பரத உருப்படிகளை அவர்களால் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியாதிருப்பதே ஆகும்.

இவை மட்டுமன்றி அரங்கேற்றங்கள், கச்சேரிகள் என்பவற்றில் பயன்படுத்தப்படும் பக்க இசை வாத்தியங்களில் கூட இன்று மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நட்டுவாங்கதாளம் மிருதங்கம், வீணை (வயலின்), புல்லாங்குழல் என்பவற்றைத் தவிர தபேலா, கீபோர்ட், கிளாரினெட் போன்ற வாத்தியங்களும் பயன்படுத்தப்படுகின்றன. சிவன் சித்திரிப்பு ஆடல்களில் உடுக்கும் போர்க் காட்சிகளைத் சித்திரிக்கும் பகுதிகளில் செண்டையும் என, பல வாத்தியக் கருவிகளின் செல்வாக்கை இன்று பரத நாட்டியத்தில் காணக் கூடியதாகவுள்ளது. மேலும் தவில் நாதஸ்வரம், மோர்சிங் போன்றனவும் பயன்படுத்தப்படுகின்றன. இதுபோல இன்னும் பல மாற்றங்களை ஹஸ்தங்கள், பேதங்கள் போன்ற அடிப்படை மரவுகளை மீறாமல் மேற்கொண்டு வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

(தொடரும்)

# யாழ். சமூக செயற்பாட்டு நிலைய பெண்கள் தின விழாவில் இடம்பெற்ற கருத்துக்களம்

யாழ். சமூக செயற்பாட்டு மையம் நடத்திய சர்வதேச பெண்கள் தின விழாவில் சிறப்பு நிகழ்வாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் கருத்துக்களம் இடம் பெற்றது. இதில் எண்மர் கலந்து கொண்டு தத்தம் துறைசார்ந்த பெண்களின் அபிவிருத்தி குறித்துக் கருத்துரைகளை முன் வைத்தனர்.

இலக்கியங்கள் சார்ந்து பெண்மை என்ற பொருளில் கருத்துரைத்த விரிவுரையாளர் கு.பாலஷண்முகன், தமிழ் இலக்கியங்கள் பெண்களை உயர் நிலையில் போற்றியுரைத்துள்ளமையை எடுத்துக்காட்டினார். அத்துடன் பாண்டியன் சபையில் கண்ணகி நீதி கேட்கச் சென்றபோது பாண்டியன் வழங்கிய மரியாதையையும் எடுத்துக்காட்டிச் சங்க காலச் சமூகம் தாய்வழிச் சமூகம் என்பதையும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து யாழ். செயலக மகளிர் அபிவிருத்தி இணைப்பாளர் த.உதயனி கருத்துரைத்தார். இலங்கையில் 54 வீதமானவர்கள் பெண்கள் என்றும், தொழில் அடிப்படையில் 35 வீதமானவர்கள் பெண்கள் என்றும் நாட்டின் வருமானத்தில் பெண்களே முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்றும் கருத்துரைத்தார். எனவே பெண்கள் அபிவிருத்திக்கு இது வாய்ப்பான தருணம் என்று தனது கருத்துக்களை முன்வைத்தார்.

அடுத்து வழக்கறிஞர் ஜொனி மதுரநாயகம் 'சட்டத்துறையும் பெண்களும்' என்ற பொருளில் கருத்துரை வழங்கினார். இன்று நீதிமன்றங்களில் பெரும்பாலான விவாகரத்து வழக்குகள், தாபரிப்பு வழக்குகள் நடைபெறுவதை எடுத்துரைத்தார். பெண்கள் விழிப்பாக இருக்க வேண்டியதன் அவசியத்தையும் கூறினார். நடுவரின் கேள்வி நேரத்தின்போது விடை பகன்ற ஜொனி மதுரநாயகம் காணாமற்போன உறவுகள் தமது போராட்டத்தை சட்டத்துறை சார்ந்தும் முன்னெடுக்க வேண்டும். காணாமற்போனமை குறித்து நீதிமன்றுகளில் வழக்குத் தாக்கல் செய்வது புத்திசாலித்தனமானது என்றார்.

தொடர்ந்து சமூக அடித்தளத்தில் பெண்களின் முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்கள் என்ற பொருளில் செல்வபுரம் கிராம செயற்பாட்டு உறுப்பினர் சுனித்தா கருத்துரை வழங்கினார். சமூகத்தின் அடிமட்ட அலகில் பெண்கள் முக்கியத்துவம் பெறுகின்றமையை எடுத்துரைத்து தமக்கும் தம்மைப்போன்றவர்களுக்கும் சமூக செயற்பாட்டு மையம் உதவும் விதத்தை எடுத்து விளக்கினார்.

அடுத்து சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் கருத்துரை வழங்கினார். 'அரச சார்பற்ற நிறுவனங்கள் பெண்கள் அபிவிருத்தியில் ஆற்றும் பங்கு' என்ற பொருளில் இவரது உரை அமைந்திருந்தது. பெண்களை விழிப்படையச் செய்தல் என்பது ஆண்களுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டுதல் என்பதல்ல. பெண்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வை பெண்களும் ஆண்களும் பெற வேண்டும். இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் தம்மாலான பங்களிப்புக்களை வழங்க வேண்டும் என்றார்.

'ஊடகத்துறையும் பெண்களும்' என்ற பொருளில் கருத்துரை வழங்கிய பிரியதர்ஷினி, ஊடகங்கள் பெண்களுக்கு உரிய மதிப்பை வழங்குவதில்லை என்றார். பெண்களுக்கென குறிப்பாக ஒரு பக்கத்தை ஒதுக்கி விடுகின்றன. சமையல், அழகுக்குறிப்புக்கள் முதலிய அம்சங்களை அவற்றில் இடுகின்றன. இதனால் இத்தகைய வேலைகளே பெண்களுக்குரியவை எனக் கருதும் நிலை ஊக்குவிக்கப்படுகின்றது என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் வே.சிவராஜா 'சமூகமும் பெண்களும்' என்ற பொருளில் கருத்துரை வழங்கினார். சமூகத்துக்குப் பெண் தலைமைத்துவம் தேவை என்று கருத்துரைத்த அவர், இன்று முச்சக்கரவண்டியைப் பெண்கள் ஓட்டுகின்றார்கள் என வியந்து பார்க்கின்றார்கள். ஆனால் எத்தனை சாதனைகள் இம்மண்ணில் பெண்களால் படைக்கப்பட்டது. காலத்தின் கோலத்தால் நத்தை ஓட்டுக்குள் தம்மை ஒடுக்கி வாழும் பெண்கள் சமூகத்திற்கு வழிகாட்ட எழுந்து வரவேண்டும் என்று அழைப்புவிடுத்தார்.

பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆசிரியர் செல்வநாயகி எட்வின்பிள்ளை, கல்வித்துறையும் பெண்களும் என்ற பொருளில் கருத்துரை வழங்கினார். பெண்களை மதிக்கும் சமூகம் உருவாக வேண்டுமானால் கல்வன் பாடசாலை முறைமையாலேயே அது சாத்தியமாகும் என்று தன் கருத்துக்களை முன்வைத்தார்.

நிறைவுரையாற்றிய விரிவுரையாளர் ச.லலீசன் சமயங்கள் பெண்மையைப் போற்றும் நிலையை எடுத்துக் கூறியதோடு ஒவ்வொரு துறை சார்ந்தவர்களுடைய கருத்துக்களையும் தொகுத்துக் கூறினார். பெண்கள் தினம் என்பது ஆண்களுக்கு எதிரான தினம் என்று அர்த்தப்படுத்தப்படக்கூடாது. பெண்களே பெண்களை மதிக்கும் நிலைமையையும் இந்தத்தினம் ஏற்படுத்த வேண்டும்.

சமூகத்தில் பெண்மை போற்றப்படுமாயின் அந்தச்சமூகம் உயர்ச்சியடையும். யாழ். சமூகம் இன்று எதிர்கொள்ளும் விதவைகள் அவலம், பெண்கள் துஷ்பிரயோகம் முதலிய அவலங்களுக்கு உணர்வு ரீதியில் தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றார். அத்துடன் அரசியலில் பெண்கள் ஈடுபட்டு சமூகத்துக்கு வழிகாட்ட முன்வர வேண்டும். நாடாளுமன்றம் சார்ந்த பிரதிநிதித்துவத்தில் வடக்கிலோ, கிழக்கிலோ; மலையகத்திலோ குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவு பெண்கள் பங்கேற்காமை துரதிஷ்டமானதே என்றார். எனவே பெண்கள் சமூகத்துக்குப் பயன்மிக்க வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அதன் வாயிலாக தலைமைத்துவத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.







# வெளியிடப்பட்டது '3 ஆவது கை' குறும்படம்

'மூன்றாவது கை' குறும்பட வெளியீடு கடந்த 27ஆம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலையில் ஆசிரியர் எஸ். பபிராஜ் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் என்.வீ.மகேந்திரன் பிரதம விருந்தினராகவும், ஓய்வு நிலை ஆரம்பக்கல்வி உதவிப்பணிப்பாளர் எஸ்.மகேஷ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு '3ஆவது கை' இறுவட்டை வெளியிட்டு வைத்தனர்.

இந்த நிகழ்வில் குறும்படத் தயாரிப்பாளர் நெடுந்தீவு றமேஷ் மற்றும் அவரது குழுவினர் பாராட்டப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களின் நடனமும், கராத்தே நிகழ்வும் இடம்பெற்றன.

கல்வியே விசேடதேவையுள்ள மாணவர்களின் மூன்றாவது கை என்பதை விளக்கிய குறும்படத்தின் ஒவ்வொருவரது பேச்சின் பொருளையும் மாணவர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் நவீல்ட் பாடசாலை ஆசிரியர்கள் சைகைகளின் மூலம் விளக்கம் அளித்திருந்தனர். (வ–10)

# வெளியிடப்பட்டது 'விபச்சாரி 80 ரூபா' சிறுகதை தொகுப்பு





'விபச்சாரி 80 ரூபா' என்ற சிறுகதை தொகுப்பு வவுனியாவில் சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் அண்மையில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வெளியீடு செய்யப்பட்டது. யாழ் தர்மினி பத்மநாதன் எழுதிய இந்தச் சிறுகதைத் தொகுப்பு, தற்கால சமூக கருத்துகளை உள்ளடக்கியதுடன் சமூகவிழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வெளிவந்துள்ளது. தர்மினியின் இந்த நூல் மூன்றாவது புத்தகம் என்பதும் குறிப்பிடத்தக்கது

இந்த நிகழ்வில் வித்தியரத்னா ந.பார்த்தீபன், உடுவை சி.தில்லை நடராஜா, (முன்னாள் அரசஅதிபர்) சிவ நெறிப் புலவர் சி.ஏ.ராமசுவாமி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (வ–421)

# சாவகச்சேரியில் நடைபெற்ற மகளிர் தின விழா















உலகில் உள்ள அனைத்துப் பெண்களையும் கௌரவிக்கும் வகையில் சர்வதேச மகளிர் தின விழாக்கள் சர்வதேசமெங்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டன. உலகில் வாழும் அனைத்துப் பெண்களின் சுதந்திரத்தை வலியுறுத்தியும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கைவிடக் கோரியும் தமது உரிமைகளை வலியுறுத்தியும் இந்தத் தினத்தை மகளிர் அமைப்புகள் கொண்டாடின.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் காணாமல் போன உறவுகளை விடுவிக்கக் கோரி நாட்டின் பல பாகங்களிலும் தாய்மார்களும் மனைவிமார்களும் பெண்பிள்ளைகளும் தமது உறவுகளைத் தேடி போராட்டங்களை நடத்திவரும் வேளையில். பல்வேறு நிலைமைகளை வெளிப்படுத்தி மகளிர் அமைப்புக்களால் பல இடங்களில் மகளிர் தின விழாக்கள் நடத்தப்பட்டன.

ஓவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு நிலைகளில் மகளிர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டன. மகளிர் அமைப்புக்களால் மருத்துவ பரிசோதனை முகாம்கள், குருதிக் கொடை நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், கவியரங்குகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், சிறப்புச் சொற்பொழிவுகள் என பல தரப்பட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

அந்த வகையில் தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த 17 வருடங்களாக சாவகச்சேரி நகர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் மகளிர் தின விழா நேற்று சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த நிகழ்வையொட்டி 15 தினங்களுக்கு முன்னரே அதற்கான ஆயத்தங்களும் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று அதன் இறுதி வடிவம் பெற்று நிறைவு பெற்றன. இந்தச் சங்கத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தமது வீட்டு நிகழ்வைப்போல மகளிர் தின விழாவை நடத்தி முடித்தமை அவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையை செயல்வடிவமாக காண்பிப்பதாக இருந்தது. 15 தினங்களுக்கு முன்பே இந் நிகழ்வு தொடர்பான போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு மாலை வேளைகளில் அங்கத்தவர்கள் அவர்தம் பிள்ளைகள் என இரு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன.

சங்கத்தின் தலைவி திருமதி மகேஸ்வரி கீர்த்திநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு பிரதேசத்தின் உயர் பதவிகளை வகிக்கும் பெண்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். அதேவேளையில் தமது பிரிவில் கடமையாற்றும் ஆண் உத்தியோகத்தர்களையும் விருந்தினர்களாக அழைக்கத்தவறவில்லை. இதன்பிரகாரம் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலரும், சிறப்பு விருந்தினர்களாக உதவிப் பிரதேச செயலர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகிய பெண்கள் உட்பட மற்றும் பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

மண்டப வாசலில் வைத்து விருந்தினர்கள் மலர்மாலை அணிவித்து மேடைக்கு அழைத்து வரப்பட்டபோது பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்கள் மலர் தூவி வரவேற்றனர். விருந்தினர்களால் மங்கல விளக்கேற்றப்பட்ட பின்னர் நிகழ்வுகள் ஆரம்பமாகின. வரவேற்பரையை திருமதி சி.நாகேஸ்வரி நிகழ்த்த புவேந்தன் நிலையத்தில் பயிலும் சிறார்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

சங்கத் தலைவியின் தலைமையுரையையடுத்து பராமரிப்பு நிலையத்தின் மாணவி லக்ஸாயினி மற்றும் பழைய மாணவிகளான மதுரா, மதிவதனி ஆகியோரின் தனி நடனங்களும் இடம்பெற்றன.

அடுத்து பிரிவில் வதியும் 75 வயதுக்கு மேற்பட்ட திருமதி இராஜரத்தினம் புகனேஸ்வரி, திருமதி கதிர்காமு மாணிக்கம், திருமதி மார்க்கண்டு சாந்தநாயகி, திருமதி சிவப்பிரகாசம் பாக்கியம் ஆகியோருக்கு முதியோர் கௌரவிப்பு இடம்பெற்றது. கடந்த 17 வருடங்களில் சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து சங்க வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய திருமதி லோகேஸ்வரி நவரத்தினம், திருமதி உருத்திராதேவி ஷண்முகநாதன் ஆகியோர் சங்கத்தின் காப்பாளர் திருமதி ருக்குமணி இராஜரத்தினத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

கௌரவிப்பை ஏற்று திருமதி உ.ஷண்முகநாதன் தமதுரையில் பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை காணும் ஒவ்வொரு பருவத்திலும் பெறும் அனுபவங்களைச் சுட்டிக்காட்டி பெண் பிள்ளைகளை சிறுவயது முதல் கட்டிளம் பருவம் வரை நல்லொழுக்கத்தை கற்பித்தும் 20 வயதுக்குப் பின்னர் பெண்ணுக்கு ஏற்படும் நன்மை தீமைகளை நாசூக்காகச் சொல்லி நல்வழிப்படுத்தியும் வளர்க்க வேண்டும் என்றார்.

இதன்பின்னர் சிறப்பு விருந்தினர் உரை நிகழ்த்திய உதவிப் பிரதேச செயலர், பெண்கள் கல்வியினால் பலதுறைகளில் முன்னேறியபோதிலும் - சில நாடுகளில் இன்னமும் பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுவதுடன் பெண்கள் வன்முறைகளுக்கு உட்படுத்தும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. பெண்கள் உரிமைகளை மேம்படுத்த வேண்டுமாயின், ஒவ்வொரு நாட்டிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோரும் அதற்கு உதவுவோரையும் தண்டிக்கக்கூடிய கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்படல் வேண்டும் என்று உரையாற்றினார்.

அடுத்து மகளிர் பிரிவைச் சேர்ந்த யுவதிகளால் பெண் உரிமை என்னும் நாடகமும் செல்வி ம.தர்சினி, திருமதி சி.இராஜேஸ்வரி ஆகியோரின் கவிதை திருமதி வினோதனின் தாலாட்டுப் பாட்டு ஆகியவையும் இடம்பெற்றன. நிகழ்வில் ஆண் ஒருவருக்குக் கொடுத்த சந்தர்ப்பத்தை ஆ.புலேந்திரன் என்பவர் முறையாகப் பயன்படுத்தி மிருதங்கத்துடன் இசைத்த பக்திப் பாடலுக்கு அமர்ந்திருந்த பெண்கள் பிற்பாட்டுப் பாடும் அளவுக்கு மிக அருமையாக இருந்தது.

இதனையடுத்து மகளிர் தின நிகழ்வையொட்டி சங்க அங்கத்தவர்கள், அவர்தம் பெண் பிள்ளைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கும் போட்டிகளுக்கு நடுவர்களாகக் கடமையாற்றியோருக்கும் நிகழ்விற்கு பல்வேறு வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்துப் பெண்களுக்கும் சங்கத்தின் சார்பில் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையால் சங்கத்தைச் சேர்ந்த 10 அங்கத்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் சுயதொழில் கடனாக வழங்கப்பட்டது. ஏற்கனவே சங்க அங்கத்தவர்கள் 87 பேருக்கு சுழற்சி முறையில் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் கடன் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனை உற்று நோக்கும்போது நீண்ட காலமாக இந்தச் சங்கம் சிறப்பாக இயங்கி வருவது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் இவ்வாறான நிகழ்வினை சிறப்பாக நடத்திய சங்க அங்கத்தவர்களின் பங்களிப்பு அதனை உணர வைக்கிறது.

அதனையடுத்து விருந்தினர்கள் உரை இடம்பெற்ற வேளையில் உரையாற்றிய அனைவரும் பெண்கள் மேம்பாடு தொடர்பாகவும் எதிர்காலத்தில் மகளிர் அமைப்புகளின் வளர்ச்சிக்கு உதவும் வழிவகைகள் பற்றியும் எடுத்துக் கூறினர்.